
AR
52

தேவிகாபுரம்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600008
2017 - திருவள்ளுவர் ஆண்டு 2048

தேவிகாபுரம்

தமிழ்நாடு அரசு புதுமை முயற்சிகள் திட்டம்
TANII 2017~ 2018~ஆம் ஆண்டு
நிதியின் கீழ் இந்நூல் வெளியிடப்பட்டது

தேவிகாபுரம்

ஆசிரியர்
மி. ஜ. இளங்கோவன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,
ஆணையர் (மு.கூ.பொ.)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2017 - திருவள்ளுவர் ஆண்டு 2048

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**DEVIKAPURAM**
General Editor	:	**Dr. D. JEGANNATHAN, I.A.S.,**
Author	:	**M. J. Elangovan**
Copy Right	:	Tamilnadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	298
Year	:	2018
Type Point	:	12
No. of Pages	:	120
No. of Copies	:	1000
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	Thirumullaivoil Stationery Printing Book Binding, Aluminium & Leather Manufacturing Industrial Co-operative Society Ltd. No. 40 Anderson St. Che.-600 014
Publisher	:	State Dept. Of Archaeology, Tamil Valarchi Valagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 40/-

உள்ளடக்கம்

முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,
ஆணையர் (மு.கூ.பொ.,)

தொல்லியல் துறை,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, செப்புத்திருமேனி ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற எட்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியலில் பயிற்சி வழங்கிவருகிறது. இப்பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 234 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்கள் தங்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து, அக்கோயில் அமைந்துள்ள ஊரைப் பற்றியும் அங்குள்ள பிற முக்கியமான கோயில்களைக் குறித்தும் விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில், இதுவரை 48 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 1995-96-ஆம் ஆண்டு பயின்ற திரு. மி. ஜ. இளங்கோவன் அவர்கள் எழுதிய **தேவிகாபுரம்** என்னும் ஆய்வேடு தற்போது 49-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூல்

கனககிரீஸ்வரர் கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை, கல்வெட்டுகள் ஆகியவற்றைப் பற்றி விவரிக்கின்றன. இக்கோயில் கல்வெட்டுகளை ஆய்வு செய்து விஜயநகர அரசர்களின் அரசியல் வரலாறு, அக்கால சமுதாய மற்றும் பொருளாதாரச் செய்திகள், பண்பாடு மற்றும் சமயம் முதலான செய்திகள் விரிவாக இந்நூலில் கூறப்படுகிறது.

தேவிகாபுரம் நூலினைப் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை தொல்லியல் அலுவலர் திரு. மி. ஜ. இளங்கோவன் அவர்களுக்கு எனது உளங்கனிந்த பாராட்டுகள்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் தட்டச்சு (DTP) மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

இந்நூலினை வெளிக்கொணர 2017-2018 -ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் (TANII) கீழ் நிதியுதவி நல்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்கள், தொல்லியல் மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறேன்.

ஆணையர் (மு.கூ.பொ.)

தேவிகாபுரம்

அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டத்தில் தேவிகாபுரம் என்னும் சீர்மிகு ஊர் அமைந்துள்ளது.

தமிழகத்தின் தலைநகரான சென்னையிலிருந்து 100 கி.மீ. தொலைவிலும், மாவட்டத் தலைநகராம் திருவண்ணாமலையில் இருந்து 30 கி.மீ. தொலைவிலும், தாலுகாவின் தலைமையிடமான ஆரணியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் போளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 14 கி.மீ. தொலைவிலும், தேவிகாபுரம் அமைந்துள்ளது.

இயற்கை

குறிஞ்சி, முல்லை, மருதம் நிலமடங்கிய பகுதியாக தேவிகாபுரம் விளங்குகிறது. மேலும் கல்வெட்டுகளில் சேயாற்றின் தென்பகுதியில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தெருக்கள்

தேவிகாபுரம் கிராமத்தை ஒன்பது பகுதிகளாக பிரித்து உள்ளனர். தெருக்களின் பெயர்கள் ஒவ்வொன்றும் பண்டைய கலாச்சார மரபுபடி பெயர் அமைந்துள்ளது. மேலும், தெருக்கள் அகலமாகவும், நீளமாகவும் உள்ளன. இங்குள்ள தெருக்களின் பெயர்கள் மாடவீதி, மஞ்சன வீதி, தொழில் புரிபவர் பெயர்களில் அமைந்துள்ளன. தேவிகாபுரம் தன்னகத்தே பல பண்பாட்டு புதையல்களை புதைத்துக் கொண்டுள்ளது.

ஊரும் பேரும்

இவ்வூர், வரலாற்று ஏடுகளாம் கல்வெட்டுகளில் **தேவக்காபுரம்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் மருவி தற்பொழுது தேவிகாபுரம் என அழைக்கப்படுகிறது.

திருத்தல புராணத்திலும் இதர வரலாற்று நூல்களிலும் இக்கிராமம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. கம்சனின் சகோதரி தேவகி தேவி தன் வயிற்றில் பிறக்கும் குழந்தை கண்ணனாக இருக்க வேண்டும் என ஈசனை நோக்கி தவமிருந்து அவர் அருளால் கண்ணனைப் பெற்றாள் என்பதற்காக தேவகிபுரம் எனவும், தேவி மலையின்கீழ் குடி கொண்டுள்ளதால் தேவகீழ்புரம் என்றும், கனககிரி மலை உள்ளதால் 'கனகாசலம்' 'கனகாத்தி' என்றும் ஸ்ரீமன் நாராயணன் குடி கொண்டுள்ளதால் நாரயணவனம் என்றும் அழைக்கப்பட்டதாக சென்ஸஸ் ஆஃப் இந்தியா (1961) புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான கல்வெட்டு ஆதாரம் ஏதுமில்லை.

சமுதாயச் செய்திகள்

சமுதாயம் என்பது மக்கள் புடைசூழ இருந்து அவ்வூரின் மேன்மைக்காக பாடுபடும் முதுகெலும்பாகும். எனவே, இங்கு தேவியின் திருநகராம் தேவிகாபுரத்து மக்கள் கல்வெட்டுகளில் நாயகர்களாக விளங்கும் கைக்கோளர்கள் என அறிகிறோம். இங்குள்ள மக்கள் தமிழ், தெலுங்கு மொழிகள் மட்டுமே பேசுகின்றனர். மக்கள் தங்களை தொழிலின் அடிப்படையிலும், பழக்கவழக்கங்கள் காரணமாகவும் பல்வேறு சாதிகளாக பிரிந்து வாழ்ந்தனர்.

சமுதாயத்தில் அவரவர்கள் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் தங்களது இல்லங்களில் விழாக்கள், திருமணங்கள் மற்றும் இதர காரியங்கள் செய்து வருகின்றனர்.

ஏரிகள்

"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல்லுயரக் குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்" என்ற மொழிக்கேற்ப தமிழகத்தின் முதுகெலும்பு தொழிலான விவசாயம் இங்கு செய்யப்படுகிறது. இந்நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய ஐந்து ஏரிகள் இருக்கின்றன. அவை பின்வருமாறு

பெரிய ஏரி 9.130 ஹெக்டேர் பரப்பளவ, சித்தேரி 6.870 ஹெக்டேர் பரப்பளவு தாமரை ஏரி 7.425 ஹெக்டேர் பரப்பளவு, கைலாசநாதர் ஏரி 23.775 ஹெக்டேர் பரப்பளவு, முரட்டையன் தாங்கல் 3.635 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்த ஏரிகளின் மூலம் வாய்க்கால் வழியாக நீர்ப்பாசனம் செய்து விவசாயம் செய்து வருகின்றனர்.

தீர்த்தங்கள்

தேவிகாபுரம் நகரில் பல்வேறு தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குள் பிரம்ம தீர்த்தமும், மலையடிவாரத்தில் பெரியப்பன் குளம் என்கிற நவக்கிரக தீர்த்தமும், திருத்தலத்தின் தென்கிழக்கு பாகத்தின் மத்தியில் நீராழி மண்டபத்துடன் கூடிய அக்கினி தீர்த்தமும் (இதற்கு கற்டாங்குளம் என்ற பெயரும்) உள்ளது. அக்கினி தீர்த்தத்தில் அமைந்துள்ள குன்றின் மேல் முருகர் கோயில் உள்ளது. வடமேற்கு பாகத்தில் தேவரடியார் தீர்த்தம், சீயன் குளம் என்னும் செய்யாங்குளம் ஆகியவையும் உள்ளன.

மண்டபங்கள்

பத்மாவதி மண்டபம்

பத்மாவதி என்கிற தேவரடியார் நினைவாக இம்மண்டபம் நிறுவியதாக தெரிகிறது. உயரமான மேடை மீது இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மேடையின் உயரம் சுமார் 75 செ.மீ ஆகும். மண்டபத்தின் உட்புறச் சுவரில் பெரியநாயகி அம்மன் வெளிச்சுவரில் உள்ள விநாயகர் போன்று சற்று உள்ளிருந்து பிதுங்கிய நிலையில்

சாலை போன்ற வடிவில் சிற்றாலயம் அமைத்து அதில் விநாயகர் சிலை வைத்து வழிபடுகிறார்கள். எதிரில் மூஷிகம் மற்றும் பலிபீடம் உள்ளன. இம்மண்டபம் புதுத்தெருவில் உள்ளது. மேடையில் நான்கு தூண்களும், கீழ் பகுதியில் நான்கு தூண்களும் உள்ளன. இத்தூண்களின் அமைப்பு கீழிருந்து மேலாக நான்கு பட்டைகள், எட்டு பட்டைகள், நான்கு பட்டைகள், எட்டு பட்டைகள் என்ற அமைப்பில் உள்ளன.

சீன மண்டபம்

தென் மாடவீதியும் ரோட்டுத் தெருவும் சந்திக்கும் இடத்தில் இம்மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் கூரைப்பகுதியில் மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கெங்கனா மண்டபம்

இம்மண்டபம் ஆசார்யசீலர் வாழும் வீட்டிற்கு பின்புறம் உள்ளது. இம்மண்டபம் உயரமான மேடை மீது அமைக்கப்பட்டுள்ளது. இங்கும் மேடையில் நான்கு தூண்களும் கீழ்பகுதியில் நான்கு தூண்களும் உள்ளன. இங்கு வாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வேடர்பரி மண்டபம்

போளூர் செல்லும் சாலையில் பழமையான மண்டபம் ஒன்றுள்ளது. இம்மண்டபமே ‘வேடர்பரி மண்டபம்’ என்று அழைக்கப்படுகிறது. இம்மண்டபம் முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. நான்கு பகுதிகளிலும் சுவர் எழுப்பி நுழைவாயில் அமைத்துள்ளனர். சுவரிலிருந்து கூரைப்பகுதியானது சரிவான அமைப்பில் உள்ளது. சுமார் 7 அடி உயரமுள்ள சுவர்மீது இக்கூரைப்பகுதி அமைந்துள்ளது. விஜயநகர கால கட்டட அமைப்பைக் கொண்டுள்ளது.

வரலாற்றில் தேவிகாபுரம்

கல்வெட்டு ஆண்டறிக்கையை மட்டும் வைத்து வரலாற்றைக் கணிப்போமானால் விஜயநகரர் காலத்திலிருந்து ‘தேவக்காபுரம்’ என்று இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது. ஆனால், சற்று பின்னோக்கி பார்ப்போமானால், இவ்வூரானது முதலில் வடஆற்காடு மாவட்டத்தில் அமைந்திருந்தது. பின்னர் 1994-ம் ஆண்டு இம்மாவட்டத்தை பிரித்த பொழுது திருவண்ணாமலை மாவட்டத்தில் இவ்வூர் இடம்பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் வடஆற்காடு மாவட்டப் பகுதியினை குறும்பர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். சோழர் ஆட்சியின் கீழும், அதனையடுத்து சோழர்களின் ஆட்சியின் கீழ் இருந்த சம்புவராயர்களின் கீழும், இவ்வூர் உட்பட்டிருந்தது. குமாரகம்பணன் படையெடுப்பிற்கு பின் இப்பகுதி விஜயநகர ஆட்சியின்கீழ் இருந்துள்ளது.

விஜயநகர காலத்திற்கு பின்னர் ஆரணி ஜாகீர்தார்களின் ஆளுகையில் இருந்தது. 1889-ம் ஆண்டு அபிநவபூர்ண ஸ்ரீநிவாஸராவ் சாஹேப் அவர்களால் இக்கோயிலுக்கு குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டது.

கோயில் காலம்

கோயில் கட்டப்பட்ட காலம், வளர்ச்சி பெற்றுள்ள காலங்களை கணிப்பதற்கு கல்வெட்டுகள் ஆதாரங்களாக உள்ளன. ஆனால், இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தும் விஜயநகரர் கால கல்வெட்டுகளாக மட்டுமே உள்ளன. இவற்றைக் கொண்டு கோயிலின் காலத்தை கணிக்க இங்குள்ள கருவறையில் உள்ள கல்வெட்டுகளை ஒப்புநோக்கும்போது சகம் 1399 என்று குறிப்பிட்டுள்ள கல்வெட்டே காலத்தால் முந்தியது. இதற்கு சரியான வரலாற்று ஆண்டு கி.பி. 1477 ஆகும். எனவே, தற்போதுள்ள கோயில் 500 வருடங்கள் பழமையானது எனலாம்.

1961-ம் ஆண்டு வெளியிட்ட 'Census of India - 1961' என்ற நூலில் இக்கோயிலின் காலம் 2000 ஆண்டு முற்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது. பல்லவர்கள் காலத்தியது என்றும் குறிப்பு உள்ளது. இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதற்கான கல்வெட்டுகள் ஏதுமில்லை.

இக்கருத்துப்படி நாம் எடுத்துக்கொள்வோமானால் முதலில் சிறிய கருவறை மண்டபத்துடன் காணப்பட்டிருக்கலாம். புனரமைப்பு செய்ய நினைத்து இவர்கள் கோயில் பிரகாரங்களை விரிவுபடுத்தி கட்டியிருக்கலாம்.

வரலாற்றுப் போக்கில் காண்போமானால் விஜயநகர அரசர்கள் தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கு மண்டபங்களையும், கோபுங்களையும் புதிதாக ஏற்படுத்தினர்.

சோழர்கள், பாண்டியர்கள் காலத்தில் கூட கொடைகளை கோயில் சுவர்களில் வெட்டியிருப்பர். ஆனால், பிற்காலத்தில் அக்கோயில் பழுதடைந்துவிடும். எனவே அங்குள்ள கற்களை பயன்படுத்தி வேறு இடங்களில் கோயில்களை கட்டியிருப்பார்கள். கல்வெட்டு அழிந்துவிட்டிருக்கும். இதைப் போல இக்கோயில் அமைத்தவனுடைய கல்வெட்டுகள் அழிந்திருக்கலாம்.

இக்கோயிலின் கட்டட அமைப்புகளை வைத்து பார்க்க முயன்றால் கோயில் கருவறை அமைப்பில் அதிட்டான அமைப்பு அலங்காரம் ஏதுமின்றி எளிமையாக காட்சி அளிக்கிறது.

பெரியநாயகி அம்மன் கோயில்

பெரியநாயகி அம்மன் கோயில் நகரின் நடுவே ஏழு நிலைக்கோபுரத்துடன் அமைந்துள்ளது. இக்கோபுரம் கிழக்கு மேற்காக 500 அடியும், வடக்கு தெற்காக 247 அடி அளவிலும், 30 அடி உயரமும் கொண்டது. 4 ½ அடி அகலமுள்ள கருங்கல் மதிலும், அதில் குதிரை, வராகம், யானை ஆகிய உருவங்கள் மூன்று வரிசைகளில்

சித்தரிக்கப் பெற்று காண்பவர்கள் ரசித்து பெருமிதங்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இக்கோயிலின் உள்ளே முதலில் பலிபீடம், கொடிமரம், நந்தி இவைகளுடன் வடபுறம் கல்யாண மண்டபமும், தென்புறம் திருக்குளமும் காணப்படுகின்றன. அடுத்து செல்வவிநாயகர் கோயிலும், ஆறு திருமுகமும் பன்னிரண்டு திருக்கரங்களையும் கொண்ட ஸ்ரீசுப்ரமண்யர் கோயிலும் அமைந்துள்ளன. 36 தூண்களோடு கூடிய மகாமண்டபமும் கோபுரமுங்கொண்டு 20 அடி உயரமுடைய கருங்கல் மதிற்சுவருடன் அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது.

அதனை அடுத்து சபாமண்டபம் உள்ளது. சபாமண்டபத்தில் சபாநாயகர் (நடராஜர்) சந்நிதியும் சைவசமயாசாரியர்களான திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். அடுத்து உற்சவர் சந்நிதியின் முன்புறம் விநாயர் காட்சியளிக்கிறார். உட்புறம் உற்சவமூர்த்திகள் உள்ளனர். அர்த்த மண்டபத்தின் முன் துவாரபாலகிகள் காணப்படுகின்றனர். கருவறையில் பெரியநாயகி புன்முறுவல் பூத்து பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

கோயிலின் மதிற்சுவரில் வடக்கு, தெற்கு, பகுதியிலும் வாயில்கள் இருந்துள்ளன. தற்பொழுது மூடப்பட்டு உள்ளது.. சுவரில் விஜயநகரப் பெண்கள் தேர் இழுத்துச் செல்வது போன்ற காட்சி மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது.

வெளிப்புற மதிற்சுவர்

தமிழகத்தின் சிறப்பான கட்டட அமைப்புகளில் ஓங்கி உயர்ந்த மதில்களும் ஒன்றாகும். தேவிகாபுரத்தில் பெரியநாயகி அம்மன் கோயிலின் மதிற்சுவரில் மூன்று வரிசைகளாகப் புடைப்பு சிற்பங்களை செதுக்கியுள்ளனர். அவை முறையே குதிரை, வராகம், யானை என்றுள்ளன. இச்சிற்பங்களில் விஜயநகர காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பத்தின் காட்சிகளை நாம் தெரிந்துகொள்ளலாம். குதிரைகள் வரிசையாக செல்வது போலவும், குதிரையின் கடிவாளத்தை ஆடவன் பிடித்து செல்வது போலவும் செதுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது வரிசையில் யானைகள் ஒன்றை ஒன்று பின்தொடர்வது போலவும், யானை ஒன்றோடொன்று சண்டையிடுவது போன்றும், யானையைப் பிடித்து செல்வது போலவும், மான்களை யானை விரட்டுவது போலவும், யானை மரக்கிளையை முறிப்பது போன்றும், யானை எதிர்த்து போரிடும் வீரன், யானையும் சிறுத்தையும் போரிடுவது போன்றும் செதுக்கியுள்ளனர். மேலும் ஒருடல் இருதலை கொண்ட யானையை சிறுத்தையை எதிர்த்து நிற்கும் முயல் போன்றவற்றை செதுக்கியுள்ளனர்.

கோபுரங்கள்

தமிழகத்தின் கட்டடக்கலை வரலாற்றில் கோபுரங்கள் முக்கிய இடம் வகிக்கிறது. தமிழக மக்களுக்கு கோயில் என்றவுடன் கோபுரங்களை தலைநிமிர்ந்து பார்த்தபிறகு கோயிலுக்கு செல்கிறார்கள்.

தமிழக வரலாற்றில் கோபுரங்களை அமைக்கும் பணியினை சிறிய அளவாக பல்லவர்கள் ஆரம்பித்தனர். பிறகு சோழர், பாண்டியர் என்று வளர்ச்சியடைந்து விஜயநகர காலத்தில் வானுயர்ந்து ஓங்கி நிற்கும் கோபுரங்களை அமைத்துள்ளனர்.

'கோ' என்ற சொல் இறைவன், அரசனை மட்டுமே குறிக்கும். 'புரம்' என்றால் மதில் (அ) கோட்டை என்று பொருள். தமிழக மக்கள் திருக்கோயில் அமைத்து அதற்கு திருமதில் கட்டி, திருமதிலில் நுழைவாயிலில் கோபுரங்களை அமைத்தனர். 'கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்' ஆகவே, கோயிலுக்கு செல்லவில்லை என்றாலும் கோபுரத்தை கண்டு மகிழ்கின்றனர். தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும் கோபுரம் அமைத்தனர். இதற்கு அரசகோபுரம் (அ) இராஜகோபுரம் என்று அழைப்பர்.

இராஜகோபுரம்

பெரியநாயகி அம்மன் கோயிலின் இராஜகோபுரம் ஸ்தூலலிங்கம் என்று அழைக்கப்படுகிறது. உச்சியில் உள்ள கலசங்களை ஷோடசபந்த முறைப்படி அமைத்துள்ளனர்.

அதிட்டானத்திலிருந்து கூரைப்பகுதிவரை கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி சுமார் 15 மீட்டர் அகலமும் 23 மீட்டர் நீளமும் 15 மீட்டர் உயரத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது.

கோபுரம் அமைப்பானது கீழிருந்து மேலே செல்லச்செல்ல குறுகி நெடிதுயர்ந்து காணப்படுகிறது. ஏழு நிலைகளை உடையது. ஒவ்வொரு நிலையும் கர்ணகூடு, பஞ்சரம், சாலை, என மாறிமாறி காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையிலும் சுதையாலான நிறைய சிற்பங்கள் உள்ளன.

கோபுரத்தின் அதிட்டான பகுதி உபானம், உபபீடம், பத்ம ஜகதி, கண்டம், கம்பு, பட்டிகை, வர்கபேதம் காட்டிய குமுதம், பட்டிகை, கண்டம், மகாபட்டிகை, கபோதம் என இரு நிலைகளாக காட்சியளிக்கிறது. மகாபட்டிகையில் சாலை போன்ற வடிவிலுள்ள தேவகோட்டங்கள், முதலாவது நிலையிலும், இரண்டாவது நிலையில் கும்ப பஞ்சரங்கள், தேவகோட்டங்கள் அழகு செய்கின்றன. கூரைப்பகுதியில் கர்ணகூடுகள் அணி செய்கின்றன. கூரையின் உட்பகுதியில் மரச்சட்டங்கள் கோர்த்தவாறு அதில் ஆணி அடித்தவாறு மிக நேர்த்தியாக காட்டப்பட்டுள்ளது. கோபுர உச்சியில் ஒன்பது கலசங்கள் உள்ளன.

கோபுரத்தின் வெளிப்புறத்தில் நான்கு புறமும் சிறப்பான விஜயநகர கலைப்பாணி மிளிர்ந்து மனதை கவர்ந்திழுக்கிறது. கோபுரத்தின் வாயிலில் இரண்டு பெரிய படிக்கட்டுகளை அமைத்து மூன்று பகுதிகளாக பிரித்து உள்ளனர். இருபுறமும் வாயில் நிலைகளில் பின்னிய கால்களுடன் நிற்கும் கொடிப்பெண்களின் அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அப்பெண்ணின் கைகளில் பிடித்துள்ள கொடிக்கருக்குகள் மேலே வளைந்து செல்கிறது. அந்த வளைவுகளின் இடையில் புராணக் கடவுளின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளது சிறப்பானது.

கோபுரத்தின் வாயில் சுமார் 4 மீட்டர் அகலமும் 7 மீட்டர் உயரமும் கொண்டுள்ளது. பெரிய மரக்கதவுகள் உள்ளன. இக்கதவுகள் காலத்தால் பழமையானதாக காணப்படுகிறது.

கிளி கோபுரம்

முன் மண்டபத்தை கடந்து சென்றால் இரண்டாவது கோபுரவாயிலை அடையலாம். அதிட்டானப் பகுதியை இரு நிலைகளாக பிரித்து உள்ளனர். இதனின் அதிட்டானப் பகுதி உபானம், பத்மஜகதி, கம்பு, கண்டம், மகாபட்டிகை, கபோதம் என்றும்; இரண்டாவது நிலையில் உபானம், அலோபத்மம் ஜகதி, கம்பு, கண்டம், எண் பட்டை குமுதம், கபோதம், பட்டிகை, இடைக்கட்டு, நான்கு பட்டை, நாகபந்தம், முப்பட்டைதூண், இடைக்கட்டு, கலசம் மாலஸ்தானம், பூசணி, பத்மம், பலகை, புஷ்பபோதிகை, கபோதம் என்ற நிலையில் உள்ளது. ஐந்து நிலைகளைக் கொண்ட கோபுரத்தின் மேல் ஏழு கலசங்கள் உள்ளன. இதன் வாயிலினை கொடிப்பெண்கள் அலங்கரிக்கின்றனர்.

கனககிரி இராஜகோபுரம்

இக்கோயிலின் ராஜகோபுரம் சாதாரண அதிட்டான அமைப்பினைக் கொண்டது. இதன் அதிட்டான பகுதியானது உபானம், கம்பு, கண்டம், கம்பு, வாஜனம், கம்பு என்ற அமைப்பில் உள்ளது. கோபுர நுழைவாயிலின் இருபுறமும் தேவகோட்டங்கள் அலங்கரிக்கின்றன. மேலே கபோதம் பகுதியில் சிம்மகீர்த்தி முகங்கள், இதன் மேல் ஐந்து நிலைகள், கலசங்கள் சிதைந்துள்ளன. புறச்சுவரில் தேவகோட்டத்தின் உட்புறசுவரில் ஆரணி ஜாகீர் கல்வெட்டு மட்டும் உள்ளது.

பெரியநாயகி அம்மன் கோயில் ராஜகோபுரத்தின் சுவர் பகுதியில் நந்திதேவர், இரண்யனை வதம் செய்யும் நரசிம்மமூர்த்தி, பைரவர், திருமால், விஜயநகர காலத்து பெண்கள், காளம் ஊதும் பெண் போன்ற சிற்பங்கள் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன.

விநாயகர் சந்நிதி

இராஜகோபுர திருச்சுற்றின் தெற்கு பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு இச்சந்நிதி உள்ளது. கருவறை இரு தூண்களைக் கொண்ட மண்டபத்துடன் காணப்படுகிறது. இந்த சிற்றாலயத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் படிகள் அமைத்துள்ளனர். ஆலயத்தின் நீளம் 7 மீ. அகலம் 4 மீ. அளவுடன் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறை

கருவறையானது சதுர அமைப்பினைக் கொண்டுள்ளது. கருவறையின் நடுவில் விநாயகர் வீற்றிருக்கிறார். கருவறையின் விமானம் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதிட்டானத்தில் உபானம், ஜகதி, கண்டம், மகாபட்டிகை அமைப்பும் சுவர் பகுதியில் பத்மவரி, பட்டிகை, நாகபந்தம், முப்பட்டைத் தூண், மணிமாலை, கலசம், இடைக்கட்டு, பத்மம் பூசணி, பலகை போதிகை என்ற அமைப்புடன் உள்ளது. கருவறையின் புறச்சுவர் பகுதியில் தேவகோட்டங்கள் அலங்கரிக்கின்றன. தேவகோட்டங்களில் இறை உருவங்கள் ஏதும் இல்லை. கூரைப் பகுதியில் கர்ணகூடுகளுடன் கூடிய கபோதப் பகுதி அலங்கரிக்கின்றன.

விமானம்

விமானமானது ஒரு தள அமைப்புடன் வேசர சிகரமாக கட்டப்பட்டுள்ளது கலசம் உள்ளது. தளத்தில் கர்ணகூடு, பஞ்சரம், சாலை என மாறிமாறி உள்ளது.

கட்டடக் கலை

கருவறை

பெரியநாயகி அம்மன் கருவறை சதுரவடிவினைக் கொண்டுள்ளது. கருவறையின் நீளம் 2 மீ. 33 செ.மீ., அகலம் 2 மீ 9 செ.மீ., உயரம் 2 மீ. 37 செ.மீ அளவுடையது. கருவறையின் வாயில் சாதாரண அமைப்புடன் காணப்படுகிறது. கருவறையின் நடுவில் நின்ற நிலையில் மேலிரு கரங்களில் அங்குசம், பாசம் ஏந்தியும், கீழிரு கைகள் அபய, வரத முத்திரையுடனும் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு சாந்தசொரூபினியாக புன்முறுவலுடன் காட்சியளித்து அருள்மழை பொழிகிறாள்.

கல்வெட்டுகளில் இறைவி ‘பெரிய நாச்சியார்’, ‘பெரியநாயகி’ என்றழைக்கப்பட்டுள்ளாள். பெரிய நாயகியார் தேவியின் புரமாகிய இக்கிராமத்தை காத்து நிற்கிறாள்.

விமானம்

பெரிய நாயகி அம்மன் கோயிலின் விமானம் ஆறு பகுதிகளைக் கொண்ட அமைப்பாக விளங்குகிறது. அவை முறையே அதிட்டானம் (பீடம்), சுவர்(கால்), பிரஸ்தரம்(கூரை), கிரீவம் (கழுத்து), சிகரம்(தலை), ஸ்தூபி(குடம்) என்பனவாகும். ஒவ்வொரு பகுதிகளையும் அவற்றில் கட்டப்பட்டுள்ள கட்டட நுணுக்கங்களைப் பற்றி விரிவாக காணலாம்.

அதிட்டானம்

இக்கோயிலின் அதிட்டானம் என்கிற பகுதியில் எவ்விதமான அலங்காரமும் இன்றி சாதாரண சுவர் போன்ற அமைப்பில் கட்டியிருக்கிறார்கள். இக்கட்டட அமைப்பை நோக்கும் பொழுது கோயில் முதன்முதலாக கட்ட ஆரம்பித்த நிலையில் எவ்வாறு உள்ளதோ அதை ஒத்து உள்ளது. உபானம் அதன் மேல் சுவர் போன்று மட்டும் உள்ளது.

சுவர்

கருவறையின் சுவர் பகுதியில் தேவகோட்ட மாடங்களில் எவ்விதமான இறை உருவங்களும் வைக்கப்படவில்லை. அதற்கு மாறாக தேவகோட்டத்தின் மேல் பகுதியை அலங்கரிக்கும் மகரதோரணத்தின் வட்டமான இடைப்பகுதியில் கீர்த்திமுகத்தின் கீழ் புடைப்புச் சிற்பங்களாக சிறிதுசிறிது உருவமாக செதுக்கி உள்ளனர். தெற்கு திசையில் விநாயகர் மற்றும் தென்திசை கடவுளான ஆலமர் செல்வர் தக்ஷிணாமூர்த்தியும், மேற்கே லிங்கோத்பவரும், வடக்கு திசையில் பிரம்மா மற்றும் துர்கை ஆகியோரின் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. அர்த்தமண்டப தேவகோட்டத்திலும் தெற்கில் விஜயநகர சிற்பங்களில் சிறப்பான சிவலிங்கத்திற்கு பால் சுரக்கும் பசுவும், வடக்கில் சங்கு ஊதும் பூதகணமும் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தரம்

சுவர் பகுதியின் மேல் பிரஸ்தரம் என்ற கூரைப்பகுதி உள்ளது. இக்கூரைப்பகுதியானது, கருவறையினை மூடும் அமைப்பாக உள்ளது. கூரைப் பகுதியில் உள்ள கபோத அமைப்பில் சிம்மமுகங்கள் ஆங்காங்கே அலங்கரிக்கின்றன.

விமானம்

கருவறையின் பிரஸ்தரப் பகுதியின் மேல் கட்டப்படும் கட்டட அமைப்பு விமானம் எனப்படும். விமானப் பகுதியில் கிரீவம், சிகரம், ஸ்தூபி என்ற மூன்று பகுதிகள் உள்ளன. விமானம் வட்ட வடிவில் வேசர சிகர அமைப்புடன் காணப்படுகிறது. சிகரம் பகுதியில் கர்ணகூடு, சாலை என்று மாறிமாறி அமைந்துள்ளது. கிரீவப்பகுதியின் தளத்தில் நான்கு புறமும் நந்திகள் உள்ளன. அம்மன் கோயிலின் மேல் நந்தி வீற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. விமானத்திலுள்ள சுதைச் சிற்பங்கள் சிதைந்துள்ளன.

கோமுகி

கோயில் கருவறையின் வடக்கு சுவர் பகுதியில் அபிஷேக நீர் வெளிவருகின்ற வகையில் கோமுகி அமைக்கப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபம்

பெரியநாயகி அம்மன் கோயிலின் கருவறைக்கு அடுத்துள்ள அர்த்தமண்டபம் நீள்சதுர அமைப்பு உடையது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்கள் விஜயநகர கால அமைப்புடைய தூண்கள் ஆகும். இத்தூண்கள் கீழிருந்து மேலாக நான்கு பட்டை அதன் மேல் பூ முனையுடன் கூடிய போதிகையோடு காட்சி அளிக்கிறது. அர்த்த மண்டப வடபகுதியில் மேற்கு, கிழக்கு பகுதியில் இரு அறைகளும் நடுவில் உற்சவர் வைக்கும் மேடையும் உள்ளது.

சண்டிகேஸ்வரி சந்நிதி

உயரமான மேடை போன்று அமைப்புடைய சண்டிகேஸ்வரி சந்நதி, கருவறை திருச்சுற்றின் வடக்கு பகுதியில் உள்ளது. சிறிய மண்டபத்தில் வைத்து வழிபாடு நடத்துகிறார்கள். நான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்கள் கீழ் இருந்து மேலாக நான்கு பட்டை, எட்டு பட்டை, நான்கு பட்டை அமைப்புடன் காணப்படுகிறது.

திருச்சுற்று

பெரியநாயகி அம்மன் கோயிலை வலம் வருவதற்காக திருச்சுற்றுப் பாதை நீண்டு அகன்ற அமைப்பு உடையதாக இருக்கிறது. திருச்சுற்றின் அகலம் 5 அடி ஆகும். உயரம் சுமார் 7 அடி ஆகும்.

மகாமண்டபம்

கொடிமரம், நந்தி மண்டபத்தை கடந்து சென்றவுடன் நமக்கு மகாமண்டபம் காட்சி தருகிறது. இம்மண்டபத்தில் 6X6 என்ற வரிசையில் 36 தூண்கள் உள்ளது. இம்மண்டபம் சதுரமான அமைப்பு உடையது. இம்மண்டப அடிப்பகுதி பட்டிகையில் சிறுசிறு சிற்பங்கள் புடைப்பு சிற்பங்களாக கடவுளர், மிருகம், பூத கணங்களின் உருவங்கள் ஆகியவை செதுக்கப்பட்டு உள்ளன. மண்டபத்தின் கூரைப் பகுதியின் கபோதத்தில் சிம்ம முகங்கள் அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தில் உள்ள தூண்களின் அமைப்பு கீழிருந்து மேலாக நீள்சதுரப்பட்டையும் அதன் மேல் நான்கு புறமும் நாகபந்தங்களும், பதினாறு பட்டைகள் கட்டுபந்தத்துடனும், சதுரமான நான்கு பட்டைகள், பதினாறு

பட்டைகளும், கட்டுபந்தத்துடன், நான்கு சதுரமான பட்டைகள் அதன் மேல் நன்கு வளர்ந்த பூமுனையுடன் கூடிய புஷ்ப போதிகையும் காட்சி தருகின்றன. ஒவ்வொரு தூண்களிலும் பன்னிரண்டு சிற்பங்கள் வீதம் 432 சிற்பங்கள் தூண்களை அலங்கரிக்கின்றன. இந்த சிற்பங்களில் ஒரே வகையான சிற்பங்கள் பல்வேறு தூண்களில் உள்ளன. இம்மண்டபத்தில் நவக்கிரக மண்டலம் உள்ளது. இம்மண்டபத்திலுள்ள தூணின் உயரம் 3 மீட்டர் 51 செ.மீட்டராகும். போதிகையின் அகலம் 1 மீ உயரம் 35 செ.மீ. ஆகும்.

கருவறை திருச்சுற்று (முதல் திருச்சுற்று)

கருவறையின் திருச்சுற்றில் வலம் வருவோமானால் தெற்கு பகுதியில் விநாயகர், திருமால், மூஷிக வாகனம், நாகலிங்கம் ஆகியவையும் தென் மேற்கு மூலையில் நந்தி, சிவலிங்கம், திருஞானசம்பந்தர், மேற்கே வள்ளி, தெய்வானையுடன் சுப்ரமண்யர் ஆகியோரும் வடக்கில் சண்டிகேஸ்வரி, வடகிழக்கில் துர்கை ஆகியோரின் கற்சிலைகளும் உள்ளன. அர்த்தமண்டப நுழைவாயிலின் இடப்புறம் இடம்புரி விநாயகர் சிறிய மண்டபத்தில் காட்சி தருகிறார். திருச்சுற்றின் முன்பகுதியில் பன்னிரண்டு முழுத்தூண்களும், நான்கு அரைத்தூண்களும் பின்பகுதியில் பன்னிரண்டு தூண்கள், வலது, இடது புறம் 14+14=28 (இருபத்தெட்டு) தூண்கள் உள்ளன. இருபது தூண்களில் கீழ்பகுதி நான்கு பட்டைகளாகவும், மேல் பகுதி பதினாறு பட்டைகளாகவும், மற்றத் தூண்கள் கீழ்பகுதி நான்கு பட்டைகளாகவும் மேற்புறம் வட்ட வடிவமாகவும், சாதாரண அமைப்பு கொண்ட போதிகையுடன் காட்சி தருகிறது. தூணின் உயரம் 2.7மீ. போதிகையுடன் காணப்படுகிறது.

நடராஜர் சபாமண்டபம்

சுக்கிரவார பிரகாரத்தினை கடந்து சென்றால் நடராஜர் சபாமண்டபம் காணப்படுகிறது. உயரமான மேடை அமைப்புடன் காணப்படுகிறது. மேடையின் உயரம் சுமார் 4 அடி உயரம் ஆகும். அதன் இருபுறமும் சிறு அறைகள் காணப்படுகின்றன. சபையின் இடதுபுறம் உற்சவமூர்த்தியான நடராஜர் தென்திசை நோக்கிய

நிலையில் அறையில் வைக்கப்பட்டுள்ளார். அதன் இருபுறமும் சிறு அறைகள் காணப்படுகின்றன. சடையன் தென்மேற்கு மூலையில் சைவ சமயக்குரவர்களான நால்வர் சிலைகளும், பெரியபுராணம் தொகுத்தளித்த சேக்கிழார் சிலையும் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்துள்ளனர். விநாயகர் சிலை உள்ளது. விநாயகர் சிலைக்கு பக்கத்தில் வள்ளி, தெய்வானையுடன் கூடிய சுப்ரமண்யர் உற்சவமூர்த்தி கிழக்கு பார்த்த நிலையில் அறையில் வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு பகுதியில் சூரியன் சிற்பம் உள்ளது. இம்மண்டபத்தில் பதினைந்து விஜயநகர கால தூண்கள் உள்ளன. மண்டபத்தை அடைய ஏழுபடிக்கட்டுகள் உள்ளன. யாளியின் வாயிலிருந்து வரும் நாக்கை கைப்பிடி சுவராக கட்டியுள்ளனர்.

மடப்பள்ளி, நீராழி மண்டபம்

சுக்கிரவார திருச்சுற்று என்று அழைக்கப்படும் இரண்டாம் திருச்சுற்றில் தென்கிழக்கு மூலையில் உள்ளது. இங்கு நான்கு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு தூண்களின் இடைப்பட்ட பகுதியில் கிணறு உள்ளது. இப்பகுதி மடப்பள்ளியாகவும் பயன்படுத்தி உள்ளார்கள்.

நடராஜர் உற்சவ அறை

சபாமண்டபத்தின் வடக்குப்பகுதியில் நடராஜர் உற்சவ அறை உள்ளது. இங்கு பல்வேறு உற்சவர்களின் செப்புத் திருமேனிகள் வைக்கப்பபட்டுள்ளன.

சுப்ரமண்யர் உற்சவர் அறை

சபாமண்டபத்தின் தென் மேற்கு பகுதியில் சுப்ரமண்யர் உற்சவ அறை உள்ளது.

இரண்டாம் திருச்சுற்று(பிரகாரம்)

இரண்டாம் பிரகாரம் சுக்கிரவார அம்மன் பிரகாரம் என அழைக்கப்படுகிறது. இப்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் மடப்பள்ளியும், திருமஞ்சனக் கிணறும் கூடிய அறையும் உள்ளது. தென்கிழக்கு பகுதியில் காசிவிஸ்வநாதர் ஆலயமும், வடகிழக்கு

பகுதியில் விநாயகர் ஆலயமும், வடமேற்கு மூலையில் நவராத்திரி மண்டபமும் உள்ளது. திருச்சுற்றின் மேற்கு பகுதியில் இரு வரிசைகளாக பதினாறு தூண்கள் உள்ளன. தூண்களில் சிற்பங்களும் உள்ளன. இத்திருச்சுற்றின் மேற்கு பகுதியில் பைரவர் சிற்பம் உள்ளது.

விநாயகர் சந்நிதி

இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் தென்திசை நோக்கி இச்சந்நிதி உள்ளது. இந்த சந்நிதியின் நீளம் 4.36 செ.மீ. அகலம் 3.32 செ.மீ. அளவுடையது. இச்சிற்றாலயம் கருவறையுடன் சிறிய மண்டபத்துடன் காட்சியளிக்கிறது. இக்கருவறை 4 அடி நீள அகலமுடையது.

இக்கருவறை ஆறு பகுதிகளைக் கொண்ட விமானம் உடையது. அதிட்டான அமைப்பு உபானம், பத்ம ஜகதி, மணி வரிக்குமுதம் மகா பட்டிகை, சுவர் பகுதியில் நான்கு அரைத்தூண்கள் அலங்கரிக்கிறது. கருவறையின் நிலைக்கால்கள் பத்ம வரியுடன் காணப்படுகிறது. அரைத்தூண் கீழிருந்து மேலாக நான்கு பட்டை நாகபந்தம், மூன்று பட்டைகள், மணிமாலை கலசம், இடைக்கட்டு, பூசணி, பத்மம், பலகை, பலகையின் மேல் புஷ்பபோதிகை உள்ளது. கூரைப்பகுதியில் கர்ணகூடுகள் உள்ளன. ஒரு தள விமானமானது வேசர வடிவில் உள்ளது.

இச்சந்நிதி உயரமான மேடை போன்ற அமைப்புடையது. இம்மேடையானது. 75 செ.மீ. அளவுடையது. இரு தூண்கள் மண்டபத்தில் உள்ளது.

கருவறையின் வாயிலின் இருபுறமும் புடைப்பு சிற்பங்களாக சிவலிங்கத்திற்கு பால் சுரக்கும் பசுவும், உமையவளின் சிற்பமும் இடம்பெற்றுள்ளன.

காசிவிஸ்வநாதர் ஆலயம்

இரண்டாம் திருச்சுற்றில் வடமேற்கு திசையில் கிழக்கு நோக்கிய வண்ணம் இச்சந்நிதி உள்ளது. இந்த ஆலயம் இரு தூண்களைக் கொண்ட சிறிய மண்டபத்துடன் கூடிய கருவறையுடன் காணப்படுகிறது.

கருவறையின் ஆறு அங்கங்கள் பகுதிகளாக உள்ளன. அதிட்டானம் பகுதியில் உபானம், பத்மஜகதி, மகாபட்டிகை, மணிக்குமுதம் போன்ற அமைப்புகள் உடையது. கருவறையின் புறச்சுவரினை அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. அரைத்தூண்கள் நான்கு பட்டிகை, நாகபந்தம், மூன்று அமைப்புகளுடன் உள்ளன. கருவறை எதிரில் உள்ள சிறிய மண்டபத்தில் நந்தி, பலிபீடம் உள்ளது. கருவறையின் வாயிலின் இருபுறமும் புடைப்பு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சுக்கிரவார மண்டபம்

இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் இரு தூண் அமைப்பு கொண்ட சுக்கிரவார மண்டபம் உள்ளது. இம்மண்டபம் தரையிலிருந்து 97 செ.மீ. உயரமான மேடை வடிவில் அமைந்துள்ளது. மேடையின் அடிப்பகுதியில் உபானம், பத்மஜகதி, கம்பு, கண்டம், மகாபட்டிகை, மணிவரிக்(சிலம்பு)குமுதம் என்ற அமைப்புடன் காணப்படுகிறது. கபோதப் பகுதியில் சிம்மக்கூடுகள் அலங்கரிக்கின்றன. மண்டபத்தின் நீளம் 3.37 செ.மீ அகலம் 7 மீ. உடையது.

திருக்குளம்

முதல் பிரகாரத்தின் தென்கிழக்கு பகுதியில் திருக்குளம் உள்ளது. இது இருதள வரிசையை கொண்டுள்ளது. இதன் கலைப்பாணி விஜயநகர அமைப்பைக் கொண்டுள்ளது. இத்திருக்குளம் கிழக்கு மேற்காக 30 அடி நீளமும், தெற்கு வடக்காக 15 அடி அகலமும் கொண்ட செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது இத்திருக்குளம் முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. குளத்தில் மழைக்காலங்களில் மட்டுமே நீர் நிறைந்திருக்கும். படிகள் உள்ள பகுதிக்கு எதிர் திசையில் சுதைச் சிற்பங்கள் மேல்தள வரிசையில் உள்ளன.

நான்கு கால் மண்டபம்

திருக்குளத்தின் படிகளின் அருகில் நான்கு கால் மண்டபம் ஒன்று உள்ளது. மேடையின் உயரம் 87 செ.மீ தூணின் உயரம் 2.5 செ.மீ. போதிகையுடன் 2.85. செ.மீ. இம்மண்டபத்து தூண்களில் விஜயநகர காலப் பெண்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

பழைய வாகன அறை

இராஜகோபுர திருச்சுற்றின் தெற்கு திசையில் திருக்குளத்திற்கு பக்கத்தில் பழைய வாகன அறை உள்ளது. தற்பொழுது அக்கட்டடத்தின் பகுதிகள் சிதைந்து சுவர்கள் சில மட்டும் எஞ்சியுள்ளன. இதன் நீளம் 20 அடியும், அகலம் 10 அடி கொண்ட அளவினதாக உடையது. தற்பொழுது உபயோகத்தில் இல்லை.

நந்தவனக் கிணறு

தெற்கு பிரகாரத்தில் நந்தவனக் கிணறு ஒன்று உள்ளது. அக்காலத்தில் பிரகாரத்தில் சிறு பகுதியில் நந்தவனம் இருந்திருக்கலாம்.

நவக்கிரக மண்டபம்

வடக்கு பிரகாரத்தில் பழைய நவக்கிரக மண்டபம் உள்ளது. இம்மண்டபம் 8அடி நீள அகலமுடையது. தற்பொழுது சிதைந்த நிலையில் உள்ளது. எனவே இங்கிருந்த நவககிரக மண்டல நாயகர்களை மகாமண்டபத்தில் வைத்து வழிபடுகிறார்கள். நான்கு தூண்கள் அமைத்து அதன் இடைப்பட்ட பகுதியில் செங்கல் சுதையாலான கட்டடம் கட்டியுள்ளனர்.

யாகசாலை மண்டபம்

இயற்கை தெய்வங்களான நீர், நிலம், காற்று, வானம், நெருப்பு முதலியவற்றை வணங்கிய மனிதன் கால ஓட்டத்தில் நெருப்பை கொண்டு யாகம் செய்ய ஆரம்பித்தான். இவை முக்கியமாக கருதி ஒவ்வொரு கோயிலிலும் யாகசாலைக்கென்று ஒரு மண்டபம் அமைத்தனர்.

பெரியநாயகி அம்மன் கோயிலிலுள்ள யாக சாலையின் நீளம் 30 அடி, அகலம் 15 அடி முழுவதும் கருங்கற்களால் அமைக்கப் பட்டுள்ளது. வாயிலின் உயரம் 6அடி உயரமுடையது. வாயிலை மரக்கதவுகளால் மூடப்பட்டுள்ளது.

கல்யாண மண்டபம்

வடக்கு பிரகாரத்தின் கிழக்கு பகுதியில் கல்யாண மண்டபம் உள்ளது. இம்மண்டபம் உயரமான மேடையில் அமைக்கப்பட்டுள்ளது. மேடையின் உயரம் 97 செ.மீ. உயரமுடையது. மேடையின் அடிப்பகுதி அதிட்டான வர்க அமைப்புடன் காணப்படுகிறது. அவை முறையே உபானம், பத்ம ஜகதி, கம்பு, மணிவரிக் குமுதம், மகாபட்டிகை, கபோதம் ஆகியவை மகாபட்டிகையில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. கபோதப் பகுதி சிம்மகீர்த்தி முகங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. இம்மண்டபத்தை பாய்ந்து செல்லும் இரு குதிரைகள் இழுத்து செல்வது போலவும், குதிரையை நேராக செலுத்த குதிரையின் மேல் குதிரை வீரர்கள் அமர்ந்து தேரை செலுத்துவது போன்றும் மிகவும் நேர்த்தியாக கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம் தெற்கு பார்த்த வாயிலைக் கொண்டுள்ளது. இம்மண்டபத்தில் வடக்கு மதிற்சுவரை ஒட்டி கல்யாண மேடை அமைந்துள்ளது.

கல்யாண மேடையின் உயரம் 3½ அடி அகலம் 36 அடி ஆகும். மேடையில் பன்னிரண்டு முழுத்தூண்களும், 4 அரைத்தூண்களும் உள்ளன. மேடையில் 4 பட்டைகள் எட்டு பட்டைகள், நான்கு பட்டைகள் எட்டு பட்டைகள் நான்கு பட்டைகள் என்ற அமைப்புடன் உள்ளது. விஜயநகர கால கலைப்பாணியில் தூண்கள் உள்ளன. கல்யாண மேடையின் அடிப்பகுதியில் உபானம், பத்ம ஜகதி, மகாபட்டிகை, மணி வரிக்குமுதம் கபோதம் போன்ற அமைப்புகள் உள்ளது. மகாபட்டிகையின் பகுதியில் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. நான்கு தூண்கள் நடுவில் கல்யாணம் நடைபெறும் இடமுள்ளது. இந்த நான்கு தூண்கள் பார்ப்பதற்கு பந்தக்கால் போன்று அமைப்பில் உள்ளது. திருக்கல்யாண வைபவத்தை பக்தர்கள் கண்டுகளிக்க கல்யாண மேடையின் எதிரில் அரங்கம் போன்ற அமைப்பு உள்ளது. இந்த அரங்கத்தில் இருபத்தி எட்டு தூண்கள் உள்ளன. இந்த தூண்கள் 7X4 என்ற வரிசையில் அமைந்துள்ளது. அரங்கிற்கு காற்றோட்ட வசதிக்காக கற்களால் ஆன சாளரங்கள் உள்ளன. இந்த அரங்கிலுள்ள தூண்கள் யாவும் கீழிருந்து மேலாக நான்கு பட்டை,

பதினாறு பட்டை கட்டுபந்தத்துடன், நான்கு பட்டை பதினாறு பட்டை கட்டுபந்தத்துடன், நான்கு பட்டை அதன் மேல் (புஷ்ப) பூ முனை போதிகை வைக்கப்பட்டுள்ளது. அதன் மேல் கூரைப்பகுதி அமைந்துள்ளது. கூரை மேல் உள்ள கபோதப் பகுதியில் கர்ண கூடுகள், சிம்மகீர்த்தி அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தின் இருபுறமும் துவாரபாலகர்கள் காவல் காத்து நிற்கின்றனர்.

உயரமான இம்மண்டபத்தின் மேல் பகுதியை அடைய ஐந்து படிகள் உள்ளன. இதன் தடுப்பு சுவராக யாளியின் வாயிலிருந்து வரும் நீண்ட துதிக்கை போன்று அமைப்பு உள்ளது.

இம்மண்டபம் தேர் போன்ற அமைப்பு உடையதால் மனுநீதி சோழன் சரித்திரம் சிற்பங்களாக உள்ளன.

நந்தி மண்டபம்

அம்மன் கோயிலுக்கு எதிரில் நந்தி வீற்றிருப்பது விந்தையாக உள்ளது. உயரமான மேடையில் நந்தி வீற்றிருக்கிறது. மேடையின் அடிப்பகுதி முறையே உபானம், ஜகதி, பட்டிகை, பத்மம், குமுதம், மகாபட்டிகை என்ற அமைப்புடன் உள்ளது. மண்டபத்தில் நான்கு தூண்களும், கபோத பகுதியில் சிம்மக் கூடுகளும் அலங்கரிக்கின்றன. இதன் சிகரம் வேசர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

கொடிமரம்

நான்கு அடி உயரமுடைய பீடத்தின் மேல் கொடிமரம் வைக்கப்பட்டு உள்ளது.

ஆறுமுகசுவாமி சந்நிதி

இராஜ கோபுர திருச்சுற்றில் வடக்கு பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய வாயிலாக இச்சிற்றாலயம் உள்ளது. இச்சந்நிதி கருவறை, சிறிய மண்டபத்துடன் காட்சியளிக்கிறது. இந்த ஆலயத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் படிகள் அமைத்துள்ளனர். ஆலயத்தின் நீளம் 7 மீ. அகலம் 4 மீ. மேடையின் உயரம் 1.50மீ. 50 செ.மீ. அளவுடையது.

கருவறை

கருவறை சதுர அமைப்பு உடையது. கருவறையின் நடுவில் அழகு நாயகனான ஆறுமுகங்களோடு பன்னிரு கரங்களுடன் முருகன்காட்சி தருகிறார். கருவறை விமானம் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்ட நிலையில், அதிட்டான பகுதியில் உபானம் ஜகதி, கண்டம், மகாபட்டிகை அமைப்பிலும் சுவர் பகுதியில் பத்மவரி, பட்டிகை, நாகபந்தம், முப்பட்டை தூண், மணிமாலை. கலசம், இடைக்கட்டு, பத்மம், பூசணி, பலகை, போதிகை என்ற அமைப்பிலும், கருவறையின் புறச்சுவர் பகுதியில் தேவகோட்டங்கள் சாலைவடிவில் அமைந்துள்ளன. தேவகோட்டங்களில் தெய்வ உருவங்கள் இல்லை. கூரைப்பகுதி இது கருவறையை மூடும் பகுதியாகும், இதன் கபோதப் பகுதியில் கர்ணகூடுகள் அலங்கரிக்கின்றன.

விமானம் ஒரு தள அமைப்புடன் வேசர வடிவில் உள்ளது. பஞ்சலோகத்தாலான கலசம் உள்ளது. தளத்தில் கர்ணகூடு, பஞ்சரம், சாலை என்ற அமைப்புடன் மாறி, மாறி உள்ளது. கர்ண கூடுகளால் அலங்கரிக்கிறது. கிரீவத்தின் தளத்தில் எட்டு மயில்கள் அலங்கரிக்கின்றன. முருகனின் பல்வேறு தோற்றங்கள் சுதை சிற்பங்களாக காட்சியளிக்கிறது.

விநாயகர் சந்நிதி

இராஜகோபுர திருச்சுற்றினை தெற்கு பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய வாயிலாக இச்சந்நிதி உள்ளது. இது கருவறை இரு தூண்கள் கொண்ட மண்டபத்துடன் காணப்படுகிறது. இந்த சிற்றாலத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் படிகள் அமைத்துள்ளனர். ஆலயத்தின் நீளம் 7 மீ. அகலம் 4 மீ. அளவுடையது.

கருவறை சதுர அமைப்பு கொண்டது. கருவறையின் நடுவில் விநாயகர் வீற்றிருக்கிறார். கருவறை விமானம் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதிட்டானத்தில் உபானம், ஜகதி, கண்டம், மகாபட்டிகை அமைப்பும், சுவர் பகுதியில் பத்மவரி, பட்டிகை, நாகபந்தம், முப்பட்டை தூண் மணிமாலை, கலசம், இடைக்கட்டு, பத்மம் பூசணி, பலகை, போதிகை என்ற கட்டட அமைப்பும், கருவறையின் புறச்சுவர்

பகுதியில் தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவ கோட்டங்களில் தெய்வ உருவங்கள் இல்லை. கூரைப்பகுதியில் கர்ணகூடுகளுடன் கூடிய கபோதப் பகுதி அலங்கரிக்கின்றன.

விமானம் ஒரு தள அமைப்புடன் வேசர சிகரமுடையது. கலசம் உள்ளது. தளத்தில் கர்ணகூடு, பஞ்சரம், சாலை என மாறிமாறி உள்ளது.

விநாயகர் சந்நிதி

வெளிப்புற மதிற்சுவரை ஒட்டி சிறிய மண்டபத்துடன் விநாயகர் சந்நிதி உள்ளது. இராஜகோபுர வாயிலின் தெற்கு பகுதியில் மதிலை புடைத்து நிற்கும் சாலை வடிவில் ஆலயம் உள்ளது. இரு தூண்கள் கொண்ட சிறிய மண்டபம் உயரமான மேடை போல் அதிட்டான அமைப்பு கொண்டு இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மண்டபத்தில் தெற்கு திசையில் யாளி வாயிலிருந்து வரும் தடுப்பு சுவருடன் படிகட்டுகள் இருக்கிறது. கால வெள்ளத்தில் மண்மேடு இருக்க வாய்ப்பு உள்ளது.

ஆறுமுகசுவாமி சந்நிதி

வெளிப்புற மதிற்சுவரை ஒட்டி புடைத்து நிற்கும் சாலை வடிவில் இந்த சிற்றாலயம் உள்ளது. இந்த ஆலயம் வடக்கு பகுதியில் உள்ளது. தெற்கு திசையில் உள்ள கோயிலின் அமைப்பில் உள்ளது.

நான்கு கால் மண்டபம்

கோயிலின் வாயில் எதிரில் நான்கு கால் மண்டபம் உள்ளது. இம்மண்டபம் சுமார் 13 அடி உயரம் உடையது. இதில் நான்கு தூண்கள் உள்ளன. இத்தூண்கள் கீழிருந்து மேலாக நான்கு பட்டை, எட்டு பட்டை, நான்கு பட்டை அதன் மேல் சாதாரண போதிகை அதன் மேல் கூரைப்பகுதி உள்ளது. கபோதப் பகுதியின் மூலைகளில் சிம்ம முகம் அணி செய்கிறது. தூணின் உயரம் 11 அடியாகும். இம்மண்டபம் நீளம், அகலம் 10 அடி கொண்ட சதுர அமைப்பு உடையது.

தேர் மண்டபம்

தேர் மண்டபம் தூரத்திலிருந்து காண்பதற்கு பேளூர், ஹளபேடு கோயிலின் பகுதி போன்று உள்ளது. தேர் மண்டபம் சதுரமான அமைப்பு உடையது. இம்மண்டபத்தில் 6 தூண்கள் உள்ளன. மண்டபம் சற்று உயரமாக கட்டப்பட்டுள்ளது. மண்டபத்தை அடைய பத்து படிகள் உள்ளன. அவற்றின் தடுப்பு சுவராக யாளி உருவமும், யானை உருவமும் மிகவும் நேர்த்தியாக அழகு செய்கிறது. இதன் கூரைப்பகுதி கபோத அமைப்பில் கர்ணகூடுகள் அலங்கரிக்கின்றன. மண்டப உயரம் 9 அடி, மேடைப்பகுதியின் அதிட்டான அமைப்பு உபானம், ஜகதி, மகாபட்டிகை, கபோதம், பத்மம், மகாபட்டிகை கபோதம் என்று மாறி உள்ளது. பட்டிகையிலும் தூண்களிலும் சிற்பங்கள் உள்ளன.

சிற்பக்கலை

பெரியநாயகி அம்மன்

பெரியநாயகி அம்மனின் ஒளிபொருந்திய திருவுருவம் உயரமான பீடத்தில் தாமரை இருக்கையில் நான்கு கைகளுடன் சமபாத நிலையில் நேராக நின்ற கோலத்தில் மேல் வலது கையில் அங்குசமும், இடது கையில் பாசம் ஏந்தியும், கீழ் வலது கையில் அபய முத்திரையும் காட்டி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறாள். இடது கையில் அருள் அளிக்கும் (வரத) கையாகவும், பக்தர்களுக்கு அபயமளித்து அருள் வழங்குகிறாள்.

பெரியநாயகி அம்மனின் தலைமுதல் பாதம் வரை உள்ள அங்கங்களில் அணிந்துள்ள அணிகலன்கள் முறையே தலையில் கரண்ட மகுடமும், செவிகளில் குண்டலங்களும், மூக்கில் மூக்குத்தியும், கழுத்தில் கண்டசரமும், மங்கலநான் பதக்கம் கோத்த முத்துமாலையும், சரப்பளியும் அணி செய்கின்றன. மேல் கையில் தோள் வளையமும் முன் கைகளில் கை வளைகளும் அணி செய்கின்றன. அம்மனின் தனங்களில் மார்பு கச்சை கட்டவில்லை. இடையில் இடைக்கச்சை அழகு செய்கிறது. இடையில் இருந்து பாதம் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. கால்களில் கொலுசுகள், காப்பும் அணி செய்கின்றன.

அம்மனின் திருமுகம் அன்றலர்ந்த தாமரை மலர் போல் ஒளிபொருந்தி காணப்படுகிறது. இவ்வாறு தேவியின் புரமாகிய தேவிகாபுரத்தில் பெரியநாயகி அம்மன் அரசாட்சி செய்கிறாள். கயல் விழிகள் நீண்டு மெலிந்த புருவங்களும், நேர்த்தியாக அமைந்த நாசியும், புன்னகை பூத்த இதழ்கள் அமைந்த வட்டமான முகமும் மெலிந்த உடல்வாகும் கொண்டு நின்ற நிலையில் காட்சி தருகிறாள்.

பெரிய நாயகி அம்மனுக்கு வெள்ளிக்கிழமை தோறும் வெள்ளியாலான கவசம் சார்த்தப்பட்டு இருக்கும் காட்சி கண்களை கொள்ளைகொள்கிறது.

துவாரபாலகர்கள்

இராஜகோபுர நுழைவாயில் இருமருங்கும் துவாரபாலகர்கள் காவல்புரிகின்றனர். துவாரபாலகர் சிற்பங்களின் உயரம் சுமார் 5 அடி உயரமுடையது. மலை போன்ற புஜங்களும் அகன்ற மார்பும் நீண்ட உடல்வாகு கொண்டு கம்பீரமாக காட்சி அளிக்கின்றனர். துவாரபாலகர்கள் கிரீடம் தரித்தும் நெற்றியில் மணிகள் கோர்த்த நெற்றிப் பட்டமும், அகன்ற விழிகளும் நீண்ட புருவங்களும் முறுக்கிய மீசையும், தடித்த உதடுகளுடனும் காட்சி தருகின்றனர். இடையில் அரையாடை அணிந்தும், கைகளில் காப்பும், கால்களில் வீரக் கழல்கள் அணிந்தும் காட்சி அளிக்கின்றனர்.

வலப்புறமுள்ள துவாரபாலகர்

இராஜகோபுரத்தின் வலதுபுறமுள்ள துவாரபாலகர் மேலிரு கைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும், கீழிருகைகளில் தண்டம் ஊன்றியும், அரவம் பிடித்த நிலையிலும் உள்ளார். வலது காலை தூக்கி அரவத்தின் மீது ஊன்றிய நிலையில் காணப்படுகிறார்.

இடதுபுறமுள்ள துவாரபாலகர்

இராஜகோபுரத்தின் இடப்புறமுள்ள துவாரபாலகர் மேலிரு கைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும் இடது காலை தூக்கி அரவத்தின் மீது ஊன்றிய நிலையிலும் காணப்படுகிறார்.

துவாரபாலகிகள்

நடராஜர் சபையின் மேற்கு பகுதியில் அரபத்ரா, சுபத்ரா ஆகிய இரு துவாரபாலகியர் பெரியநாயகிக்கு காவல் புரிகின்றனர். கரண்டமகுடம் தலையிலும் நீண்ட புருவம், நேர்த்தியான விழிகள், வட்டமான முகம், கோரைப்பற்கள், காதுகளில் வட்டமான குழைகள், கழுத்தில் சரப்பளி, பதக்கம் கோர்த்த முத்துமாலையும் முத்துக்கள் கோர்த்த மாலை ஆகியவை அழகுற அணிசெய்கின்றன. மேற்கைகளில் வங்கியும் கீழ்கைகளில் வளையல் காப்பும், கால்களில் கழல்களும் இடையில் ஆடையும், கீழ்கால் வரை தொடை மாலையும் அழகு செய்கின்றன. வலதுபுறம் உள்ள துவாரபாலகி மேல் வலக்கையில் அங்குசமும், இடது கையில் நாகம், கீழ் வலது கையில் தண்டும் இடது கை சூசி முத்திரை காட்டியும் உள்ளாள். இதே போன்று இடதுபுறமுள்ள துவாரபாலகியும் காணப்படுகிறாள்.

விநாயகர்

பெரியநாயகியின் கருவறையில் தெற்கு பிராகாரத்தில் உள்ள விநாயகர் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் யானை முகத்துடன் அகன்ற காதுகளுடன் மேலிருகைகளில் அங்குசம், பாசம், ஏந்தியும் கீழிரு கைகளில் தந்தம் மோதகம் ஏந்தியும் இடம்புரி விநாயகராகவும் மார்பில் முப்புரி நூலும் கழுத்தில் கண்டசரம், முத்துமாலை விநாயகரின் தொந்தியில் அரவத்தாலான உதரபந்தம் காணப்படுகிறது. கைகளில் காப்பும் கால்களில் கழல்களும் அணிந்து உள்ளார்.

திருமால்

நீலமேனியுடைய திருமால் பத்மபீடத்தின் மீது சமபாதநிலையில் நின்ற கோலத்தில் உள்ளார். தலையில் கிரீடமகுடம் அணிந்து காதுகளில் குண்டலங்கள் கழுத்தில் கண்டசரமும், சரப்பளியும், மார்பில் முப்புரிநூலும் மேற்கையில் கேயூரமும் கீழ்கையில் காப்பும், பீதாம்பரதாரியான ஆடை ஆகியவை அணிசெய்கின்றன. மேல் வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் கீழ் வலக்கை வியாக்யான முத்திரையும் இடக்கை தொடைக் கைமுத்திரையும் காட்டப்பட்டுள்ளது. இதன் காலம் 18-ஆம் நூற்றாண்டாகும்.

மூஷிகம்

வினைகள் தீர்க்கும் விநாயகரின் வாகனமான எலி கழுத்தில் மணி அணிந்து தன் முகத்தை மேல் நோக்கி காட்டியவாறு உள்ளது.

நந்தி, சிவலிங்கம்

கருவறைத் திருச்சுற்றின் மேற்கு பிரகாரத்தில் சிவலிங்கம் அதன் எதிரே நந்தியும் உள்ளது. சிவலிங்கத்தில் பிரம்மபாகம், ருத்ரபாகம், விஷ்ணுபாகம் என்று பிரிக்கலாம். பிரம்ம முடிச்சு உள்ளது.

சிவலிங்கத்திற்கு எதிரே நந்தி காலை மடித்த நிலையில், இடதுபுறமாக தலை திருப்பிய நிலையில் இறைவனை நோக்கி உள்ளது. நந்தியின் கழுத்தில் மணிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தருக்கு ஆளுடையப்பிள்ளை என்றொரு பெயரும் உண்டு. சீர்காழியில் பிறந்தவர். மகுடம் தரித்து காதுகளில் உருத்ராட்ச குண்டலங்கள் அணிந்தும், கழுத்தில் சரப்பளியும் உருத்திராட்ச மாலையும் அழகு செய்கின்றன. இரு கைகளில் தாளம் ஏந்தியுள்ளார். கைகளில் உருத்திராட்ச மணிமாலை அழகு செய்கிறது. சமபாத நிலையில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

நாகர்

சிறிய பலகை கல்லில் இரு நாகங்கள் பின்னலிட்ட நிலையில் இருவட்டமிட்டு காட்டியபடி உள்ளது. மேல்வட்டத்தில் சிவலிங்கம் காணப்படுகிறது. பாம்புகளின் தலைப்பகுதி விரித்த நிலையில் காட்டியுள்ளது. இச்சிற்பத்தின் காலம் 18-ஆம் நூற்றாண்டு என தெரியவருகிறது.

தனி அம்மன்

பத்மத்தின் மீது அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். தலையில் கரண்ட மகுடமும் செவிகளில் வட்டக் குழைகளும் கழுத்தில் கண்டசரமும் மேற்கைகளில் வளைகளும் காலில் கழல் அணி செய்கிறது. மேலிருகை களில் அங்குசம், பாசம், கீழிருகைகள் அபய வரத முத்திரையுடன் காட்டப்பட்டுள்ளது. இதன் காலம் 16-ஆம் நூற்றாண்டாகும்.

வள்ளி தெய்வானையுடன் முருகன்

முருகன்

பத்மபீடத்தின் மீது அழகு நாயகன் நேராக நின்றவாறு தன் வாகனமான மயிலுடன் காட்சியளிக்கிறார். முருகன் கிரீடமகுடத்துடன் நெற்றிப்பட்டம் அணிந்தும் காதுகளில் குண்டலங்கள் கழுத்தில் சரப்பளியும், கண்டசரமும், பதக்கம் கோர்த்த முத்துமாலையும் மார்பில் முப்புரிநூலும் சன்னவீரம் தரித்துள்ளார். மேலிருகைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும் கீழருகைகளில் அபயவரத முத்திரையுடன் காட்சியளிக்கிறார்.

வள்ளி

முருகனின் வலதுபுறம் தினைப்புலம் காவல்காத்த வள்ளி நாயகி இருக்கிறாள். திரிபங்க நிலையில் ஒயிலாக நின்றவாறு, உள்ளது. இடது கரத்தில் தாமரை மலரை பிடித்தும் வலதுகரம் தாழ்கரமாக (தொங்கும் கரம்) உள்ளது. தலையில் கரண்ட மகுடம், செவிகளில் வட்டமான குழைகள், கழுத்தில் கரண்டசரம் பதக்கம் கோர்த்த முத்துவடம், அட்டிகை முதலிய அணிகலன் அழகு செய்கின்றன. கைகளில் தோள்வளை, வளையல்கள், பாதசரம் பாதத்திலும், தண்டை காலிலும் அணிசெய்கிறது.

தெய்வானை

மயில்வாகனன் முருகனின் இடதுபுறம் வலது கையில் தாமரை மலர் ஏந்தி, இடதுகரம் தொங்குகரமாகவும் திரிபங்க நிலையில் ஒயிலாக நின்றுள்ளது போல் காட்டப்பட்டுள்ளது.

தலையில் கரண்ட மகுடமும் செவிகளில் மகரக்குழைகள், கழுத்தில் அட்டிகை, மார்பில் இரண்டுவட முத்துமாலை, மேல் கைகளில் தோள்வளையும், முன் கைகளில் கைவளையும், காலில் தண்டைக்கழல் பாதசரம் பாதத்தில் அணிந்தவாறு காட்சியளிக்கிறது.

முருகனின் இரு மனைவியர் இவர்களில் யார் மூத்தவள் என்று அறிந்துகொள்ள வள்ளியின் கொங்கைகள் மீது மார்பு கச்சையும், தெய்வானை கொங்கைகள் மார்பு கச்சை இன்றியும் காணப்படும். வள்ளியின் காதுகளில் வட்டக் குழைகளும், தெய்வானையின் காதுகளில் மகரக்குழைகள் காட்டியுள்ளனர். இவ்விரு தேவியர்களின் சிற்பவடிவினை அடையாளம் காட்டுகிறது. இதன் காலம் 16- ஆம் நூற்றாண்டாகும்.

விநாயகர்

பெரியநாயகி அம்மன் கருவறை மேற்கு பிரகாரத்தில் இரண்டு விநாயகர் சிலைகள் உள்ளன. அமர்ந்த நிலையிலும் நின்ற கோலமாக இருக்கிறது.

பத்மத்தின் மீது அமர்ந்த கோலத்தில் துதிக்கை இடம்புரியாகவும் மேலிருகைகளில் அங்குசம், பாசம், ஏந்தியும், கிழிருகைகளில் தந்தம். மோதகம், பிடித்தும், பெருத்த வயிறும் மார்பில் முப்புரிநூலும் அமல் கைகளில் தோள்வளை கையில் காப்பும் காலில் கழல் அணிந்தும் காட்சி தருகிறார். இதன் காலம் 16, 17ஆம் நூற்றாண்டு எனத் தெரியவருகிறது.

உயரமான பீடத்தின் மீது சமபாதமாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அகன்ற காதுகளும், பெருத்த வயிறும் இடையில் ஆடை அணிந்தும் துதிக்கை இடம்புரியாகவும் மேலிருகைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும் கீழிருகைகளில் தந்தம் மோதகம் வைத்துள்ளார். தலையில் மகுடமும், மார்பில் முப்புரி நூலும் தரித்துள்ளார். 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

துர்க்கை

எருமைத் தலைமீது நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். கரண்ட மகுடம் தலையை அலங்கரிக்கிறது. செவிகளில் வட்டமான குழைகள், கழுத்தை அட்டிகை அணிசெய்கின்றன. இடையிலிருந்து கால் முழுவதும் மடிப்பான ஆடை காட்டப்பட்டுள்ளது. மேல் கைகளில் தோள்வளை, கைகளில் கைவளையம் மேலிரு கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியும், கீழ்வலது கை அபய முத்திரை காட்டியும், இடதுகரம் தொடைக்கை முத்திரைகாட்டியும் உள்ளார்கள். இதன் காலம் 16-17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

நால்வர் சிலைகள்

நடராஜர் சபையின் தென்மேற்கு மூலையில் உயரமான மேடைமீது தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் ஆகிய சமயக்குரவர் நால்வர்களின்

சிலைகளும் அமைத்துள்ளனர். இச்சிலைகளின் காலம் 17-ஆம் நூற்றாண்டு. இவர்களுக்கு வலதுபுறம் சேக்கிழார் சிலை தேவிகாபுரம் தெய்வப்புலவர் சேக்கிழார் சபையினர் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

திருஞானசம்பந்தர்

சீர்காழியில் பிறந்த ஆளுடையப்பிள்ளையான இவர் சமபாத நிலையில் குடுமியுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வலது கையில் தாளம் ஏந்தியும், இடது கையில் ஏடு பிடித்தும் தலையில் உருத்திராட்ச மாலையும் காதுகளில் உருத்திராட்ச குண்டலங்களும் மார்பு மேல்கை. கீழ்கைகளில் பெரியதாக சிறியதாக உருத்திராட்ச மணிமாலை அழகு செய்கிறது.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் இரு கைகளையும் அஞ்சலித்த நிலையில் காட்சி தருகிறார். வலது தோளில் உழவாரப்படையும் தாங்கியும், தலை, கழுத்து, கை, மார்பு ஆகிய உடலுறுப்புகளில் உருத்திருராட்ச மாலைகள் அணிந்துள்ளார். இவரது நெற்றி, மார்பு, கைகளில் திருநீறு அணிந்து கைகூப்பிய நிலையில் பக்தி பரவசத்தோடு காட்சி தருகிறார்.

மாணிக்கவாசகர்

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பெருமையுடைய வாசகம் பாடிய மாணிக்கவாசகர்பெருமான் நின்றநிலையில் சிவபக்தராக காட்சி தருகிறார். தலைமழுங்கிய நிலையில் உருத்திராட்சம் தரித்து வலக்கரம் சின் முத்திரை காட்டியும், இடக்கரம் அக்கமாலை ஏந்தியும் உள்ளார். அமர்ந்த நிலையில் உள்ளார். காதுகளில் குண்டலங்களும் இடையில் துண்டும் முழங்களால் வரை ஆடையணிந்தும் உள்ளார். கை, கழுத்து மார்பு, மேல் கைகளில் உருத்திராட்ச மாலையுடன் காணப்படுகிறார்.

பைரவமூர்த்தி

இரண்டாம் திருச்சுற்றின் கிழக்கு பகுதியில் கிளி கோபுரத்தின் உள் வாயிலின் இடதுபுறம் இச்சிற்பம் காணப்படுகிறது.

பைரவரின் தலையில் அனல் மகுடம் காட்டப்பட்டுள்ளது. மேல் வலது கையில் ஒலியெழுப்பும் உடுக்கையும் இடது கையில் பாசமும், கீழ் வலது கையில் சூலமும்,இடக்கையில் கபாலமும் ஏந்தியுள்ளார்.

ஆடை அணியா அழகரான அண்ணல் கோரைப்பற்களுடன் ஆஜானு பாகுவான உடலோடு அகன்ற கண்களும், நேர்த்தியான புருவமும் காதுகளில் வட்டக்குழைகளும் மார்பில் முப்புரி நூலும், தொடை மாலையும் தரித்து உள்ளார். காலில் கழல்கள் காட்டப்பட்டுள்ளன.

இச்சிற்பத்தின் பின்புறம் பைரவரின் வாகனமான நாய் காட்டப்பட்டுள்ளது. பைரவரின் இடதுபுறம் நாயின் தலை சற்று குனிந்த நிலையில் உள்ளது. நாயின் வால்பகுதி பைரவரின் வலப்பகுதியில் சுருண்டு காட்டப்பட்டுள்ளது.

சூரியர்

நடராசர் சடையின் கிழக்கு பகுதியில் சமபாதமாக நின்ற கோலத்தில் ஒளி வட்டம் காட்டப்பட்டு உள்ளது. இரு கைகளில் தாமரை மொட்டு பிடித்த நிலையில் உள்ளார். தலையினை கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. தலையின் பின்புறம் வட்டமான ஒளிவட்டம் அமைக்கப்பட்டுள்ளது. காதுகளில் குண்டலங்கள் அழகுசெய்கின்றன. கழுத்தில் கற்கள் பதித்த அட்டிகையும், மார்பில் முத்து மாலையும் முப்புரிநூல் அணிந்துள்ளார்.

விநாயகர்

பத்மத்தின் மீது அமர்ந்த நிலையில் மேலிருகைகளில் அங்குசம், பாசம், ஏந்தியும், கீழிருகைகளில் தந்தம், மோதகம் பிடித்துள்ளார். தலையில் மகுடம், மார்பில் முப்புரிநூல், கழுத்தில் பதக்கம் கோர்த்த முத்துமாலையும், வயிறுப்பகுதியில் நாகபந்தம் காட்டப்பட்டுள்ளது. மேல் கை தோள்வளை, கால்களில் கழலும் அணிந்துள்ளார். விநாயகர், நடராஜர் சபையில் நால்வருக்கு அருகில் உள்ளது.

சண்டிகேஸ்வரி

சண்டிகேஸ்வரி கருவறையின் வடதிசையில் உள்ளது. சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். வலது கையில்

தண்டும் இடது கை நிலத்தை தொடும் கையாகவும் உள்ளது. தலையில் கரண்டமகுடம், செவிகளில் குண்டலம், கழுத்தில் அட்டிகை, பதக்கம் கோர்த்த மாலை தனங்களில் மார்பு கச்சை காட்டப்பட்டு உள்ளது. இடையில் விசிறி மடிப்பு ஆடையும் அணிந்து காலில் கழல் அணிந்துள்ளார்.

ஆறுமுகசுவாமி

மயிலின் மீது சுகாசனத்தில் வீற்றிருக்கிறார். சரவணப் பொய்கையில் அவதரித்த இறைவனின் இடக்கரத்தில் மேலிருந்து கீழாக வில், வஜ்ஜரம், கேடயம், சங்கு, பாசம், வரத முத்திரையும் வலது கரத்தில் மேலிருந்து கீழாக அம்பு, சக்திபடை, சக்கரம், அங்குசம், அபய முத்திரையுடன் காட்சியளிக்கிறார்.

கரண்ட மகுடமும், செவியில் குண்டலங்களும், கழுத்தில் கண்டசரம், முத்துமாலை, மார்பில் மப்புரி நூலும், சன்ன வீரமும், காலில் கழலும், அரையாடை அணிந்துள்ளார். திருவாட்சியுடன் காட்சியளிக்கிறார்.

விநாயகர்

விநாயகர் பத்மத்தின் மீது அமர்ந்த நிலையில் மேலிருகைகளில் அங்குசம் பாசம் நந்தியும், கீழிருகைகளில் தந்தம், மோதகம் ஏந்திய நிலையிலும் காணப்படுகிறது. இதன் காலம் 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

கனககிரீஸ்வரர்

சுருக்கம்

தேவிகாபுரத்தில் 500 அடி உயரமான கனகாத்திரி என்ற மலையின் மீது ஐந்து நிலை கோபுரத்துடன் 36 கற்றூண்களைக் கொண்ட மகாமண்டபத்துடன் கிழக்கு மேற்காக அடி 200 வடக்கு தெற்காக அடி 100 அளவில் அமைந்துள்ள கருங்கலால் ஆன கோயில் அமைந்துள்ளது. கருவறையில் கிழக்கு நோக்கி உள்ளது. வாழைப்பூ போன்ற தோற்றத்தில் சுயம்பு மூர்த்தி கனககிரீஸ்வரர், காசிவிஸ்வநாதர் கோயில் கொண்டுள்ளார். மேற்கு பிரகாரத்தில்

தென்மேற்கில் விநாயகர் சந்நிதியும், வடமேற்கில் விசாலாட்சி அம்மன் சந்நிதியும், நடுவில் அரிவையர்கள் என்று தொடங்கும் திருப்புகழ் பெற்ற முருகன் சந்நதியும் உள்ளன. சண்டேஸ்வரர் சந்நதியும் உள்ளன. சண்டேஸ்வரர் சந்நிதி தென்கிழக்கில் மடைப்பள்ளியும், சப்தமாதர்கள் சிலையும் வடக்கு பிரகாரத்தில் சிறிய மண்டபம் உற்சவ மேடை, கிடங்கு முதலிய அறைகள் உள்ளன. வெளிப்பிரகாரத்தின் கீழ்புறம் நந்தி கொடிமரம், பலி பீடம் உள்ளன. மலையின் மேல் பார்வதி தேவியார் கனககிரி நாதனையே தன் கணவனாக அடைய வேண்டி தவம் புரிந்ததாகக் கூறப்படும் பாதச்சுவடுகள் இரண்டு படிகட்டுகள் வடபுறமுள்ள ஒரு பாறையில் பொறிக்கப்பட்டுள்ளன. இடதுபுறம் மலையன் கீழ்புறம் வீரபத்திரர் கோயிலும், விநாயகர் சிலையும் உள்ளன.

இம்மலைமீது பக்தர்கள் சென்றடைய 12 அடி அகலத்தில் 365 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நடந்து வந்த களைப்பு தீர ஓய்வு எடுத்துக் கொள்ளும் இடத்திற்கு காலாற்றுபடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்விடத்தில் தண்ணீர் பந்தல் மண்டபம் உள்ளது.

இக்கோயிலின் இடது புறம் பாறையின் மேல் நந்தியும் அதன் கீழ் ஆலமர் செல்வனின் கீழ்பகுதி மட்டும் உடைந்த துண்டு சிற்பங்களாக உள்ளன. கோயில் மேற்கு பகுதியில் துவாரபாலகர் சிற்பம் ஒன்று இரு துண்டாக உடைந்து காட்சியளிக்கிறது. மேலும் வெளிப்புற மதிலின் அடிப்பகுதியில் தேரின் சக்கரம் ஒன்று உள்ளது. கோயிலைச் சுற்றிலும் செங்கற்கள் அதிகமாக சிதறியிருக்கிறது. பலிபீடங்கள் ஒன்றுக்கும் மேற்பட்டுள்ளது. இத்தகைய சிதறல்களைப் பார்க்கும் பொழுது சிறிய கோயிலாக இருந்து கால வெள்ளத்தால் வளர்ச்சியடைந்திருக்கலாம்.

கனககிரீஸ்வரர் கட்டடக் கலை

கருவறை

கனககிரீஸ்வரர் கருவறை சுமார் 8 அடி நீளம் 8 அடி அகலம் அளவுடையது. கருவறையின் மேற்கு சுவர் ஒட்டி சுமார் இரண்டு அடி உயரமான பீடத்தின் மீது வாழைப்பூ போன்ற உருவத்துடன் சுயம்புலிங்க மூர்த்தியாக காட்சியளிக்கிறார்.

கல்வெட்டுகளில் 'திருமலை உடையநாயனார்', 'திருமலை உடையார்', 'திருமலர் உடையார்' எனக்குறிப்பிட்டு உள்ளது.

கருவறையிலிருந்து விமானம் வரை ஆறுபகுதிகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. அதிட்டான அமைப்பு ஏதும் அணி செய்யவில்லை. சுவர் பகுதியில் தேவகோட்டங்கள் அதன் மேல் மகர தோரணங்கள் அலங்கரிக்கிறது. கூரைப்பகுதியில் கபோதம் பகுதி உள்ளது. இதில் கர்ணகூடுகள் அலங்கரிக்கின்றன.

விமானம்

விமானம் ஒருதளத்தினை கொண்டதாக உள்ளது. கர்ணகூடு, பஞ்சரம், சாலை என மாறிமாறி வருகிறது. கிரீவதளத்தில் ரிஷபங்கள் நான்கு மூலைகளிலும் அழகு செய்கின்றன. வேசர சிகர அமைப்பு உடையது. கலசம் சிதைந்துவிட்டது.

கருவறை புறச்சுவரில் தேவகோட்டங்கள் உள்ளன. தேவகோட்டத்தில் தெய்வ உருவங்கள் வைக்கப்படவில்லை. அதற்கு மாறாக, தேவகோட்டமாடம் அலங்கரிக்கும் மகரதோரணங்களில் புடைப்பு சிற்பங்கள் உள்ளன. தெற்கு திசையில் மட்டும் ஆலமர் செல்வராம் தக்ஷிணாமூர்த்திக்கு மண்டபம் அமைத்து உள்ளனர். மகரதோரணங்களில் விநாயகர், சங்கு ஊதும் பூதகணம், புடைப்புச் சிற்பங்களாக காட்சியளிக்கின்றன. மேற்கு பகுதியில் லிங்கோத்பவர் புடைப்பு சிற்பமாக மகர தோரணத்தில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வடக்கு பகுதியில் பிரம்மா, துர்கை, பால்சுரக்கும் பசு முதலிய உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கோயிலுக்கு காரண ஆகமப்படி பூஜை செய்து வருகிறார்கள்.

திருச்சுற்று

நுழைவாயிலின் இடது, வலதுபுறம் சுமார் 5½ அடி உயரமான திருச்சுற்று மேடை உள்ளது. இத்திருச்சுற்று காண "ப" வடிவம் போல உள்ளது. தெற்கு பிரகாரத்தின் கிழக்கு பகுதியில் மடப்பள்ளியும், அதனை அடுத்து அருணகிரிநாதரால் 'அரியவையர்கள்' எனத் தொடங்கும் திருப்புகழ் நாயகனாம் முருகக்கடவுள் ஆறு முகங்களோடும் பன்னிரு கரங்களும் மயில் மீது அமர்ந்த நிலையில் முருகன் சந்நிதியும், காசி விசாலாட்சி சந்நிதியும் உள்ளன. வடக்கு பிரகாரத்தில் பாழடைந்த மண்டபம் ஒன்றும், உற்சவ மேடை ஒன்றும், கிழக்கு பகுதியில் கிடங்கு ஒன்றும் உள்ளது.

இத்திருச்சுற்று முழுவதும் நூற்று ஐம்பத்தேழு தூண்கள் உள்ளன. இத்தூண்களின் அமைப்பு கீழ்பகுதி நான்கு பட்டைகள், நாகபந்தம், அதற்கு மேல் ஒரு சில தூண்கள் பதினாறு பட்டைகளும் ஒரு சில தூண்கள் உருளை வடிவமாக உள்ளது. கீழ் பகுதியில் உள்ள பட்டைகளில் ஒரு சில தூண்களில் சிற்பங்கள் உள்ளன.

அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபம் சுமார் 12 அடி நீளம், அகலம் உடையது. சதுர வடிவமாக உள்ளது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் விஜயநகர கால கலைப்பாணியில் உள்ளன. ஏழு அடி உயரமுடையது. இத்தூண்களின் அமைப்பு கீழிருந்து மேலாக நான்கு பட்டை, நாகபந்தம், பதினாறு பட்டைகள், நான்கு பட்டைகள், பதினாறு பட்டைகள், நான்கு பட்டைகள் என்ற அமைப்புடன் உள்ளது. இம்மண்டபத்தில் நந்தியும் பலிபீடமும் உள்ளது.

தியான மண்டபம்

நுழைவாயிலில் இருந்து கிழக்கு திருச்சுற்று பிரகாரத்தை கடந்து சென்றால் மண்டபம் உயரமான மேடையில் அமைந்துள்ளது. மேடையின் உயரம் 4 அடி அளவுடையது. மேடையின் அடிப்பகுதி அதிட்டான அமைப்புடையது. அவை முறையே உபானம், ஜகதி, கம்பு. கண்டம், மணிவரி குமுதம், பட்டிகை கபோதப் பகுதியுடன் காட்சி

தருகிறது. இம்மண்டபத்தில் 15 தூண்கள் உள்ளன. இத்தூண்கள் முழுவதும் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

விநாயகர் சந்நதி

திருச்சுற்றின் மேற்கு பகுதியில் வலது மூலையில் விநாயகர் சந்நதி அமைத்துள்ளனர். இந்த சிற்றாலயம் நான்கு தூண்களின் இடைப்பட்ட பகுதியை செங்கற்களால் கட்டப்பட்டு உள்ளது. மேலே கூம்பு வடிவமான கோபுரம் அமைத்து உள்ளனர். கருவறையின் மேற்கு புறச்சுவர் பகுதியில் மேடை அமைத்து அதில் விநாயகரை பிரதிஷ்டை செய்துள்ளனர்.

முருகன் சந்நதி

இக்கருவறை நான்கு தூண்களின் இடைப்பட்ட பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளனர். இங்கு முருகனை ஆறு முகங்களோடும் பன்னிரு கரங்களோடு மயில் மீது சுகாசனத்தில் அமர்ந்து காட்சி தருகிறார். இங்குதான் 'அரிவையர்' எனத் தொடங்கும் திருப்புகழ் அருணகிரிநாதர் பாடியதாக தெரிகிறது.

விசாலாட்சி அம்மன் சந்நதி

முருகன் சந்நதி அமைந்து உள்ளது. இம்மூன்று சந்நதிகள் ஒரே அமைப்புடன் காணப்படுகிறது. கருவறையின் அளவு 4 அடி நீள அகலங்களுடன் சதுர வடிவில் காணப்படுகிறது.

முன் மண்டபம்

முன்மண்டபம் செவ்வக வடிவமுடையது. 9X4 என்ற வரிசையில் 36 தூண்கள் கொண்டுள்ளது. தூண்கள் உயரம் 3மீ 51செ.மீட்டரும், போதிகை 35 செ.மீ. உயரமுடையது. அகலம் 1 மீட்டரும் கொண்டது. மண்டபத்தின் கூரைப்பகுதி சுண்ணாம்புக் காரை கொண்டு மெழுகி அதில் கபோதப் பகுதியும் அமைத்துவிட்டனர்.

நந்தி மண்டபம்

உயரமான மேடையில் அதிட்டான அமைப்பு முறையே உபானம், பத்மஜகதி, கம்பு, மணிவரிக் குமுதம் மகாபட்டிகை, கபோத

அமைப்பு கொண்ட மேடை மேல் நந்தி வீற்றிருக்கிறது. நான்கு சிறிய தூண்கள் தாங்கி நிற்கும் சிறிய மண்டபமாக அமைத்து உள்ளனர். தூண்கள் மேல் கபோதப் பகுதியில் சிம்மகீர்த்தி முகங்கள் அலங்கரிக்கின்றன.

இம்மண்டபம் 2மீ 47 செ.மீ. அளவுடையது. மேடையின் உயரம் 95 செ.மீ. தூண் 1மீ 20 செ.மீ கிரீவம், பிரஸ்தரம் 32 செ.மீ. அளவுடையது. நந்தியின் நீளம் 1மீ 08 செ.மீ. உயரம் 70 செ.மீ அளவுடையது. விஜயநகர கால அமைப்பில் நந்தியின் உருவம் காணப்படுகிறது.

கொடிமரம்

எளிய உபானம், ஜகதி மகாபட்டிகை போன்ற அமைப்புடைய மேடையில் சுமார் 10மீ உயரமுடைய கொடிமரம் உள்ளது.

பலிபீடம்

பலிபீடம் அதிட்டான அமைப்பு முறையே உபானம், பத்மஜகதி, கம்பு எண் பட்டை குமுதம், மகாபட்டிகை போன்ற அமைப்புடைய மேடை மீது பலிபீடம் காணப்படுகிறது.

கற்சிற்பங்கள்

விநாயகர்

சற்று உயரமான பீடத்தில் பத்மத்தின் மீது அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேலிரு கைகளில் அங்குசம், பாசமும், கீழிருகைகளில் தந்தம் மோதகம் ஏந்தியவாறு உள்ளார். இடம்புரி விநாயகராக காட்சியளிக்கிறார். பீடத்தின் மேல் விநாயகரின் வாகனமான எலி மேல் நோக்கி பார்த்தவாறு உள்ளது.

ஆறுமுகன்

மயிலின் மீது சுகாசனத்தில் வீற்றிருக்கிறார். இறைவனின் இடக்கரத்தில் மேலிருந்து கீழாக வில், வஜ்ஜரம், கேடயம், சங்கு, பாசம், வரதமுத்திரையும், வலது கரத்தில் அம்பு, கத்தி, சக்திப்படை, சக்கரம், அங்குசம் அபய முத்திரையுடன் காட்டியுள்ளார். மகுடம் தரித்தவாறு,

செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் கண்டசரம், முத்துமாலை, முப்புரிநூல், சன்னவீரம் மார்பிலும் காட்டப்பட்டுள்ளன.

விசாலாட்சி அம்மன்

உயரமான மேடை மீது பத்மத்தில் சமபாக நிலையில் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறாள். மேலிரு கைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும் கிழிருகைகளில் அபய வரத முத்திரை காட்டியும் உள்ளது. விசாலாட்சி சந்நிதி எதிரில் சிறிய நந்தி பலிபீடம் உள்ளது.

சண்டிகேஸ்வரர்

கருவறையின் வடதிசையில் சண்டிகேஸ்வரர் சுகாசனத்தில் வலது காலை தொங்கவிட்டும் இடதுகாலை மடக்கியும் காட்டப்பட்டுள்ளது. தலையில் மகுடமும், செவிகள் மகர குண்டலங்களும், கழுத்தில் அட்டிகையும் கண்டசரமும், முத்து மாலையும், ஆடையும் காலில் கழல்களும் அலங்கரிக்கின்றன. வலது கையில் தண்டும் இடது கை நிலத்தை தொடும் கையாக காட்டியுள்ளனர்.

சப்தமாதர்கள்

கருவறையின் தெற்கு பிரகாரத்தில் கிழக்கு பகுதியில் மூன்று பலகைக் கல்லில் மிக நேர்த்தியாக செதுக்கியுள்ளனர். சப்தமாதர்கள் அனைவரும் சுகாசனத்தில் வலது காலை தொங்கவிட்டும் இடது காலை மடக்கியும் அமர்ந்துள்ளனர். கரண்டமகுடம், செவிகளில் வட்டக்குழைகள், கழுத்தில் அட்டிகை, சரப்பளி, மேல் கையில் தோள் வளையும், கீழ்கையில் கைவளையும், காலில் பாதசரமும், கடிலும் அணிந்துள்ளனர். மடிப்புடன் கூடிய ஆடை அணிந்துள்ளனர். மேலிரு கைகளில் அவரவர்களுக்கு உண்டான ஆயுதங்களும் கீழிருகைகளில் அபய, வரத முத்திரை காட்டியுள்ளனர். இதன் காலம் 14-ஆம் நூற்றாண்டாகும்.

பிராமி :- பின்னிரு கரங்களில் அக்கமாலை, கெண்டி காட்டப்பட்டுள்ளது.

மகேஸ்வரி :- மான், மழு, கொடியில் ரிஷபம்

கௌமாரி :- வஜ்ஜரம், அக்கமாலை, கொடியில் மயில்

வைஷ்ணவி :- சக்கரம், சங்கு, கொடியில் வணங்கிய கருடன்

வாராகி :- கலப்பை, தடி, கொடியில் சிங்கம்

இந்திராணி :- அங்குசம், வஜ்ஜரம், கொடியில் யானை

சாமுண்டா :- சூலம், கபாலம், கொடியில் ஆந்தை

வீரபத்திரர்

உயரமான பீடத்தில் தாமரை இருக்கையில் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். பீடத்தின் இருபுறமும் சிம்மங்கள், நடுவில் பூதகணங்கள் வாத்தியம் வாசித்து நடனமிடுவது போல காட்டப்பட்டுள்ளது. பீடத்தின் மேல் பகுதி கபோதம் போன்று அதில் கர்ணகூடுகள் காட்டப்பட்டுள்ளன. பீடத்தின் மேல் தாமரை பீடம் அமைந்துள்ளது.

நின்ற திருக்கோலத்தில் இடையை ஒடித்தவாறு காட்சியளிக்கிறார். நான்கு கரங்களுடன், வலதுபுறம் கீழ் பகுதியில் அஞ்சலித்த நிலையில் நந்தி தேவர் காட்டப்பட்டுள்ளார். மேலிரு கரத்தில், வலது கையில் அம்பும், இடது கையில் ஊன்றிய நிலையில் கேடயம் வைத்துள்ளார்.

தலையானது ஜடாமகுடமும், நெற்றியில் நெற்றிப்பட்டமும், திலகமும், நீள் செவிகளில் வட்டமான குழைகளும், கழுத்தில் அட்டிகை, சரப்பளியும், மார்பில் முத்துமாலையும், மப்புரி நூலும், இடையில் பதக்கம் கோர்த்த மேகலையும், முழங்கால் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. மேல் கைகளில் பதக்கம் கோர்த்த வளையும், கீழ் கைகளில் காப்பும், கீழ்கால் வரை தொடைமாலையும், பாதங்களில் பாதசரம், கழல், தண்டை அணிந்து காட்சியளிக்கிறார். நந்தி தேவர் அஞ்சலித்த நிலையில் ரிஷப முகமும், மனித உடலும் கீழ்கால் வரை ஆடையும் காட்டப்பட்டுள்ளது. பின்பக்கம் திருவாட்சி அதில் நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் காட்டப்பட்டுள்ளது.

செப்புத் திருமேனிகள்

விநாயகர்

தாமரை பீடத்தின் மீது வலதுகாலை ஊன்றி இடதுகாலை சற்று முன் வைத்த நிலையில் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். மேல் வலக்கையில் அங்குசம், இடக்கையில் பாசத்தை ஏந்தியுள்ளது. கீழ் வலக்கை ஒடிந்த தந்தத்தை பற்றியுள்ளது. இடக்கை மோதக உருண்டையை ஏந்தி உள்ளது.

மனித உடலும் யானைமுகம் கொண்ட விநாயகரின் துதிக்கை இடம்புரியாக உள்ளது. விநாயகரின் தலையில் கரண்ட மகுடமும், மார்பில் முத்துமாலை , உதரபந்தம் காலில் கழலும் அணிந்துள்ளார்.

சோமாஸ்கந்தர்

இந்த திருமேனி நீண்ட பீடத்தில் தாமரை இருக்கையில் சிவன், உமை, ஸ்கந்தன் ஆகிய மூவரும் அமர்ந்து காட்சி தருகின்றனர்.

சிவன்

இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு நான்கு கரங்களுடன் சுகாசனத்தில் அமர்ந்திருக்கிறார். சிவன் மேல் வலது கையில் மழுவாயுதத்தையும் இடது கை மானையும் பற்றியுள்ளது. கீழ் வலது கை அபய முத்திரையுடனும் இடது கை சிம்ம கர்ண முத்திரையுடனும் காணப்படுகிறது.

சிவனது தலை சடைமகுடமும், மகுடத்தின் மேல் இடப்புறம் இளம்பிறையும், சிவனது நெற்றியைச் சுற்றி நெற்றிப்பட்டம் அழகு செய்கிறது. செவிகளில் வலதுபுறம் மகரக்குழையும், இடப்புறம் வட்டக் குழையும் அணிந்துள்ளார். கழுத்தில் பொற்சரடு, சரப்பளி, முத்துமாலை, முப்புரிநூல் மார்பில் வனப்பூட்டுகிறது. இடுப்பிலிருந்து மேல் தொடை வரை தோலாடை காட்டப்பட்டுள்ளது. இடையின்

முன்புறம் சிம்ம முகப்புடைய கச்சையும் முத்துச்சரமும் அழகு செய்கிறது. காலில் கழல் அணிந்து உள்ளார்.

உமை

சிவனின் இடப்புறம் உமையவள் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். தலையில் கரண்ட மகுடமும், நீள் செவிகளில் மகரக்குழைகளும் கழுத்தில் கண்டசரம், முத்துவடம், மணிவடம், சரப்பளி ஆகியவையும் அணி செய்கின்றன. மெல்லிய புரிநூல் இரு தனங்களுக்கு இடையில் செல்கிறது. இடையைச் சுற்றி அரையணி, இடைவார், மேகலை அழகூட்டுகின்றன. மேற்கையில் கேயூரம், காப்பு, முத்துவளை அழகு சேர்க்கின்றன. பாதங்களை பாதச் சதங்கை அலங்கரிக்கின்றன.

குமரன்

இந்த பீடத்தின் மேல் இறைவன், இறைவிக்கு நடுவில் குழந்தையாக குமரன் காட்டப்பட்டுள்ளார். இரு கரங்களில் அல்லி மலரை பிடித்து விளையாடுகிறார். தலையில் கரண்ட மகுடமும், நெற்றியைச் சுற்றிலும் நெற்றிப்பட்டம், காதுகளில் மலர்க் குழைகளும், கழுத்தில் முத்துவடம், மணிவடம், சரப்பளி, மார்பில் சன்னவீரம் அலங்கரிக்கிறது. இடையில் அரைஞாண், பாதங்களில் பாதசரம் அழகு செய்கின்றன.

சுக்கிரவார அம்மன்

இப்படிமம் தாமரை பீடத்தின் மீது நின்ற கோலத்தில் தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரகுண்டலங்கள் தரித்தும், முன் வலது தோளில் நீண்ட மழு ஆயுதம் சார்த்தப்பட்டுள்ளது. நெற்றியில் நெற்றிப்பட்டமும், கழுத்தில் கண்டசரம், சரப்பளி, முத்துகோர்த்த மாலை அணி செய்கிறது. முப்புரி நூலம், காலில் கழல்களும் அணி செய்கின்றன. மேற்கைகளில் தோள் வளை, கீழ் கைகளில் முத்துவளை, கால்களில் பாதச் சதங்கை அணிசெய்கின்றன.

வலது கை சிம்மகர்ண முத்திரையுடனும், இடது கை வரத முத்திரையுடனும் காண்பிக்கப்பட்டுள்ளது.

சண்டிகேஸ்வரர்

சண்டிகேஸ்வரர் தாமரை இருக்கை மீது அஞ்சலித்த நிலையில் உள்ளார். மகுடம் தரித்த தலையுடன், காதுகளில் மகர குண்டலங்கள் தரித்தும் முன் வலது தோளில் நீண்ட மழு ஆயுதம் சார்த்தப்பட்டுள்ளது. நெற்றியில் நெற்றிப்பட்டமும், கழுத்தில் கண்டசரம், சரப்பளி, முத்துகோர்த்த மாலை அணி செய்கிறது. முப்புரி நூலும், காலில் கழல்களும் அணி செய்கிறது.

தனி அம்மன்

தாமரை பீடத்தின் மீது திரிபங்க நிலையில் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். தலையில் கரண்ட மகுடம், வலது கை சிம்ம கர்ணமுத்திரை, இடது கை வரத முத்திரையும் அனல் திருவாட்சி காட்டப்பட்டுள்ளது. செவிகளில் குண்டலம் கழுத்தில் சரப்பளி, கண்டசரம், முத்துமாலை, காலில் கழல்கள் அணிந்துள்ளார்.

சந்திரசேகரர்

தாமரை இருக்கையின் மீது நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். மேல் வலக்கை மழுவையும், இடக்கை பாயும் மானையும் பற்றியுள்ளது. கீழ் வலது கை அருள் வழங்கும் அபய முத்திரையும், இடது கை வழங்கும் கரமாக வரத முத்திரையுடனும் காட்டப்பட்டுள்ளது.

சடைமுடி தலையிலும், நெற்றியில் பட்டமும் அணிந்துள்ளார். வலது காதில் மகரகுண்டலமும், இடது காதில் வட்டக்குழைகளும் அலங்கரிக்கின்றன. கழுத்தில் கண்டசரம், பொற்சரடு, முப்புரி நூல் காட்டப்பட்டுள்ளது. காலில் கழல் அணியப்பட்டுள்ளது.

சந்திரசேகர அம்மன்

தாமரை இருக்கையில் திரிபங்க நின்ற கோலத்தில் காட்டப்பட்டு உள்ளார். தலையானது கேசபந்தம், மகரக்குழைகள் காதிலும், கழுத்தில் மங்கல நாண், கண்டசரம் மேற்கையில் தோள் வளை கீழ்கையில் காப்பும், பாதசரம் கால்களிலும் தண்டை மேற்காலிலும் அழகு செய்கிறது.

பிரதோஷ நாயகர்– நாயகி

பிரதோஷ நாயகர், நாயகி ஒரே பீடத்தில் வார்க்கப்பட்டுள்ளது. இதனால் இப்படிமத்தை உமாசகித சந்திரசேகரர் எனவும் அழைக்கலாம். சிவனது தலை நீளமான சடைமுடியும் காதுகளில் மகரக்குழையும், வட்டமான ஓலைக்குழையும் அழகு செய்கின்றன. மேலிரு கைகளில் மான், மழு கீழிரு கைகளில் அபயவரத முத்திரையும் அம்மனது கரங்கள் சிம்மகர்ண முத்திரையும், வரதமுத்திரையும் காட்டப்பட்டுள்ளது.

வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமண்யர்

வள்ளி, தெய்வானையுடன் இருக்கும் அழகு நாயகனாம் சுப்ரமணியர் மயிலுடன் காட்சியளிக்கிறார். முருகன் மேலிரு கைகளில் வஜ்ஜரம், சக்திப் படை ஏந்தியும், கீழிருகைகளில் அபய, வரத முத்திரையும் காட்டப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம் தரித்தும், நெற்றியில் நெற்றிப்பட்டம், செவிகளில் குண்டலங்களும் மார்பில் முப்புரிநூல், முத்துமாலை கழுத்தில் சரப்பளி, கண்டசரம் முதலியனவும் அலங்கரிக்கின்றன. சன்னவீரம் காட்டப்பட்டுள்ளது. காலில் கழல்கள் அணி செய்கின்றன.

வள்ளி அழகு நாயகனின் வலப்பாகத்தில் தாமரை இருக்கை மீது இடையை வலப்புறமாக ஒடித்து இரு கரங்களுடன் திரிபங்கி நிலையின் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள் இடக்கை தாமரை மலரைப் பிடித்தும் வலக்கரம் தாழ்கரமாக உள்ளது. தெய்வானை இடப்பாகம் தாமரை பீடத்தில் திரிபங்கியாக நின்றுள்ளார். வலது கரம் நீலோற்பல மலரை ஏந்தியும், இடது கரம் தாழ்கரமாக காட்டப்பட்டுள்ளது.

இவ்விரு தேவியர்கள் தலையில் கரண்டமகுடமும், செவிகளில் குண்டலங்களும், கழுத்தில் கண்டசரம், அட்டிகை, பொற்சரடு, மார்பில் முத்துமாலை அணிசெய்கின்றன. மேற்கைகளில் தோள் வளையம், கீழ்கரங்களில் வளையும், கால்களில் கழல்கள் அணி செய்கின்றன.

நடராஜர்

தாமரை பீடத்தில் ஆடும் அம்பலத்தானின் வலது கால் முயலகன் மீது ஊன்றிய நிலையில் இடது காலை தூக்கி நடனமிடும் கோலத்தில் அண்ணல் அழகு செய்கிறார். தலையில் ஜடாமகுடத்துடன் விரிசடையும், மேலிரு கரத்தில் ஒலியெழுப்பும் உடுக்கை அனலும் காட்டப்பட்டுள்ளது. கீழிரு கரம் அபய யானை துரிக்கரம் போன்று காட்டப்பட்டுள்ளது.

சிவகாம சுந்தரி

தாமரை பீடத்தில் இரு கரங்களுடன், திரிபங்கியாக காட்சி யளிக்கிறார், சிவகாமியின் வலதுகரம் சிம்மகர்ண முத்திரையும் இடதுகரம் தாழ்கரத்துடனும் காட்சியளிக்கிறார். தலையில் மகுடம், நெற்றியில் நெற்றிப்பட்டம், செவிகளில் மகரக்குழைகள், கழுத்தில் கண்டசரம், அட்டிகை, மேற்கை தோள்வளை, முன் கையில் காப்பு கைவளை ஆகியவை அணியப்பட்டுள்ளது. கால்களில் காப்பு, அணிந்து காட்சியளிக்கிறார்.

சுந்தரமூர்த்தி

தேவாரமருளிய சுந்தரரின் திருமேனி தாமரை இருக்கை மீது இடது காலை முன் வைத்து இடுப்கை வலதுபுறமாக சாய்த்து இரு கரங்கள், இராச வசீகரத்துடன் காட்டியுள்ளனர். தலையில் கிரீடமகுடம், மார்பில் முப்புரி நூல் முன் கைகளில் காப்பும், கால்களில் கழல் அணிந்து காணப்படுகிறார்.

மாணிக்கவாசகர்

பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்து திருவாசகம் அளித்த வாதவூர் அடிகள் செப்புத் திருமேனி நடராசர் சபையில் உள்ளது. தாமரை இருக்கை மீது நின்ற நிலையில், வலது கரத்தில் அக்கமாலையும் இடது கையில் ஏடு ஏந்தியும் காட்டப்பட்டுள்ளது. தலையில் சுருண்ட கேசத்தில் உருத்திராட்ச மணிகள் சுற்றியுள்ளன. காதுகளில் அணிகள் இல்லை. கழுத்து, மார்பு, தோள்களில் ருத்ராட்ச மணிகள் அணி செய்கிறது.

அப்பர்

திருவாமூரில் பிறந்த இவரின் செப்புத் திருமேனி தாமரை இருக்கை மீது இரு கைகள் கூப்பி இறைவனை வணங்கும் நிலையில் உள்ளது. அப்பரது வலது தோளில் உழவாரப்படை அணி செய்கிறது. உருத்திராட்சம் அங்கங்களை அணி செய்கிறது.

சம்பந்தர்

ஆளுடைப்பிள்ளையான இவர் தாமரை இருக்கையில் நின்றகோலத்தில் காட்சியளிக்கிறார். வலதுகை சூசி முத்திரையும் இடது கை தாளம் ஏந்திய நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. தலை முடிந்து ருத்ராட்சம் தலையை அலங்கரிக்கிறது. அங்கங்கள் ருத்ராட்ச மணிகள் சிறியதும் பெரியதுமாக அணி செய்கின்றது.

சுக்கிரவார அம்மன்

தாமரை இருக்கை மீது திரிபங்கியாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். தலையில் கரண்ட மகுடம், செவிகளில் குண்டலங்கள், மேலிரு கரம் அங்குசம், பாசம் ஏந்தியும் கீழிரு கரம் அபய வரத முத்திரையும், கழுத்தில் கண்டசரம், அட்டிகை, சரப்பளி ஆகியவை அணி செய்கின்றன. மேல் கை தோள்வளை கீழ்கையில் வளை அணி செய்கிறது. காலில் கழல் அணிந்தும் பாதங்களில் பாதசரம் அணி செய்கிறது.

அஸ்திர தேவர்

சதுரமான உலோகத் தகட்டின் மீதுள்ள தாமரை இருக்கையில் செங்குத்தாக உயர்ந்த தூணின் மேலுள்ள பலகையில் சூல வடிவில் வார்க்கப்பட்டுள்ளது. செங்குத்தாக உள்ள தூண் எண் பட்டை வடிவில் உள்ளது.

மரச்சிற்பங்கள்

தேவிகாபுரம் கோயிலின் சிற்பங்களையும் செப்புத் திருமேனிகளையும் கண்டு மகிழ்ந்த நாம் அடுத்து கோயிலின் திருவிழாக்காலங்களில் இறைவன் திருவீதி உலா வருவதற்கான மரத்தாலான வாகனங்கள் மிக நேர்த்தியாகவும் நுணுக்கமாக செதுக்கியுள்ளனர். அதனை கீழே காண்போம்.

மூஷிக வாகனம்

விநாயகரின் வாகனமான மூஷிகம் இங்கு தலையை உயர்த்தி நிற்கிறது. முகத்தில் முகவாரும் கழுத்தைச் சுற்றிப் பட்டையான கழுத்துவாரும், மேல் உடலில் வேலைப்பாடு மிக்க வரிப்பும் பக்கங்களில் இடைவாரும், கால்களில் காப்பும் அமைந்து இந்த மூஷிகம் காணப்படுகிறது.

குதிரை வாகனம்

குதிரை வாகமானது கால்களை மேலே தூக்கி மடித்த நிலையில் விரைந்து பாய்ந்து செல்லும் புரவியாக பாங்குடன் திகழ்கிறது.

பூத வாகனம்

கயிலையில் இறைவனும், இறைவியும் நடனமிட பூதகணங்கள் வாத்தியக் கருவிகளை வாசிக்கின்றன. பூதகணம் மிக நேர்த்தியாக கோரைப் பற்களுடன் ஆஜானுபாகுவான உடலுடன் காட்சியளிக்கிறது.

சூரிய பிரபை

மனிதன் முதலில் இயற்கை தெய்வங்களை வணங்கிவந்தான். எனவே இறைவன் சூரியன் மீது அமர்ந்து வலம் வருவதற்காக உருவாக்கியுள்ளனர். இவ்வாகனம் வட்டவடிவமாக மரத்தால் செய்யப்பட்டுள்ளது.

நாக வாகனம்

இறைவன் தனது கழுத்தில் அரவத்தினை சுற்றியிருக்கிறான் நாகவாகனமானது ஐந்து தலைநாகம் படம் எடுத்தாற் போன்று காணப்படும். அதன் உடல் பகுதியானது வட்டமாக சுருட்டி மேடை போல் காட்சியளிக்கிறது.

இராவணேஸ்வர கைலாச வாகனம்

பத்து தலைகளுடன் இருபது கரங்களுடன் அரசனுக்குரிய உடைகளுடன் மண்டியிட்ட நிலையில் மிக கம்பீரத் தோற்றத்துடன் காட்சியளிக்கிறது.

தங்க ரிஷபம் – வெள்ளித் தேர்

பண்டைக் காலம் முதல் விஜயநகரர் காலம் வரை பொருளாதார நிலை மேலோங்கி இருப்பதை காண்பிக்க கோயிலின் வாகனங்கள் ஒரு சில தங்க, வெள்ளி ஆக அமைந்துள்ளன. முதலில் மரத்தால் செய்த பிறகு அதற்கு மெல்லிய தகடுகளால் தங்கத்தாலோ, வெள்ளியாலோ வேய்வர். ரிஷபாரூடரான சிவபெருமானின் வாகனமான காளைக்கு குறுங்கொம்பும் பக்கங்களில் விரிந்த கண்ணும், நிமிர்ந்த கழுத்தும், உறுதியான கால்களும் மிகவும் நேர்த்தியாக செதுக்கியுள்ளனர்.

வெள்ளித் தேர்

இரு சக்கரங்களுடன் மேடை மீது முன்பாக இரு குதிரைகளுடன் பூதகணங்கள் தாங்கி நிற்க தட்டு போன்ற வடிவில் அதில் இறைவனின் திருவுருவங்களை புடைப்பு சிற்பங்களாக செதுக்கியுள்ளனர். இதிலிருந்து தூண்கள் போல செதுக்கி கூரைப்பகுதியை தாங்கி நிற்பது போல காண்பித்துள்ளனர். வேசர சிகர விமானம் போல மரத்தால் மிகவும் நுணுக்கமாக செதுக்கியுள்ளனர். அதன் மீது கலசம் வைத்துள்ளனர். இது போன்று வாகனங்களை மரங்களால் மிகவும் நுணுக்கத்துடன் அடர்த்தியாகவும் வனப்புடன் செதுக்கி உள்ளனர்.

வாகனங்கள்

பெரியநாயகி, கனககிரீஸ்வரர் இரு ஆலயங்களுக்கும் சேர்த்து அதிகார நந்தி, பூதம், சூரிய, சந்திர பிறைகள் நாகவாகனம், ரிஷபவாகனம், மயில், அன்னம், குதிரை, பெருச்சாளி (மூஷிகம்) இராவணன், தெருவடிச்சான், கந்தர்வ பதுமைகளுடன் கூடிய இந்திர வாகனம் முதலிய வாகனங்கள் இக்கோயிலில் உள்ளன.

தேர்

தமிழ் நாட்டிலுள்ள தேர்கள் உலகப் புகழ்வாய்ந்தவை. தமிழகத்தில் பழங்காலம் தொட்டு தேர்கள் இருந்து வந்துள்ளன. இத்தேர்கள் விழா நாட்களில் பயன்படுத்துகின்றனர். தமிழ்நாட்டில்

மரத்தை நுணுக்கமாக செதுக்கி வேலை செய்யும் தச்சர்கள் காலந்தோறும் இருந்து வந்துள்ளனர். தேர்களில் அழகிய மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டன. எனவே, காலந்தோறும் சிறந்த தேர்களை உருவாக்கவல்ல சிற்பிகளும், உயர்ந்த சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த தேர்களும் இருந்து வந்துள்ளன. அவைகள் யாவும் மரத்தால் அமைக்கப்பட்ட காரணத்தால் கால வெள்ளத்தில் நீடித்திருக்கவில்லை இருப்பினும் விஜயநகரர் கால அளவில் எஞ்சியுள்ள தேர்களையே இன்றும் நாம் பழைய தேர்களாக கொள்ள வேண்டியுள்ளது.

இக்கோயிலுக்கு 12 அடி விட்டமும் 6 சக்கரங்கள் கொண்டதுமான ஒரு பெரிய திருத்தேர் உள்ளது. இத்தேர் 50 வருடங்களாக வலம் வந்து பழுதடைந்துவிட்டது. தற்பொழுது தேவிகாபுரம் கிராமப் பொதுமக்கள் புதிய தேரை உருவாக்கியுள்ளனர்.

புடைப்புச் சிற்பங்கள்

புடைப்புச் சிற்பங்கள் என்பது கல்லில் சற்று புடைப்பாக செதுக்குவதாகும். இத்தகைய சிற்பங்கள் பல்லவர்கள், சோழர், பாண்டியர், விஜயநகரர் ஆகிய காலகட்டங்களில் ராஜகோபுரத்தின் சுவர்களிலும், அதிட்டான அமைப்பில் உள்ள பட்டிகைகளிலும், சுவர்கள் போன்ற இடங்களில் புடைப்பு சிற்பங்களை செதுக்குவது இயல்பு. இதே போல் தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன், கனககிரீஸ்வரர், திருக்காமேஸ்வரர் ஆலயங்களில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கியுள்ளனர்.

பெரிய நாயகி அம்மன் இராஜகோபுரத்தின் வலது இடதுபுறச் சுவர்களில் நந்திதேவர் 3 அடி உயரமாக செதுக்கியுள்ளனர். இரண்யனை அழிக்கும் நரசிம்மமூர்த்தி, திருமால், அஞ்சலி செய்யும் அனுமன், விஜயநகர காலத்து பெண்கள், லிங்கத்தை பூஜிக்கும் அனுமன், பைரவமூர்த்தி அன்னம், யானை முதலியன மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன.

அதிட்டான பகுதியான மகாபட்டிகைகளில் புராணச் செய்திகளையும் யானை, யாளி, பூதகணங்கள் அன்னம், முதலியனவும் நடனமிடும் பெண்கள், இசைக்கருவிகளை இசைக்கும் பூதகணங்கள், விஜயநகர காலத்து பெண்கள் மற்றும் பல்வேறு உருவங்களை செதுக்கியுள்ளனர்.

அதிட்டானப் பகுதியானது வளைந்தும், குறுகியும், அகன்றும் செல்லும் அப்பொழுது சுவர் விளிம்பு பகுதியில் சிறிய சிறிய சதுரமான பகுதிகள் உண்டாக்கப்பட்டு இப்பகுதிகளில் புடைப்பு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு-

1. வட்டமாக எட்டு பெண்கள்
2. இருகரங்களுடன் கூடிய பிள்ளையார்
3. 16 கரங்களுடன் கூடிய விநாயகர்
4. மகிஷாசுரமர்த்தினி
5. மல்யுத்த காட்சி
6. பெண் சிற்பங்கள்
7. உமையவள்
8. முனிவர்கள்
9. நான்கு கரங்களுடன் கூடிய விநாயகர்
10. சிவன்

இது போன்று பல்வேறு வகையான உருவங்களை புடைப்புச் சிற்பங்களாக செதுக்கியுள்ளனர்.

மதிற்சுவர்களில் புடைப்பு சிற்பங்கள் மூன்று வரிசைகளில் யானை, வராகம், குதிரை போன்றவை செதுக்கி உள்ளது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இது தவிர பெரிய நாயகி அம்மன் வெளிப்புற மதிற்சுவரான தெற்கு பகுதியின் மேற்கு மூலையில் விஜயநகரப் பெண்கள் நான்கு நபர்கள் தேர் இழுத்துச் செல்லும் காட்சி காண்பவர் கண்களை கவர்ந்து நம்மையும் விஜயநகர காலத்திற்கே அழைத்துச் செல்கிறது.

தூண் சிற்பங்கள்

விஜயநகரர் காலத்தில் தூண்களில் எண்ணற்ற சிற்பங்களை செதுக்கும் பாங்கு மிக நேர்த்தியாகவும் உருவங்களின் அங்க அளவுகள் நளினம் அழகாக உள்ளது. தேவிகாபுரம் பெரியநாயகி அம்மன் மற்றும் கனககிரீஸ்வரர் கோயில்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தூண்கள் அமைந்துள்ளன. விஜயநகரர் காலத்திலேயே மிகவும் சாதாரண அமைப்பு கொண்ட தூண் மட்டும் இங்குள்ளன. குறிப்பாக வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயில் கல்யாண மண்டபத்திலுள்ள தூண்கள் பிள்ளைக்கால்களுடன் கூடிய சிறப்பு மிக்க தூண்கள் உள்ளன. அதைப் போல இங்கு அமையவில்லை இருப்பினும் அதன் பட்டைகளில் உள்ள சிற்பங்கள் சிறப்பு மிக்கவை.

தூண் அமைப்பு

தூணின் அமைப்பு கீழ் இருந்து மேலாக நான்கு பட்டை, பதினாறு பட்டை கட்டுபந்தத்துடன், ஒரு சில தூண்களில் இல்லாமலிருக்கும், நான்கு பட்டை, 16 பட்டை, நான்கு பட்டை, மேலே பூமுனை போதிகை இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பட்டைகளில் உள்ள சிற்பங்கள் பின்வருமாறு:-

1. அம்மன் இறைவனை வழிபடும் காட்சி
2. வியாக்ரபாதர் ஈசனைத் துதித்தல்
3. யானை வழிபடுதல்
4. கஜசம்ஹார மூர்த்தி
5. பிட்சாடனர்
6. மோகினி
7. விநாயகர்
8. ரிஷப குஞ்சரம்
9. யானை போன்று சித்தரிக்கும் 16 பெண்கள்
10. சங்கு சக்கர தாரியான திருமால்
11. இரணியனை வதம் செய்யும் நரசிம்மர்

12. வேணுகோபாலன்
13. இலிங்கத்தை அரவணைத்த மார்கண்டேயன்
14. கூப்பிய கரத்துடன் பிரகலாதன்
15. மயில் மீதமர்ந்த முருகன்
16. நர்த்தண கணபதி
17. கோவர்த்தனகிரியை குடையாக பிடித்த கண்ணன்
18. சிவகாமசுந்தரியுடன் நடராஜர்
19. வில்லம்புகளுடன் கண்ணப்பர்
20. பிட்சாடனரின் அழகில் மயங்கிய ரிஷிபத்தினிகள் தங்களது நிலை மறந்து அவர் பின்னே செல்லும் காட்சி
21. ஆஞ்சநேயர்
22. சுப்ரமணியர்
23. திருஞானசம்பந்தர் பூம்பாவையை உயிர் பெறச் செய்த காட்சி
24. அமர்ந்த கோலத்தில் பார்வதிதேவி
25. யானை, ரிஷபம் மீதமர்ந்துள்ள சிவபெருமான்
26. நடனமிடும் கோலத்தில் நடராசர்
27. அஞ்சலி ஹத்தராக கருடர்
28. காளியை நடனத்தில் வெற்றி கொண்ட அம்பலவாணர்
29. காலனை ஒடுக்கி மார்கண்டேயருக்கு அருள் செய்யும் காட்சி
30. தேவியருடன் அன்னவாகனத்தில் அமர்ந்த நான்முகன்
31. ஈசனுடன் வாதிட்ட அருச்சுனன்
32. மகிஷாசுரமர்த்தினி
33. பூதகணம்
34. மகரமுக விலங்கின் மேல் முனிவர்கள்
35. விஜயநகர காலப் பெண்கள் இருவர்; ஒருத்தி சாமரம் வீசுகின்ற காட்சி

36. கருவுற்றிருக்கும் பெண்ணை இரு பெண்கள் தாங்கி பிடித்துள்ள காட்சி
37. கயிற்றால் மத்தைக் கொண்டு கடையும் பெண்
38. காலில் முள் எடுக்கும் வேடுவப்பெண்
39. வேட்டைக்காட்சி
40. கண்ணப்பர் காட்டில் வசிக்கும் காட்சி
41. வேடர்கள் இலிங்கத்தை வழிபடும் காட்சி
42. வரம் அருளும் திருமாலின் நின்ற கோலம்
43. கமண்டலம் ஏந்தி நிற்கும் பெரிய முனிவர்

வழிபாடும் விழாக்களும்

தமிழகத்தில் ஆன்றோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பாரம்பரியத்தை தவறாமல் கடைபிடித்து வருகிறோம். அதில் ஒன்று விழாக்கள் கொண்டாடுவது மாதந்தோறும் திருவிழாக்கள் நடைபேற்று வருகிறது. அதே போல் இங்கு மாதந்தோறும் இறைவனுக்கும் இறைவிக்கும் அபிஷேக, ஆராதனை, திருவிழாக்கள் நடத்துகிறார்கள்.

சித்திரை

சித்திரைத் திருமகள் சீரோடு தமது வருடத்தின் முதல் பயணத்தை தொடங்கியதும் இங்கு வசந்த உற்சவம் நடைபெறுகிறது. சதய நட்சத்திரத்தன்று பிறந்த அப்பர் சுவாமிகளுக்கு குருபூஜை தேவாரமளித்த குருவுக்கு விழா நடத்தி வருகிறார்கள்.

திருவோணம் நட்சத்திர நாளன்று சிதம்பரத்தில் உமையுடன் நடனமாடிய நடராஜர் பெருமானுக்கு சிறப்பாக அபிஷேகம் நடைபெறுகிறது. இதைக் கண்டு களிக்க பக்தர்கள் பரவசம் அடைகிறாாகள்.

வைகாசி மாதம் விசாகத் திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மூலம் நட்சத்திரத்தன்று திருஞானசம்பந்தர் குருபூஜை நிகழ்த்தப்படுகிறது.

ஆனியில் உத்திரத்தன்று நடராஜருக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

மகம் நட்சத்திரத்தன்று திருவாசகமருளிய மணிவாசகர் பிரானுக்கு குருபூஜை விழா எடுக்கிறார்கள்.

ஆடி பூரத்தன்று ஏலவார் குழல் அம்மனாம் பெரியநாயகி அம்மன் இறைவிக்கு அபிஷேகம் சிறப்புடன் நடைபெறும்.

சுவாதியன்று தேவாரம் அருளிய இறைவனை வழிபட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளுக் குருபூஜை நடைபெறும்.

ஆவணி சதுர்த்தசி தினத்தன்று நடராஜர் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்

புரட்டாசி சதுர்த்தசியன்று நடராஜர் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்

நவராத்திரி விழா

புரட்டாசி மாதம் கலைமகள், மலைமகள், அலைமகள் ஆகிய முப்பெரும் தேவியருக்கு மூன்று நாட்கள் வீதம் விழா நடைபெறுகிறது. இந்நாட்களின் அம்மனுக்கு தினந்தோறும் ஒவ்வோரு சிறப்பு அலங்காரம் நடைபெறுகிறது. விஜயதசமியன்று வீதிஉலா வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

ஐப்பசி

கனகாசலத்தில் உள்ள கனககிரீஸ்வரருக்கு அன்னாபிஷேகம் நடைபெறும். பக்தி தொண்டர்களுக்கு அவர்களது வீட்டில் இறைவனே அமுதுண்டு மகிழ்ந்திருந்தபொழுது இறைவன் திருவீட்டிலிருந்து பக்தர்களுக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

கார்த்திகை தீபத்திருவிழா

திருவண்ணாமலை அடுத்து தேவிகாபுரம் கனககிரிக்கு முக்கிய இடமளித்துள்ளார்கள். கிரிவலம் வருவது கோடி புண்ணியம். இங்கும் 3 மைல் பரப்பு கொண்ட கனககிரியை மக்கள் வலம் வந்து காலை 5 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகளுடன் மகாதீபமும் ஏற்றப்படுகிறது.

மாதங்களில் சிறந்த மாதமாக கருதப்படும் மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை பாராயணமும் நடைபெறுகிறது.

திருவாதிரையன்று நடராசருக்கு அபிஷேகம் நடைபெறும்

தேவிகாபுரத்தில் இறைவன், இறைவியும் தனித்தனியே கோயில் கொண்டுள்ளதால் ஊடல் தீர்த்த பெருமாள் தை மாதம் 3-ம் நாள் காணும் பொங்கல் நாளன்று சிவபெருமான் உமையவளைக் கண்ணுற்று ஊடல் தீர்த்து வருகிறார். அன்று மக்கள் திரண்டு கண்ணுற்று வருகிறார்கள்.

மாசி மாதம் மகாசிவராத்திரியில் பார்வதி தேவி பூசித்த தலம் தேவிகாபுரம். சிவராத்திரி சிறப்பாக நடைபெறும் கோயில்களில் தேவிகாபுரம் தனிச்சிறப்புடையது.

ஒரு சமயம் உலகம் வெள்ளத்தில் மூழ்கிபோக இங்குள்ள மலை மட்டும் பொன்போல பிரகாசித்து மிதந்தது. இம்மலை மீது தேவியார் சிவலிங்கம் அமைத்து நான்கு கால பூஜை செய்தாள். அவள் பூசை செய்யும் பொறுப்பையும் நேர்த்தியையும் காண சிவபெருமான் அவள் அருகில் சுயம்புலிங்கமாக எழுந்தருளினார். அவள் அன்பு, பக்தி கண்டு அவளுக்கு தரிசனம் தந்து அவளைத் தன் இடபாகத்தில் சேர்த்துக் கொண்டார்.

இங்குள்ள மலைமீது அழகிய சிவாலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் கருவறையில் அம்பிகை அமைத்து வழிபட்ட தேவீச்சரரும் அவள் பூசையை காண எழுந்த சுயம்புலிங்கமான கனககிரீசுவரரும் எழுந்தருளி உள்ளார். தற்பொழுது தேவிபூசித்தலிங்கம் காசி விஸ்வநாதர் என்று அழைக்கப்படுகிறது.

இதுவே கருவறையின் மையத்தில் உள்ளது. அதன் வடமேற்கில் சுயம்புலிங்கம் ஒரே கருவறையில் இருப்பது ஓரிரு தலங்களில் மட்டுமே.

இங்கு சிவராத்திரி சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. சிவபெருமானை சிவராத்திரியில் பூசித்த தேவிக்கு இந்த ஊரில் பிரதானம் கொடுத்து பெரியநாயகி எனும் பெயரில் கோயில் கொண்டு அருள்பாலித்தார். அவள் பெயராலேயே இவ்வூர் தேவிகாபுரம் என்று அழைக்கப்படுகிறது.

மலையின் அடிவாரத்தில் அமைந்த தேவிகாபுரத்தின் மையப்பகுதியில் பெரியநாயகி கோயில் அமைந்துள்ளது. தேவியின் ஆன்மாவில் சிவமூர்த்தி எழுந்தருளியிருப்பதால் இங்கு தனியாக லிங்கம் இல்லை. தேவிக்கே முதன்மை அளிக்கப்பட்டு பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இத்தலத்தில் இன்றும் சிவராத்திரி காலங்களில் அம்பிகை பூசை செய்வதாக ஐதீகம். எனவே சிவராத்திரி இரவின் நான்கு யாமங்கள் இங்கு வழிபடுவது பக்தர்களும் நாமும் அம்பிகையோடு சேர்ந்து வழிபடுவதாக கருதப்படுகிறது.

பங்குனி மாதம் பத்து நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திரப் பெருவிழாவானது கிருத்திகை நாளன்று தொடங்கி கொடியேற்று விழாவுடன் வருடந்தோறும் வெகு விமரிசையாக கொண்டாடப் படுகிறது. இந்தப் பெருவிழாவை கிராமத்திலுள்ள ஒவ்வொரு தெருவினரும் மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

முதல் நாள் பகல்பொழுதில் கொடி ஏற்றும் வைபவம் நடைபெறும். அன்று இரவு அதிகார நந்திசேவை நடைபெறும் இவ்விழாவினை மலையாம்புரவடை கிராமவாசிகள் நிகழ்த்துகின்றனர்.

இரண்டாம் நாள் பகல் நேரம் விமான கேடயம் பூதவாகனத்தில் இறைவனும் இறைவியும் அமர்ந்து வீதிவிலா வருகிறார்கள். இரண்டாம் நாள் விழா குருகுலந்தாங்கல் ஊர் பொதுமக்கள் செலவில் நடைபெறுகிறது.

மூன்றாம் நாள் விழாவாக பகலில் விமான கேடயம் இரவில் சூரியபிரபை மீது அம்மையப்பன் திருவீதிஉலா வருவர். இத்திருவிழாவை தேவிகாபுரத்தில் வசிக்கும் தொழுவேளாள மரபினர் (அகமுடையார்) நடத்துகின்றனர்.

நான்காம் நாள் பகல் நேரத்தில் விமான கேடயமும், இரவு நாகவாகனத்தில் ஏலவர் குழலார் வீதிவுலா வருவர். நான்காம் நாள் நிகழ்ச்சியை நாவிதர்கள் நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

ஐந்தாம் நாள் பகலில் சுவாமி மலைக்கு சென்று அன்று இரவு திருக்கல்யாண வைபவம் காண பக்தர்கள் அனைவரும் திரண்டு வந்து கண்ணுறுவர். ரிஷபவாகனத்தில் வீதியுலா வருவர். இந்நிகழ்ச்சி தெற்கு மாடவீதி செங்குந்த மரபினர் வெகுவிமரிசையாக நடத்துவர்.

ஆறாம் நாள் பகலில் தங்க ரிஷபத்தில் வீதியுலாவும், அன்று இரவு, வெள்ளித் தேர் வீதியுலாவும் நடைபெறும். இந்நிகழ்ச்சியை, புதுத்தெரு செங்குந்த மரபினர் நடத்துகின்றனர்.

ஏழாம் நாள் திருவிழா மிகவும் முக்கியமானது தமிழகத்தில் சங்காலந்தொட்டு தேர்களில் இறைவனை அமர்த்தி திருவீதி வருவது வழக்கம். இங்கும் அதுபோல திருத்தேர் நிகழ்ச்சியில் பல கிராமங்களிலிருந்து மக்கள் திரண்டு வந்து கண்டுகளிக்கின்றனர். இவ்விழாவை தேவஸ்தான உற்சவமாக நடைபெறும்.

எட்டாம் நாள் பகலில் விமான கேடயமும் இரவில் குதிரை வாகனத்தில் இறைவன் திருவீதிவுலா வருவர். இந்நிகழ்ச்சியை வடக்கு மாடவீதி செங்குந்த மரபினர் நடத்துகின்றனர்.

ஒன்பதாம் நாள் பகலில் விமான கேடயமும், இரவு இராவணேஸ்வர கைலாச வாகன சேவை ரோட்டுத் தெரு அன்பர்கள் நடத்துகிறார்.

பத்தாம் நாள் தீர்த்தவாரி நடராசர் உற்சவம் தேவஸ்தான உற்சவமாக நடைபெறும். பத்து நாட்கள் திருவிழா நடைபெற்ற பிறகு மூன்று வாகனம் ஒன்று கூடும் நிகழ்ச்சியை தேவிகாபுரத்தில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்கள் நடத்துகின்றனர்.

பங்குனி உத்திரப் பெருவிழா நாளில் நாள்தோறும் தேவாரத் திருப்புகழ் இன்னிசை செவிகளில் கானமழை பொழியும். சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும். பாட்டுக் கச்சேரியும், பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெறும். திருவிழா காலத்தில் இயல், இசை, நாடகத் தமிழ் ஆகியவை தேவிகாபுரத்தில் ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் நிகழ்த்தப்படுகிறது.

சுவாமி திருவீதிஉலா வரும்பொழுது நாதஸ்வர, மேளக் கச்சேரியும் பேண்டு வாத்தியமும், தாரை, தப்பட்டமும், கரக ஆட்டமும், வாணவேடிக்கையுடன் நிகழ்த்துவர்.

நிர்வாகம்

கோயிலின் நிர்வாகம் அனைத்தும் கல்வெட்டுகளின் மூலம் பார்க்கும் பொழுது கைக்கோள முதலிகளும், பிஷா மடத்தின் தலைவர் ஈசான சிவாசாரியர்கள் மூலம் நடைபெற்றுள்ளது. விஜயநகர பேரரசு அழிவுற்றதும். ஆரணி ஜாகீர் சத்திய விஜயநகரத்தில் தமக்கான அரண்மனை அமைத்துக் கொண்டு வாழ்ந்த திருமலைராவ் சாகேப் துரை அவர்கள் சித்தூர் ஜில்லாவை ஆட்சி புரிந்து வரும் (வெள்ளையரான) ஆங்கிலேயரான ஒயிட்சேட் துரை அவர்கள் சமூகத்திற்கு விண்ணப்பம் ஒன்று அனுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது மானிய நிலங்கள் பற்றியனவும் கோயில் நிர்வாகங்களையும் குறிப்பிட்டு தம் கருத்துக்களை தொகுத்துள்ளார். ஆரணி ஜாகீருக்குட்பட்ட கிராமங்கள் 162ல் இருந்து வருகின்ற கோயில்களில் மானிய நிலங்களைக் கொண்டதும். முக்கியமானதும், சிறப்பிற்குரியதும் சிவன், விஷ்ணு கோயில் உட்பட 17 கோயில்களின் நிர்வாகம் கிராமப் பொதுச் சபையார்கள் மூலம் பராமரித்து வந்துள்ளனர். கிராமச் சபையார்கள் நடத்தி வருகின்ற நிர்வாகத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அதைப் பார்கின்ற போதெல்லாம் தம் மனம் பெரிதும் வேதனை அடைவதாக குறிப்பிட்டுள்ளார். அதாவது, கோயிலின் மானிய நிலங்களில் வருகின்ற வருவாய் கொண்டு நடத்தி வருகின்ற ஒரு கோயிலுக்கு சிறப்பான தரமும் விழாக்களும் செய்து வருவதாகவும், ஒரு கோயிலுக்குக்

குறைந்தபடித் தரமும் விழாச் சிறப்புக்களைச் செய்யாமலும் அலட்சியம் செய்து வருவதாகவும், இதனால் கிராமத்தில் பூசலும், பொறாமை, மேலிட்டு கிராமங்களின் நலன்கள் பாதிக்கப் படுவதாகவும் சீர்கேடு அடைந்து வருவதாயும் இதனைப் பொறுத்தற்காற்றாது தம்மனம் பெரிதும் விலக்கமுடியாத கவலை அடைவதாக குறிப்பிட்டு எழுதியும் இந்த கிராமத்தார்கள் மேற்பார்வையில் இருக்கும் மானிய நிலங்களையும் கோயில் நிர்வாகத்தையும் என்வசம் ஒப்படைத்தால் கோயில் அறக்கட்டளை நிர்வாகங்களைச் செவ்வனே நடத்தி ஜில்லா அதிகாரியான தங்கள் மனம் மகிழ்ந்து பாராட்டும் வகையில் நடத்தி வருவேன் என்றும் ஆதலின் என் விண்ணப்பத்தின் படி உத்தரவு வழங்க கேட்டுக்கொள்கிறேன் என அவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

இந்த ஜாகீரின் விண்ணப்பம் கண்ட சித்தூர் கலெக்டர் துரை அவர்கள் ஜாகீர்தாரின் கோரிக்கை ஏற்று, ஜாகீர்தார் சிறந்த செல்வாக்கு உள்ளவர். ஆதலாலும் மானிய நிலங்களையும் கோயில்களையும் சிறப்பாக நிர்வகிப்பார் என்று கிராமத்தார் வசம் இருந்த நிர்வாகத்தை ஜாகீர்சவம் ஒப்படைக்க அனுமதி அளித்தார்.

ஜாகீர் பரம்பரையின் ஆட்சி முறைகள் சரியாக நடைபெறாத காரணத்தால் அப்போது ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசர் மானிய நிலங்கள் அனைத்தும் யார்யார் பயிரிட்டு வந்தார்களோ அவர்கள் பெயருக்கே பட்டா செய்து கொடுத்துவிட்டார்கள்.

1947ம் ஆண்டில் ஜமீன் ஒழிப்பு சட்டம் அரசாங்கத்தார் கொண்டு வந்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததும் வெற்றியின் தலையீடு அதிகரித்த வகையில் அரிய பெரிய சமஸ்தானங்கள் அரசு கட்டுப்பாட்டிற்குள் அடங்குவதாயின. அச்சமயம் ஆரணி ஜாகீரும் சிற்றரசரும் தன் ஆட்சியை இழக்க நேரிட்டது. இதன் காரணமாக தம் கட்டுபாட்டில் இருந்த கோயில் நிர்வாக அலுவலர், அர்ச்சகர் சிப்பந்திகளுக்கு 20.9.1947-ம் ஆண்டு தனித்தனியே உத்திரவு

அனுப்பி இருந்தார். அதில் குறிப்பிட்டு எழுதியிருந்த வாசகமானது, இதுவரையிலும் உங்களூர் கோயில்களுக்கு எம்மால் கொடுக்கப்பட்டு வந்தபடி படித்தர வகையறாக்களை ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் கீழ் ஆட்சி உரிமை இழந்தபடியால் யான் இன்று முதல் நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

இந்த உத்தரவைக் கண்ணுற்ற கோயில் நிர்வாகத்தினர் அர்ச்சகர், சிப்பந்திகள் அதிர்ச்சி அடைந்தனர். அன்று தொடங்கி கோயில் கட்டளைகள் இடையூறு இன்றி நடக்கவேண்டும் என்பதற்கு ஊர் பொதுமக்கள் ஒன்று கூடிப்பேசினர். ஊர் பொதுப்பணத்தில் இருந்து அதில் கோயில் கட்டளை இரண்டொரு மாதம் நடத்தினர். பின் வீட்டிற்கு ஒரு படி அரிசி வீதம் நன்கொடையாகப் பெற்று கோயில் நிர்வாகம் செய்தனர். கோயில் புறம்போக்கு நிலங்களில் கடைகள் கட்டி வந்தார்களிடம் வசூலித்து நிர்வாகம் செய்தனர். அதன் பிறகு இந்து அறநிலைய ஆட்சித் துறையினரால் தற்பொழுது பரிபாலனம் நடைபெற்று வருகிறது.

புரோகிதம்

தினசரி பூசைகள் காரண ஆகமப்படி மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது. தினசரி பூசை செய்யும் குருக்கள் அர்ச்சகர் என அழைக்கப்படுகிறார். இவர் திருவாலங்காடு ஆதிசைவ மரபிலிருந்து கௌதம கோத்திரத்தின் பாரம்பரியமானவர். இக்குலத்தின் தலைமையானவர் அருணாசல சிவாசாரியர். பெரிய நாயகி அம்மன் கோயிலின் அருகே அர்ச்சகர் இல்லம் உள்ளது. பெரியநாயகி அம்மன் கோயில் காலை பதினொன்று மணி வரையிலும் மாலை ஐந்து மணியிலிருந்து தரிசனத்திற்கு கோயில் நடை திறந்திருக்கும். கனககிரீஸ்வரர் கோயில் காலை 7.30 முதல் 9.00 மணி வரையிலுமே திறந்திருக்கும். அர்ச்சகருக்கு இந்து சமய அறநிலைய ஆணைப்படி ஊதியம் வழங்கப்படுகிறது.

பிற கோயில்கள்

திருக்காமீசுவரர் கோயில்

தேவிகாபுரத்தில் சிவனும் உமையும் தனித்து கோயில் கொண்டு உள்ளதை ஊடல்தீர்க்கும் நாயகராக கோகிலாம்பாள் உடனுறை திருக்காமீசுவரர் வடிவில் காட்சியளிக்கிறார். கனககிரி மலையடிவாரம் வடபுறமாக கிழக்கு நோக்கியவாறு கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பரப்பு கிழக்கு மேற்காக இருபது அடி, வடக்கு தெற்காக பதினோரு அடி உள்ளது.

இக்கோயிலுக்கு இராஜகோபுரமோ, கருவறையின் மேல் விமானங்களோ அமைக்கப்படவில்லை. இக்கோயில் 9 கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இறைவன் கருவறை வாயிலுக்கு நேராகவும் இடதுபுறம் சற்று பின்னால் இறைவிக்கு கருவறை அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் அதிட்டானப் பகுதி மட்டும் விஜயநகர கட்டடக்கலை போன்ற பாங்குடன் உபானம், பத்மஜகதி, கம்பு, கண்டம், குமுதம், கம்பு பட்டிகை என்ற அமைப்பிலுள்ளது. சுவரின் புறச்சுவரில் சிங்கங்கள் தாங்கியவாறு சிம்மத்தூண்கள் காணப்படுகின்றன. தேவகோஷ்டங்களும், கும்ப பஞ்சரங்களும் அலங்கரிக்கின்றன. கருவறை தெற்கே விநாயகர், ஆலமர் செல்வன், மேற்கே லிங்கோத்பவரும் தேவகோட்டத்தின் இருபுறமும் திருமால், பிரம்மா சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. வடக்கே பிரம்மா, துர்க்கை சிலை வைக்கப்பட்டு உள்ளது.

சிறிய கருவறையில் லிங்கவடிவில் திருக்காமீசுவரர் உள்ளார். அர்த்தமண்டபம் உள்ளது. வாயிலின் வலதுபுறம் விநாயகர், இடதுபுறம் சுப்ரமணியர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. கோகிலாம்பாள் கருவறையின் நடுவில் நின்றநிலையில் மேலிரு கரத்தில் அங்குசம்.

பாசம் ஏந்தியும், கீழிரு கைகள் அபய வரத முத்திரையுடன் எழிலுருவாய் காட்சியளிக்கிறாள்.

மாரியம்மன் கோயில்

தேவிகாபுரத்தின் கிழக்கு பகுதியில் உள்ளது. இக்கோயிலின் கருவறை சிறிய அர்த்தமண்டபம் உள்ளது. இக்கோயிலின் கருவறை சிறிய அர்த்தமண்டபம் உள்ளது. கருவறையின் நடுவில் அம்மன் அனல் மகுடத்துடன் கோரைப் பற்களுடன் சுகாசனத்தில் அமர்ந்து மேலிரு கரத்தில் உடுக்கை, சூலம் ஏந்தியும் கீழிருகரத்தில் அபய வரத முத்திரை காட்டப்பட்டுள்ளது. தேவியின் திருமூர்த்தங்களுள் மாரி அம்மனும் ஒன்று. காவல் தெய்வமாக வணங்குவர். வெள்ளிக்கிழமை தோறும் மக்கள் இக்கோயிலில் சிறப்பாக வழிபடுகின்றனர். இங்கு கூழ் வார்க்கும் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

முத்தாரம்மன் கோயில்

தேவிகாபுரத்தின் கிழக்கில் முத்தாரம்மன் கோயில் அமைந்துள்ளது. சிறிய கருவறையும் மண்டபம் உள்ளது. முத்தாரம்மன் தேவியின் மூர்த்தங்களுள் ஒன்றாகும். இக்கோயிலில் வழிபாடு நடைபெறுகிறது. முத்துக்கள் போன்று அம்மை நோய் ஏற்பட்டால் இங்கு தங்கி நோய் தீர்க்கும் வரை இக்கோயிலில் தங்கியிருப்பர்.

தருமராஜர் கோயில்

மகாபாரதத்தின் பஞ்சபாண்டவர்களின் மூத்தவரான அறம் வெல்லும் என்ற நாயகன் தருமராஜருக்கு கோயில் கொண்டுள்ளார். இங்கு கிழக்கு பகுதியில் கோயில் கொண்டுள்ளது. கருவறையில் ஐந்து நாயகர்கள் தேவி திரௌபதி தேவியும் கருவறையில் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருவிழா நடைபெறும் பத்து நாட்கள் தெருக்கூத்து நடைபெறும், மகாபாரதச் சொற்பொழிவும் நடைபெறும்.

முருகன் கோயில்

குன்றுதோறும் வீற்றிருக்கும் குமரக் கடவுளான முருகருக்கு தேவிகாபுரத்தில் பிற்காலத்தில் குன்றின் மீது முருகன் கோயில்

உள்ளது. தற்காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில், கட்டட அமைப்பு அலங்காரம் ஏதுமின்றி காணப்படுகிறது. முருகன் சதுரமான கருவறையில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

வீரகாளியம்மன் கோயில்

தேவிகாபுரத்தின் வடக்கே வீரகாளியம்மன் குடிகொண்டு காவல் தெய்வமாக காட்சியளிக்கிறார். வீரகாளியம்மன் பயங்கர கோலத்துடன் காட்சியளிக்கிறாள்.

தல விநாயகர்

ஊரின் நடுவில் சிறிய கருவறை, அர்த்தமண்டபத்துடன் விநாயகர் கோயில் காட்சி அளிக்கிறது. இங்கு விநாயகர் ஆறு அடி உயரத்துடன் மேலிரு கைகளில் அங்குசம், பாசம் ஏந்தியும், கீழிரு கைகளில் தந்தம் மோதகம் ஏந்தி காணப்படுகிறார். தலையில் மகுடம், கழுத்தில் கண்டசரம், சரப்பளி, மார்பில் முப்புரி நூலும் கைகளில் காப்பும் உதரபந்தமும், காலில் கழலும் அணிந்து காட்சியளிக்கிறார். அமர்ந்த நிலையில் உள்ளார். அர்த்தமண்டப வாயிலில் விஜயநகர கால தூண்கள் உள்ளன.

கண்ணப்பர் கோயில்

தேவிகாபுரத்திலிருந்து போளூர் செல்லும் சாலையில் செங்கல் சுதையாலான கோயில் உள்ளது. சிறிய குன்றின் மிது சிறிய கருவறையில் பலகை கல்லில் கண்ணப்பர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். புடைப்புச் சிற்பமாக செதுக்கியுள்ளனர். வலது கையில் வாள், இடது கையில் வில்லும், முதுகில் அம்புகள் வைக்கும் குழாயும் ஜடாபாரத்துடன் கழுத்தில் கண்டசரம், மார்பில் முத்துவளை இடையில் ஆடை காலில் கழல் அணிந்துள்ளார்.

போளூர் செல்லும் சாலையில் இரு செங்கல் சுதையாலான கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றில் விநாயகரும், மற்றொன்றில் ஏழு கற்கள் மட்டும் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

கல்வெட்டுச் செய்திகள்

சீரோடு திருவளரும் தேவிகாபுரத்தில் கோயில் கொண்டுள்ள பெரிய நாச்சியார் மற்றும் கனககிரீஸ்வரர் ஆலயங்களில் விஜயநகரர், தஞ்சாவூர் மராட்டியர், ஆரணி ஜாகீர்தார் ஆகியோரின் கல்வெட்டுகள் 56 உள்ளன. இக்கல்வெட்டுகளை மத்திய தொல்லியல் துறையினர் 1912-ல் படியெடுத்து கல்வெட்டு ஆண்டறிக்கை 1912-இல் வெளியிட்டுள்ளனர். இவை திரு. வி. ரெங்காச்சாரியார் "Topographical list of the Inscriptions of the Madras presidency" தொகுதி-I என்ற நூலில் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை இக்கல்வெட்டுகளின் வாசகங்கள் இதுவரை வெளிவரவில்லை.

இக்கல்வெட்டுகளைக் கொண்டு ஆராயுமிடத்து இத்திருத்தலத்தின் காலம் கணக்கிட முடியும். மேலும் இக்கோயில், இந்நகரில் வாழ்ந்த மக்களின் சமூக பொருளாதார, அரசியல் வாழ்க்கை ஆகியவை பற்றி நன்கு அறிந்துகொள்ள முடியும்.

இக்கல்வெட்டுகள் ஐம்பத்தாறில் 55 கல்வெட்டுகள் பெரியநாச்சியார் கோயிலிலும் ஒரு கல்வெட்டு கனககிரீஸ்வரர் ஆலயத்திலும் உள்ளன. மிகவும் பழமையான கல்வெட்டு (க.எண். 351) சகம் 1399-ஐச் சேர்ந்தது. பிந்தியது ஆரணி ஜாகீர்தாரருடைய (க.எண். 397) கி.பி. 1899 கல்வெட்டு. இக்கல்வெட்டு ஐம்பத்தாறும் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி மொழியில் இருக்கின்றன.

விஜயநகர கால கல்வெட்டுகள் எழுத்துகள் மிகவும் பெரிய அளவு உடையதாயும், தவறுதலாகவும், பிழை அதிக அளவிலும் காணப்படுகின்றன. இவர்களது கல்வெட்டுகள் "சுபமஸ்து" "ஸ்வஸ்திஸ்ரீ" "ஸ்ரீமன்மஹா மண்டலேஸ்வரர்" என்று தொடங்குகின்றன. கல்வெட்டுகளில் சக ஆண்டு தமிழ் எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டில் ஆண்டு,

மாதம், நாள், கிழமை, நட்சத்திரம், திதி முதலியன குறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் நன்கொடைச் செய்திகள், கொடைகள் எந்த வகையில் யார் யாருக்காக கொடுத்துள்ளார்கள் என்பன பற்றி விரிவாக சொல்லப்பட்டுள்ளன. கோயிலுக்கு நிலம் தானமாக இருந்தால் அவற்றின் நான்கு எல்லைகள் மிகத் தெளிவாக விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கல்வெட்டுகளில் நாயகர்களாக விளங்கும் தேவிக்காபுரத்தில் வசிக்கும் கைக்கோள முதலிகளையும், களப்பாளர், ஈசான சிவாசாரியார் முதலியோரை கோயிலின் முக்கியமானவர்களாக கருதினர். கல்வெட்டின் இறுதிப் பகுதியில் கொடையளிக்கப்பட்டவர்கள் கையெழுத்து, எழுதியவர் கையெழுத்து, எழுதும்பொழுது இருந்த முக்கிய நபர்களுடைய பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

கல்வெட்டுகளில் நாட்டுப் பிரிவுகளும் ஊர்களும்

கல்வெட்டு ஆண்டறிக்கை குறிப்பிலிருந்து இவ்வூரின் பெயர் 'தேவக்காபுரம்' என்று அழைக்கப்பட்டமை தெரிகிறது. பெரும்பாலான கல்வெட்டுகள் விஜயநகரர் காலத்து கி.பி.1477லிருந்து கி.பி.1548 வரையிலான ஆண்டைச் சார்ந்தவை. கி.பி. 1630லிருந்து கி.பி. 1811 வரையுள்ள ஆண்டுகளில் ஒரு சில கல்வெட்டுகள் மட்டும் உள்ளன. 'செய்யாற்றின் தென்கரை(352) தேவிக்காபுரம்' என்ற கல்வெட்டுக் குறிப்பின் மூலம் செய்யாற்றின் கரையிலிருந்த செய்தி மட்டும் தெரிகிறது. இக்கல்வெட்டுகளில் தேவிகாபுரம் தவிர பிற ஊர் பெயர்கள், நாட்டுப்பிரிவுகள், கொடையாளர்கள், கொடை நிலங்கள் ஆகியவை தெரியவருகின்றன. அவ்வாறான ஊர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

1. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்றக் கோட்டத்து மேல் குன்றநாடு முருகமங்கலப் பற்று ராஜகம்பீரன் திருமலை (க.எண். 352)
2. முருகமங்கலப் படைப்பற்று பல்குன்ற கோட்டத்து கச்சூர் நாட்டு செய்யாற்று தென்கரை மணல்பாக்கமான சோமாசிபுரம் (க.எண்.396)

பல கல்வெட்டுகளில் மருதரசர் படைவீடு குறிக்கப்படுகிறது. (க.எண். 352, 353, 354, 358, 362, 363, 367, 369, 372, 375, 386, 389) ஒரே ஒரு கல்வெட்டில் படைவீட்டுச் சீர்மை(375) என்ற குறிப்பு காணப்படுகிறது.

இரண்டு ஊர்கள் காமாட்சி ராவுத்தன் தாங்கல் (க.எண். 367), சிங்கராய ராவுத்தன் தாங்கல் (க.எண்.372) என்று சொல்லப் பட்டுள்ளன. ராவுத்தன் என்பது குதிரை வணிகர்களைக் குறிக்கும் சொல்லாகும். பின்னாளில் தமிழக இஸ்லாமியர்கள் திருநெல்வேலி பகுதியில் ராவுத்தன் என்றும், நாகப்பட்டினம் பகுதியில் மரைக்காயர் என்றும், வேலூரில் வசிப்பவர்களை லப்பை என்றும் அழைக்கப்பட்டனர். இந்த இரு ஊர் பெயரில் வரும் ராவுத்தர்கள் காமாட்சி ராவுத்தன், சிங்கராய ராவுத்தன் என்று இந்துப் பெயர்களில் இருப்பதால், இந்து சமயத்தைச் சார்ந்த குதிரை வணிகர்களாக இருக்கலாம்.

மற்றொரு கல்வெட்டில் 'தேவராயன் பட்டடை' என்ற ஒரு ஊர் குறிக்கப்பட்டுள்ளது. பட்டடை என்பது நெசவு முதலிய பல தொழில்கள் உள்ள பகுதியாகும். இங்கு உள்ள பட்டடை தேவராயர் பெயரில் இருக்கிறது (க.எண். 372).

செம்பியமங்கலம், முருகமங்கலம் என்று இரண்டு ஊர் பெயர்கள் பல கல்வெட்டுகளில் சொல்லப்பட்டுள்ளன. மங்கலம் என்ற பின்னொட்டுடன் கூடிய ஊர்கள் பிராமணர்கள் வாழ்ந்த ஊர்களாகும். ஒரு கல்வெட்டில் 'முருகமங்கலப் படைப்பற்று' (க.எண். 395) என்று ஒரு மங்கலத்தின் பெயருடன் படைவீரர் இருந்த பகுதியை குறிக்கும்.

மேலும் சேற்றுப்பட்டு (க.எண். 374, 386), பிரமணப்பாக்கம் (க.எண். 375), சுவரப்பூண்டி (க.எண். 366, 373) கங்காபுரம் (க.எண். 369) உவத்தூர் பிடாகை மாமணம்பாக்கம் (க.எண். 377) ஆகிய ஊர்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

கல்வெட்டுகளில் தெய்வப் பெயர்கள்

முன்பு கூறியபடி கல்வெட்டு ஆண்டறிக்கையாக உள்ளதால் தெய்வப்பெயர் பற்றி விரிவான செய்தி இல்லை. பல கல்வெட்டுகளில்

திருமலை உடைய நாயனாரின் பெயர் காணப்படுகிறது. (க.எண். 351, 356, 358, 375, 377, 401) இது ஒருவேளை மலை மீதுள்ள இறைவனைக் குறிப்பதாக இருக்கலாம். இரு கல்வெட்டில் வசந்த மண்டபத்து திருமலை உடைய நாயனார் என்று இருப்பது நோக்கத்தக்கதாகும். ஒருவேளை மலையடிவாரம் உள்ள பெரியநாயகி கோயிலில் உள்ள வசந்த மண்டபத்தில் இருந்த கோயிலாக இருக்க வாய்ப்புள்ளது. கி.பி. 1479-ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் திருமலைநாயனார் மற்றும் பெரியநாச்சியார் ஆகிய இரு தெய்வங்களை குறித்துள்ளது. இந்த பெரிய நாச்சியார் இன்று பெரியநாயகி என்றழைக்கப்படும் பிரஹதாம்பாளாக இருக்க வேண்டும் (க.எண். 401).

கி.பி. 1530ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டு (க.எண். 373) வடகயிலாயத்தில் உள்ள உடையவர் சதாசிவ நாயக்கரின் மகனான திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது. இவன் தனது தந்தை பெயரால் இக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும்.

ஆண்டு குறிப்பில்லாத ஒரு கல்வெட்டு குடிநீர் குளக்கரையிலுள்ள கணபதி கோயிலில் உள்ளது.(க.எண். 405) இக்கோயிலும் குளமும் வைசிய நகரத்தாரால் கட்டப்பட்டது என்று சொல்கிறது.

கல்வெட்டுகளில் ஆண்டு நாள் கோள் குறிப்புகள் தமிழக கல்வெட்டுகள் பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சியாண்டுகள் மட்டும் குறிக்கப்பட்டிருக்கும். இவர்களது கல்வெட்டுகளில் வெளிமாநிலங்களில் சிலசமயம் சக ஆண்டு காணப்படும் தமிழகத்திலும் சாளுக்கிய, ராஷ்டிடகூடர்கள் போன்றோர் தொடர்பு காரணமாக சகம் மற்றும் கலி ஆண்டுக் குறிப்பு ஆங்காங்கே காணப்படும். பிறகு விஜயநகர நாயகர் ஆட்சி கால கல்வெட்டுகளில் சக ஆண்டு அறுபது வட்டத் தமிழ் ஆண்டு ஆகியவை பெரும்பாலும் குறிக்கப்பட்டிருக்கும். முன் அரசுகளில் பின்பற்றப்பட்ட ஆட்சியாண்டு முறை விஜயநகர நாயகர் கல்வெட்டுகளில் காணப்படுவதில்லை.

தேவிகாபுரத்தில் காணப்படும் கல்வெட்டுகள் விஜயநகரர் மற்றும் அவர்களுக்கு பிற்பட்டவையே. எனவே இவ்வூர் கல்வெட்டுகளில் ஆட்சியாண்டுகள் குறிக்கப்படவில்லை. இவ்வூர் கல்வெட்டுகள் ஐம்பத்தாறில் மூன்று தவிர ஏனைய கல்வெட்டுகள் அனைத்திலும் சக ஆண்டு, 60 வட்டத் தமிழ் ஆண்டு ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சிலவற்றில் சக ஆண்டு இல்லாமலோ 60 வட்டத் தமிழ் ஆண்டு இல்லாமலோ உள்ளன. நாள் கோள் குறிப்புகள் அனைத்து கல்வெட்டுகளிலும் காணப்படாவிட்டாலும் பெரும்பாலான கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் மாதம், ராசிக் குறிப்புகள் 26-இல் காணப்படுகின்றன. கிழமைக் குறிப்புகள் 29-இல் காணப்படு கின்றன. நட்சத்திரக் குறிப்புகள் 25-இல் காணப்படுகின்றன.

மாதக்குறிப்பு உள்ள கல்வெட்டுகளில் வைகாசி, புரட்டாசி, மார்கழி ஆகிய மூன்று மாதங்கள் காணப்படவில்லை. பிற மாதங்கள் காணப்படும் கல்வெட்டுகள் பின்வருமாறு:- சித்திரை - 1, ஆனி -3, ஆடி-4, ஆவணி-1, ஐப்பசி-1, கார்த்திகை-2, தை-4, மாசி-7, பங்குனி-3

இப்பட்டியலைப் பார்க்கும்பொழுது ஆடி, தை, மாசி ஆகிய மாதங்கள் அதிகமாக உள்ளன. தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் கொடுக்கப்பட்ட கொடைகள் அதிகமுள்ளன. இது தை மாத விளைச்சலுக்குப் பிறகு மக்களிடையே இருக்கும் செழிப்பைக் காட்டுகிறது. விளைச்சல் செழிப்பு காரணமாக அந்த மாதங்களில் தெய்வ வழிபாடுகள் மிகுந்தும், கொடைகள் மிகுந்து இருந்தது வெளிப்படுகிறது. இக்கல்வெட்டுள்ள இடம் அம்மன் கோயிலானதால் ஆடி மாதக் கொடைகள் கூடுதலாக உள்ளன.

கல்வெட்டுகளில் 29 கல்வெட்டுகளில் கிழமை குறிப்புடன் உள்ளன. வியாழக்கிழமை தவிர ஏனைய கிழமைகளில் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியல் பின்வருமாறு

ஞாயிறு -4
திங்கள் - 10

செவ்வாய் - 2
புதன் -1
வெள்ளி - 9
சனி - 3

திங்கள், வெள்ளி கிழமைகளில் அதிக கொடைகள் கொடுக்கப்பட்ட நாட்களாக இப்பட்டியல் மூலம் அறிகிறோம்.

தேவிகாபுரம் கல்வெட்டுகளில் 27 நட்சத்திரக் குறிப்புகள் உள்ளன. 27 நட்சத்திரங்களில் 10 நட்சத்திர தினங்களில் கொடைகள் கொடுக்கப்பட்டு உள்ளன. அதன் பட்டியல் பின்வருமாறு

உத்திரம் -7
திருவோணம் - 5
அஸ்வினி -2
அஸ்தம் -2
பூசம் -2
அவிட்டம் -2
உத்தரட்டாதி-2
விசாகம் -1
புனர்பூசம் - 1
அனுசம் - 1

உத்திரம் மற்றும் திருவோண நட்சத்திர நாட்களில் கொடுக்கப்பட்ட கொடைகள் அதிகமாகும். தேவிகாபுரம் கல்வெட்டுகளில் மட்டும் பிறை(பக்ஷம்) குறிப்புகள் உள்ளன. அவை இரண்டுமே சுக்கில பட்சம் என்னும் தேய்பிறையாகும். மூன்று கல்வெட்டுகளில் யோகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவை சுபயோகம் (2) சித்தயோகம் (1) ஆகியவையாகும்.

கல்வெட்டில் மடங்கள்

தேவிகாபுரம் கல்வெட்டில் பிக்ஷாமடம், கோளகிமடம், வீரமஹேஸ்வரன் மல்லிகார்ஜுனன் ஐயன் மடம் அகியவை சொல்லப்பட்டுள்ளன.

பிக்ஷாமடம் பற்றிய செய்திகள் ஏழு கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் விஸ்வேஸ்வர சிவாசாரியர், ஈசான சிவாவாரியர் என்பவர்கள் மடத்தலைவர்களாக சொல்லப் பட்டுள்ளனர். விஸ்வேஸ்வர சிவாசாரியார் சகம் 1429, 1436, 1446, (க.எண். 354, 389, 365) ஆகிய ஆண்டுகளில் மடத்தலைவராக குறிக்கப்பட்டுள்ளார். இக்கல்வெட்டு முறையே, இம்மடிராய மகாதேவ கிருஷ்ண தேவராயார் காலத்தியது ஆகும். இவற்றில் இரு கல்வெட்டுகள் இப்பகுதி நாயக்கருக்கு கோயில் நிலங்கள் உழவு காணியாட்சியாக கொடுத்தபொழுது, கோயிலைச் சார்ந்தவர் களுடன் இவரும் ஒருவராக காட்டப்பட்டுள்ளார். எஞ்சிய கல்வெட்டில் அரவன்பாடியைச் சேர்ந்த வித்வான் வடமலையர்க்கு சொரப்பூண்டி என்ற ஊரில் நிலம், வீட்டுமனை கொடையாக கொடுத்தபொழுது கோயிலார் கைக்கோள முதலிகளுடன் இந்த விஸ்வேஸ்வர சிவாசாரியாரும் குறிக்கப்பட்டுள்ளார்.

பிக்ஷாமடத்தலைவரான ஈசான சிவாசாரியார் பற்றி சகம் 1442, 1444, 1455, 1452 ஆகிய ஆண்டு கல்வெட்டுகளில் சொல்லப்பட்டுள்ளன. (க.எண். 352, 368, 356, 373) இக்கல்வெட்டுகள் கிருஷ்ணதேவ மகாராயர் மற்றும் அச்சுத தேவராயர் காலத்தைச் சார்ந்ததாகும். அவற்றில் இரு கல்வெட்டுகளில் கன்னடிய நாயகரான திருமலை நாயக்கர், காளத்தீசுர நாயகர் ஆகியோருக்கு நிலங்கள் குத்தகையாக அளிக்கப்பட்ட செய்திகள் உள்ளன. மற்றொன்றில் தாரைப்பாடி என்ற சிற்றூருடன் சேர்ந்த உவத்தூர் அம்மையப்ப நாயனார் கோயிலுக்கு திருநாமத்துக் காணியாக கொடுக்கப்பட்டு, பிறகு குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளது. நான்காவது கல்வெட்டில் மேற்சொன்ன திருமலைநாயகர் சதாசிவமூர்த்திக்கு ஒரு கோயில் எடுத்து அதற்கு சுவரப்பூண்டியில் நிலம் கொடுத்துள்ளனர். அதற்கு அவர் கொடையாக கொடுத்தது விளக்கி பெற்ற நிலம் கோயில் தானத்தாருடன் கூட பிக்ஷா மடத்தலைவர்களால் மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது. இதனில் பிக்ஷா மடத்தலைவராக ஈசான சிவாசாரியரின் மடாபாத்தியம் உள்ளவராக சொல்லப்பட்டுள்ளன.

மேலே பார்த்த கல்வெட்டுகளில் பிக்ஷா மடத்தலைவர் பற்றிய செய்தியும் அவர் கோயில் நிலம் தொடர்பாக கொண்டு உள்ள பொறுப்பு மட்டும் தெரிய வருகிறது. ஆனால் மடம் பற்றிய செய்தி தெரியவில்லை.

காலம் குறிக்கப்படாத கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட ஒரு சமஸ்கிருத கல்வெட்டில் கோளகி மடம் குறிக்கப்பட்டு உள்ளது. இம்மடத்து தலைவர் ஈசான யோகீந்திரர் என்பவர் சிவனைச்சுரன் அடைந்தார் என்ற செய்தியை அச்சமஸ்கிருத கல்வெட்டு சொல்கிறது.

மற்றொரு சகம் 1452-ஐ சேர்ந்த அச்சுத தேவராயர் கல்வெட்டு வீரமஹேஸ்வரன் மல்லிகார்ஜினன் அய்யன் என்றொரு மடம் செம்பியன் மங்கலத்தில் இருந்ததை குறிப்பிடுகிறது. கோயில் தானத்தார் பிரமணம்பாக்கம் என்ற ஊரிலுள்ள சில நிலங்களை இம்மடத்திற்கு உழவுக் காணியாக தந்துள்ளன. இதன் வருவாய் கொண்டு வசந்த மண்டபத்திலுள்ள திருமலையுடைய நாயனாருக்கு வழிபட வேண்டும்.

கல்வெட்டுகளில் விழாக்கள்

தேவிகாபுரம் கல்வெட்டுகளில் ஆறு கல்வெட்டுகள் திருவிழா பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. சகம் 1415ச் சேர்ந்த கல்வெட்டு திருமலைநாயகரும், ஈசான நாயக்கனும் முருகமங்கலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலம் வழங்கி அதன் வருவாயைக் கொண்டு திருவிழாக்களின் பொழுது அமுதுபடிகள் படைக்கவும், தூபம் ஏற்றவும் வகை செய்துள்ளனர். ஆனால் விழாக்கள் என்னவென்று ஆண்டறிக்கையில் கொடுக்கப்படவில்லை. (359)

மற்றொரு கல்வெட்டில் நைனியப்ப நாயகன் என்பவன் அடைப்பம் மல்லப்ப நாயகன் சிறப்பிற்காக திருவாதிரை திருவிழாவின் பொழுது நெய் வழங்கி உள்ளார். அடைப்பம் என்ற பதவி விஜயநகர மன்னர்களின் உடன் இருந்து வெற்றிலைத் தாம்பூலம் வழங்குவதாகும். சகம் 1443-ச் சேர்ந்த கிருஷ்ண தேவராயர் கல்வெட்டு (360) இப்பகுதி

நாயகர் திருமலை நாயக்க மன்னர்களாக சதாசிவ நாயக்க மன்னர் என்பவர் திருக்கார்த்திகையின் பொழுது விளக்கெரிக்க நெய் கொடுத்துள்ளார். இக்கொடை கொடுக்கப்பட்ட மாதம் கார்த்திகை என்பது நோக்கத்தக்கதாகும்.

இதற்கு அடுத்த ஆண்டில் மருதரைசர் படைவீட்டை சேர்ந்த கன்னடிய தலைவனான தேவப்புடையாரின் மகன் கார்த்திகை திருவிழாவிற்காக நெய் கொடுத்த செய்தியை சொல்கிறது.

வீரப்பிரதாப அச்சுத தேவமகாராயர் சகம் 1464 கல்வெட்டில் முதலில் சொன்ன அடைப்பம் மல்லப்ப நாயகரின் பிரதானி நைனியப்ப நாயக்கன் உத்தரட்டாதி திருவிழாவின் செலவிற்காக பணம் கொடுத்த செய்தி தெரிகிறது. நைனியப்ப நாயக்கன் அடைப்பம் மல்லப்ப நாயக்கன் பிரதானி என்ற போதிலும் அவன் கொடை வழங்கியது சேவப்ப நாயக்கருக்காக கொடுத்துள்ளான்.

கிருஷ்ண தேவராயரின் கீழ் அடைப்பமாக இருந்து தனது செல்வாக்கால் படைத்தளபதியாகி பின்னாளில் தஞ்சை மாநகர் ஆட்சி நிறுவியவன். இக்கல்வெட்டில் சேவப்பன் அடைப்பமாக குறிக்காமல் மல்லப்பன் அடைப்பமாக குறிப்பிடுவதால் சேவப்பன் பதவி உயர்வு பெற்றிருப்பான் என்று தெரிகிறது(383).

அச்சுத தேவராயர் சகம் 1456வது கல்வெட்டு செம்பிய மங்கலத்தை விழா நடத்துவதற்காக பணம் கொடை கொடுத்ததை சொல்கிறது. விழாவின் பெயர் ஆண்டறிக்கையில் குறிப்பிடவில்லை. இக்கல்வெட்டுகளை பார்க்கும் பொழுது திருவாதிரை, உத்தரட்டாதி, கார்த்திகை ஆகிய நட்சத்திர நாட்களில் இக்கோயில் விழாக்கள் நிகழ்ந்திருக்கிறது.

கல்வெட்டுகளில் கல்வியாளர்கள்

தேவிகாபுரத்தில் பிக்ஷா மடம், கோளகி மடம், மல்லிகார்ஜுனன் ஐயன் மடம் ஆகிய மடங்கள் இருந்துள்ளன. சைவ மடங்களில் பொதுவாக சித்தாந்த பயிற்சிகள் நிகழ்வது வழக்கம்.

சமயம் சார்ந்த நூற்கல்வி சிஷ்யர்களுக்கு போதிக்கப்படுவது மரபு. பல நூல்கள், உரைகள் ஆகியவை மடத்தைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன.

கிருஷ்ண தேவராயர் சகம் 1446-ம் ஆண்டு கல்வெட்டு அற்றுவான்பாடி வித்வான் வடமலையர்க்கு தேவதானமான சுரப்பூண்டி கிராமத்தில் வீடும் வழங்கப்பட்டதை குறிப்பிட்டுள்ளது. இவருக்கு இவ்வூர் அளிக்கப்பட்ட செய்தி கோயில் குமுதப்படையில் வெட்டும்படி செய்யப்பட்டுள்ளது. கல்வெட்டு அறிக்கை வெளியிட்டுள்ள திரு. V. ரெங்காச்சாரி தனது சிறப்பு குறிப்பாக இந்த வடமலையார் மச்சபுராணம், நீடூர் தலபுராணம என்று குறிப்பு உள்ளது. இவருக்கு வீடு கொடுக்கப்பட்டதை கோயிலைச் சேர்ந்தவர்கள், பிக்ஷா மடத்தை சேர்ந்த விஸ்வேஸ்வர சிவாசாரியார் அங்கீகரிக்கிறார்கள். விஸ்வேஸ்வர சிவாசாரியர் பற்றி திரு. V. ரெங்காச்சாரி தனது சிறப்புக் குறிப்பில் சொல்லும் பொழுது இவர் வீரசைவராக சாக்தராகவும் இருக்கலாம். இவர் சியாமர்ச்சன தரங்கினி என்ற நூலில் ஆசிரியராகவும் இருக்கலாம் என்று குறித்துள்ளார். (365)

சகம் 1425-ச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் சமரபுங்கவ தீட்சிதர் என்பவருக்கு கைலாசம் என்ற ஊரில் வீடும், நிலம் கொடுத்த செய்தி உள்ளது. இக்கொடை முக்தி அடைந்த நரசநாயகரின் நினைவாக திருமலை நாயக்கர் மற்றும் ஈஸ்வர நாயக்கரால் கொடுக்கப்பட்டதாகும். சிறந்த வைணவ நூலாசிரியரான மஹாச்சாரியர் சமரபுங்கவர் என்பவரை தனது ஆசிரியராக கொண்டு இருந்தார். அந்த சமரபுங்கவ தீட்சிதராக இருக்கலாமோ என்று திரு. V. ரெங்காச்சாரி கருதுகிறார்.

சகம் 1436-ஐச் சேர்ந்த கல்வெட்டில் பிக்ஷாமடத்து விஸ்வேஸ்வர ஆச்சாரியர் குறிக்கப்படுவதை கண்ட திரு. V. ரெங்காச்சாரி (389) குறிப்பு எழுதியுள்ளார். நைடதத்திற்கு உரையாக விளங்கும் பதவாக்கியார்த்த பாஞ்சிகம் எழுதியவர்

விஸ்வேஸ்வர ஆச்சாரியர் என்பவர் ஆவார். விஸ்வேஸ்வர பண்டிதர் என்ற மற்றொரு பண்டிதர் சங்கரரின் வாக்கியவிருத்திக்கு உரை எழுதியவர். ஆனால் இவர்களில் இக்கல்வெட்டில் குறிக்கப்படும் விஸ்வேஸ்வர ஆச்சாரியரே என்று சொல்ல முடியுமா என்று தெரியவில்லை என்று அக்குறிப்பில் குறித்துள்ளார்.

கல்வெட்டுகளில் காசுகள்

தேவிகாபுரம் கல்வெட்டுகளில் பணம் என்ற செலாவணி குறிக்கப்பட்டுள்ளது. சகம் 1441-ம் ஆண்டு கல்வெட்டு 33½ பணம் வரி வருவாய் திருமலை உடைய நாயனார் கோயிலுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதை வழங்கியவர் படைவீட்டு கன்னடிய நாயக்கர் **(358)**

மல்லப்பரின் மகன் ஹரிஹர நாயக்கர் ஆவார். கிருஷ்ண தேவராயர் சகம் **1454(364)** கல்வெட்டு பட்டடை நூலாயம் என்று நெசவுதறிகள் மீது விதிக்கப்பட்ட வரி கோயிலுக்கு கொடுக்கப்பட்டதை குறிப்பிடும் பொழுது தறி ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 1½ பணமாக வசூலிக்கப்பட்டது என்று தெரிகிறது. கிருஷ்ண தேவராயர் சகம் **1452**-ஐச் சேர்ந்த கல்வெட்டு கோயில் தானத்தார் காமாட்சி ராவுத்தன் தாங்கலில் உழவு காணியாட்சி உரிமை அம்பலத்தாடி என்பவனுக்கு வழங்கி, அவன் ஆண்டுதோறும் **20** கலம் நெல்லும் **15** பணமும் வழங்க வேண்டும் என நிர்ணயித்துள்ளனர். இதைப் போல் அச்சுத தேவராயர் சகம் **1454**ச் சேர்ந்த கல்வெட்டில் கண்ணனூரில் உள்ள நிலத்துக்கு உழவுக்காணியாக ஆண்டுதோறும் **10** பணம் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது **(386)**.

1425-ஐச் சேர்ந்த கல்வெட்டு செம்பியமங்கலம் என்ற ஊர் நமசிவாய நாயக்கருக்கு உழவு காணியாட்சியாக வழங்கி முதல் ஐந்து ஆண்டுக்கு உண்டான பணமாக **10** பணமும் **10** கலம் நெல்லும் வழங்கவேண்டும். ஐந்து ஆண்டுக்கு பிறகு அதனைக் கூட்டி

ஆண்டுக்கு **50** பணமும், **50** கல நெல்லும் செலுத்த வேண்டும் என் நிர்ணயித்துள்ளனர். இது புதிதாக விவசாயத்திற்கு வரும்பொழுது தொடக்க ஆண்டு செலவு அதிகம் என்பதால் குறைவாக வரி, பணம், நெல் வசூலிக்கப்பட்டு பிறகு வரும் ஆண்டு செலவு குறைவாக வருவாய் அதிகமாக உள்ளதால் இப்பணம் காட்டுகிறது.

மேற்கண்ட கல்வெட்டுகளில் பணம் அறியப்படும் செய்திகள் மூலம் வணிகம் காரணமாக பணம் பெறுவது முக்கியமானதாக இருந்திருக்கிறது என்று அறியப்படுகிறது. துணி நெய்து வியாபாரம் செய்யும் நெசவாளர்கள் மீது பணம் வசூலிக்கப்பட்டது சரி என்றாலும், நிலம் உழுது பயிரிடும் விவசாயிகள் நெல் மட்டும் அல்லாது பணம் பெறப்பட்டுள்ளது வியப்பாக உள்ளது. இதற்கான காரணம் இக்கால கட்டத்தில் வணிக வளர்ச்சி காரணமாக விவசாயிகளிடம் நெல் அல்லது பணம் பெறப்பட்டுள்ளது. கோயில் களுக்கும் நெல் மட்டுமல்லாது பணமும் தேவைப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

கல்வெட்டுகளில் கைக்கோளர்

தேவிகாபுரம் கோயில் கல்வெட்டுகளில் முதன்மை பெற்று கோயிலின் நிர்வாகத்தை கவனித்து வந்தனர். ஒரு சில கல்வெட்டுகளில் இவர்கள் தொழிலைப் பற்றி தெரிவிக்கிறது. கல்வெட்டு எண் **364**ல் கிருஷ்ணய தேவமஹாராயர் காலத்தில் பட்டடை, நூலாயம் என்ற வரிகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். மேலும் இவர்கள் களப்பாளர், காலிங்கராயர், கொல்லாவிட்டார். கொற்றவ க்ஷேசப் என்ற நான்கு கோத்திரத்தார் இவர்களுக்கு காணியாட்சிக்காரர் என்று ஒரு கௌரவப்பட்டப் பெயரும் இருந்ததாக கல்வெட்டுகள் குறிப்பிடுகிறது.

கல்வெட்டுகளில் கொடைப்பொருட்கள்

தமிழகத்தில் சங்ககாலத்திலிருந்து பண்டமாற்று முறை மூலம் வணிகம் செய்து வந்தனர். பண்பாடு வளரவளர நாட்டில் அரசர்கள் தங்களது பெயரில் நாணயம் வெளியிட்டனர். மக்கள்

தங்களது செல்வாக்கை தெரியப்படுத்த பொதுக்காரியங்களுக்காக கொடைகள் வழங்கி வந்தார்கள். அவைகளில் ஒன்று கோயிலுக்குத் தேவையான பொருட்களையும், பணத்தையும் தானமாக அளிப்பதாகும்.

அத்தகைய கொடை பொருட்களாக விளக்குகள், விளக்கு எரிக்க நெய், இறைவனுக்கு அமுதுபடி நடத்த பணம், நிலங்கள் மேலும் பல்வேறு பொருட்கள் கொடுத்திருக்கிறார்கள்.

தேவிகாபுரம் கல்வெட்டுகளில் விளக்கு எரிக்க நிலங்கள், நெய், திருவிழாக்களுக்கு பணம் கொடுத்தச் செய்தியை தெரிவிக்கிறது. கல்வெட்டு எண் **351** கொண்டப்பள்ளியினர் விளக்கு எரிக்க நிலம் கொடுத்துள்ளனர். மேலும், **(க.எண். 360, 362)** முறையே திருவாதிரை, திருக்கார்த்தி திருவிழாக்காலங்களில் அதிகமாக பக்தர்கள் வந்து மலைமீது தீபம் ஏற்றி இறைவனை வணங்குவார்கள். அதற்காக நெய் கொடுக்கப்பட்டு வந்ததை குறிக்கிறது. இவ்வூர் கல்வெட்டுகளில் சாதாரண நாட்களில் விளக்கெரிக்க நெய் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து அந்நாளில் பொருளாதார நிலையை நாம் தெரிந்துகொள்ளலாம். விளக்கு எரிக்க மருதரைசர் படைவீட்டிலுள்ள கன்னடிய நாயக்கரின் மகள் இக்கோயிலுக்கு நெய் கொடுத்திருக்கிறாள். இதிலிருந்து கொடைகள் பெண்களும் அளித்துள்ளனர் என்பது அறிகிறோம்.

நொபுரு கரேஷமா

விஜயநகர கால தமிழ்க் கல்வெட்டுகளில் கோயில் நிலங்களை ஒரு சில குறிப்பிட்ட விதிகளின் கீழ் தனியார் மற்றும் நிறுவனங்களுக்கு குத்தகைவிட்டதை கல்வெட்டு மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த குத்தகை முறை விஜயநகர காலத்தில் குறிப்பிடத்தக்க பல்வேறு முறைகளில் இக்கோயில் நிலங்களை குத்தகைக்கு விட்டனர்.

தேவிகாபுரம் கோயில் கல்வெட்டுகளில் பதின்மூன்று கல்வெட்டுகள் குத்தகை பற்றி தெரிவிக்கின்றன. **(க.எண்.352, 354, 365, 372, 373, 375, 387** மற்றும் **389** இக்குறிப்பிட்ட கல்வெட்டுகளில்

கி.பி. **16**-ஆம் நூற்றாண்டின் **(கி.பி.1507-1548)** முதல் பாதியில் முப்பது வருடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. என்று ஜப்பானிய ஆய்வாளர் திரு. நோபுரு கரோஷிமா 'Towards New Formation' என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

கோயில் நிலங்களை பல்வேறு குழுக்கள் மற்றும் தனிநபர்கள் பெற்றிருந்தனர். அவர்கள் முறையே பன்மாஹேஸ்வரர், மாஹேஸ்வரர் தானத்தார், குருக்கள், கைக்கோள முதலிகள் மற்றும் தனியாரான ஈசான சிவாசாரியர், விஸ்வேஸ்வர சிவாசாரியர் ஆவார்கள், கடைசியில் குறிப்பிடப்பட்ட இருவரும் தேவிகாபுரம் பிக்ஷா மடத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் கோயில் வருவாய் நிர்வாகத்தை கவனிப்பவர்கள்.

பதின்மூன்று கல்வெட்டுகளில் **5** கல்வெட்டுகளில் நிலத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் நாயக்கர்கள், திருமலை நாயக்கர், சதாசிவ நாயக்கர், கன்னடிய நாயக்கர், நமசிவாய நாயக்கர் முதலானவர்கள். இச்சீர்மிகும் தேவிகாபுரத் கோயிலின் கல்வெட்டுகளில் கூறப்படும் நாயக்கர்கள் படைப்பிரிவின் தலைவர்களாக விளங்கும் கன்னடிய நாயக்கர்கள் ஆகும். அவர்கள் மருதரசர் படைவீட்டில் வசிப்பவர்கள். மருதரசர் என்பது உயர் அதிகாரிகளுக்கு வழங்கும் பட்டமாகும். படைவீடு என்பது இலக்கியங்களில் ஆயுதங்கள் இருக்கும் வீடு எனக் குறிப்பிடுகிறது. தற்பொழுது தேவிகாபுரத்திற்கு வடமேற்கில் **30** கி.மீ. தொலைவில் மருதரைசர் படைவீடு உள்ளது.

இக்கன்னடிய நாயக்கர்களில் ஒரு சிலர் மைய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளனர். நரசநாயகர் திருமலை நாயக்கரின் பிரதிநிதி ஆவார். அனைத்து குறுநில நாயக்கர்களும் நேரடியாக மைய அரசுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக கொண்டம நாயக்கர்கள் சேற்றுப்பட்டு ஊரில் வசிப்பவர்கள் மைய அரசுடன் தொடர்பில்லாமல் வாழ்ந்தனர். தேவிகாபுரம் கோயிலின் வருவாயை குறிப்பிட்ட இடையர் நிலத்தார்க்கும் காளத்தீசுவர நாயக்கரின் அனுமதியின் பேரில் வழங்கப்பட்டது.

மெய்க்கீர்த்திகள்

இரண்டாம் தேவராய மகாராயர்
(கி.பி. 1426 - 1452)

சுபமஸ்து
ஸ்வஸ்திஸ்ரீ
ஸ்ரீமன் மகாமண் டலேசுவர
அரி ராய விபாடன்
பாஷைக்கு தப்புவராயர் கண்டன்
மூவராயர கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
இந்துராய சுரத்தராண இராசாதிராசன்
இராச பரமேசுவரன்
பூர்வ தட்சிண பச்சிம உத்தர
சமுத்திராதிபதி ஸ்ரீவீர
கசவேட்டை கண்டருளிய பிரதாப
இம்மடி தேவராய மகாராயர்
பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற
சகாப்தம் 1373-இன் மேல் செல்லா நின்ற
பிரபாவதி வருஷத்து மீன ஞாயிற்று
அமரபட்சத்து நவமியும் வியாழக்கிழமையும்
பெற்ற திருவோணத்து நாள் . . . .

மல்லிகார்ச்சன தேவராய மகாராயர்
(கி.பி. 1447 - 1465)

ஸ்வஸ்திஸ்ரீ
மண்டல மகாமண்டலீசுரன்
அரிராய விபாடன்
பாஷைக்குத தப்புவராயர் கண்டன்
மூவராயர் கண்டன்
இராசாதிராச இராய பரமேசுரன்
ஸ்ரீவீரப் பிரதாப கசவேட்டை கண்டருளிய
தேவராய மகாராயர் குமாரர்
மல்லிகார்ச்சுண தேவ மகாராயர்
பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற
சகாத்தம் 1378 இன் மேல் செல்லா நின்ற
தாதுவருஷத்து மகர ஞாயிற்றுஅமரபட்சத்து
துவிதிகையும் புதவாரமும் பெற்ற மகத்துநாள் . . . .

கிருஷ்ண தேவ மகாராயர்
(கி.பி. 1509 - 1530)

ஸ்வஸ்திஸ்ரீ
நமஸ்துங்க சிரச்சும்பி
சந்திரசாமர சாரவே
திரைலோக்கிய நகராரம்ப
மூலஸ்தம்பாய சம்பவே
ஸ்வஸ்திஸ்ரீ
விசயாப்யுதய சாலிவான சகாப்தம்
1439 இதின் மேல் செல்லா நின்ற ஈசுவர
சம்வத்சரம் . . . .
ஸ்ரீமன் மகாமண்டலேசுவர அரிராய விபாடன்
பாஷைக்கு தப்புவராயர கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
பூர்வதட்சிண பச்சிம உத்தர சதுர்ச் சமுத்திராதிபதி
ஸ்ரீவீரப்பிரதாப ஸ்ரீவீர கிருஷ்ணதேவ மகாராயர் . . .
. . . திருவுளம் பற்றின தர்ம சாசன ராயசம்

வீர அச்சுத தேவ மகாராயர்
(கி.பி. 1529 - 1542)

ஸ்வஸ்திஸ்ரீ
ஸ்ரீமன்மகா ராசாதிராச ராச பரமேசுர
ஸ்ரீவீரப் பிரதாப மூவராயர கண்ட
அரிராய விபாட அஷ்டதிக்கு ராய
மனோபயங்கர பூர்வ தட்சிண பச்சிம
சமுத்திராதிசுர ஸ்ரீவீர அச்சுதைய தேவ
மாகராயர் பிருதிவிராச்சியம் பண்ணியருளா நின்ற
சகாத்தம் 1451 இன் மேல் செல்லா நின்ற விரோதி
சம்வத்சரத்து விருச்சிக ஞாயிற்று அமர பட்சத்து
பஞ்சமியிலே ....

சதாசிவ தேவமகாராயர்
(கி.பி. 1542 - 1570)

மெய்கீர்த்தி - 1

சேதுவந்யே சகஸ்யாப்தே
ஸ்ரீமான் வேங்கட தேசிக
சிந்தாமணி மகாக்கிராமம் ஸ்ரீரங்கேசாயிய தத்வான்
சுபமஸ்து; ஸ்வஸ்திஸ்ரீ
ஸ்ரீமன் மகா இரா .... இராச இராச பரமேசுர
ஸ்ரீவீரப்பிரதாப ஸ்ரீமன் சதாசிவ இராச
மகா இராயர் பிருதிவி இராச்சியம் பண்ணி
அருளாநின்ற சகாப்தம் 1467 இதன் மேல்
செல்லாநின்ற விசுவாவசு சம்வத்சரத்து பால்குண
மாசத்து, சுக்லபட்சத்து, சப்தமியும் சோம
வாரமும் பெற்ற ரோகினி நட்சத்திரத்து ....

மெய்கீர்த்தி - 2

சுபமஸ்து
ஸ்வஸ்திஸ்ரீ

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர மேதினி மீசுர
கண்ட கட்டாரி சாளுவ அரிராய விபாடன்
பாஷைக்குத் தப்புவ ராயர கண்டன்
மூவராயர கண்டன்
கண்டநாட கொண்டு கொண்டநாடு கொடாதான்
துலுக்கர் தளவிபாடன் துலக்கர் மோகந்தவிர்த்தான்
பூர்வ தட்சின பச்சிம உத்தர
சத்த சமுத்திராதிபதி
எம்மண்டலமுங் கொண்டருளிய
இராசாதிராச ராச பரமேசுவர
ஸ்ரீவீரப்பிரதாப ஸ்ரீசதாசிவ தேவ மகாராயர்
பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சகாத்தம்
1471 இன் மேல் செல்லா நின்ற சவுமிய வருடம்
ஆனி மாதம் 13-ஆம் தேத சோமவாரமும் பிரதமையும்
பெற்ற மூல நட்சத்திரத்து நாள் .....

மெய்கீர்த்தி - 3

சுபமஸ்து
ஸ்வஸ்திஸ்ரீ
ஸ்ரீமன் மகாமண்டலேசுவர
மேதினி மீசரகண்ட கடாரி
சாளுவ அரிராயவிபாடன்
பாஷைக்கு தப்புவராயர் கண்டன்
மூவராய கண்டன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
நவகோடி நாராயணன் சதாசிவ மகாராயர்
பிருதிவி ராச்சியம் பண்ணி யருளா நின்ற
சகாத்தம் 1483 இதன் மேல் செல்லா நின்ற
துன்மதி வருஷம் மகர ஞாயிற்றுப் பூர்வபட்சத்து
தசமியும் ரோகிணியும் பெற்ற புதவாரத்து நாள்

மல்லிகார்ச்சுன தேவ மகாராயர்

ஸ்வஸ்திஸ்ரீ
ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரிராய தளவிபாடன்
பாஷைக்குத் தப்புவராயர கண்டன்
மூவராயர கண்டன் கண்டர கண்டன்
கண்டாயப் பிரதாபன் கடாரிச் சாளுவன்
கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்
ஒருபரி கொண்டு திரள்பரி வேட்டும் உபய குலோத்துங்கன்
எம்மண்டலங் கொண்டு ஈழமுந் திலைகொண்ட
இராசாதிராசன் ராசகம்பீரன்
இராச நாரணகுலதிலகன் இராசாக்கள் தம்பிரான்
கோட்டத்து மன்னியர் கண்டன்
சோரி மண்ணியர் சூரியன் சேடிமன்னியர் காலாந்தகன்
தொண்டை மண்டல ஸ்தாபனா சாரியன்
சோழமண்டல ப்ரதிஷ்டாப னாசாரியன்
மறுமன்னியர் கோடாரி குறுமன்னியர் கோளரி
துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந்தவிர்த்தான்
அரிதளவிபாடன் அரியர் மோகந்தவிர்த்தான்
தொட்டியர் துளவிபாடன் தொட்டியர் மோகந்தவிர்த்தான்
தக்கார்க்குத் தக்கன் தர்க்க விநோதன்
தண்டுவார் மிண்டன் சகலகுனாபிராமன்
துங்காபி ராமன் துங்க குரவந்தன்
சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசயன்
பரிக்கு நகுலன் கொடைக்கு கர்ணன்
பொறுமைக்குத் தருமர் பூருவ தட்சிண
பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி
அசுவபதி கசபதி தனபதி நரபதி
நரவேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுன தேவமகாராயர்

அரசர் வரலாறு

கிருஷ்ண தேவராயர் (கி.பி. 1509 ~ 1529)

விஜயநகரத்திற்கு சாளுவ வம்சத்திற்கு பிறகு துளுவ வம்சம் பட்டத்திற்கு வந்தது. இந்த வம்சத்தில் கிருஷ்ண தேவராயர் பட்டத்திற்கு கி.பி.1509-ம் வருடம் முடிசூட்டிக் கொண்டார் விஜயநகர அரசர்களில் மிகவும் புகழ்பெற்று விளங்கினார்.

இவர் பட்டத்திற்கு வந்தவுடன் இராச்சியத்திலிருந்த அதிகாரிகளான சாமாந்தர்கள் பிரதிநிதிகள் முதலிய எல்லோரையும் தன்னை வணங்கி தன் ஆணைப்படி நடக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். இதனால் விஜயநகரப் பேரரசு மிக உன்னத நிலையை அடைந்தது. இவரது அரசானது வடக்கே கிருஷ்ணா நதியும் தெற்கில் திக்விஜயம் செய்து குமரி வரை ஆட்சி செய்தார்.

கிருஷ்ண தேவராயர் வெற்றி வீரன் மட்டுமல்ல சிறந்த கல்வி மானும் ஆவான். அவனது அவையினை அஷ்டதிக்கஜங்கள் என்ற புகழ் பெற்ற எட்டு கவிராஜர்கள் அலங்கரித்தனர்.

கோயில்களில் கோபுரங்கள், மதிற்சுவர்கள் மற்றும் பிரமாண்டமான மண்டபங்களை அமைத்தான். புகழ்பெற்ற இவன் கி.பி.1529-ம் ஆண்டு இயற்கை எய்தினான்.

அச்சுதராயன் (கி.பி.1530~ 1542)

கிருஷ்ண தேவராயருக்கு ஆண் சந்ததியில்லை. இரண்டு பெண்களை அளியராமராயனும், அவன் தம்பி திருமலைராயனும் மணந்த கொண்டார்கள். இரண்டு இளைய தம்பிகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் அச்சுதராயன் கி.பி.1529-ல் பட்டம் வகித்து கி.பி.1542 வரை ஆண்டான். அவன் சக்தியற்றவன். எனவே முகம்மதியர்கள் இராயச்சூரை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

சதாசிவராயன் (கி.பி.1542– 1570)

அச்சுதனனுக்கு பிறகு அவன் மகன் வெங்கடாத்திரி பட்டத்திற்கு வந்ததும் கொல்லப்பட்டான். பிறகு அச்சுதன் தம்பி சீரங்கராயன் மகன் சதாசிவன் பட்டம் வகித்தான். அவன் சிறுவன், சக்தியற்றவன் பெரும்பாலும் அரண்மனையிலேயே அடைப்பட்டு இருந்தான். கிருஷ்ண தேவராயனுடைய மருமகன் அளியராமராயன் கி.பி.1565 வரைக்கும் மற்ற மருமகன் திருமலைராயன் அதன் பின்னரும் அமைச்சர்களாக இருந்து அரசு புரிந்து வந்தார்கள்.

இவ்வரசன் காலத்தில்தான் கி.பி.1565-ல் தலைக்கோட்டை போர் நடந்து அளியராமராயன் கொலையுண்டான் விஜயநகரம் முகம்மதியரால் அழிக்கப்பட்டது. அரசன் பெனுகொண்டைக்கு ஓடிவிட்டான். திருமலைராயன் அவனை அழைத்துச் சென்றான். கி.பி.1570-ல் சதாசிவன் இறந்துபோக திருமலையே அரசனானான். துளுவ வம்சம் முடிவடைந்து, ஆற வீடு வம்சத்தைச் சார்ந்தவர்கள் ஆளத் தொடங்கினார்கள்.

Summary of Inscription

351 On the west and south walls of the central shrine in the temple at Devikapuram. Dynasty : Vijaya Nagar. King: Deva Raya, Maha Raya-II. Saka 139 Hevilambi. Tamil. Gift of land to the temple of Tirumala Udaiya nayanar at Devakkapuram by Rayappa udaiya of Kondapalli and others.

352 On the south wall of the first prakara of the same temple. Vijaya Nagar. King Krishnadeva Maharaya. Saka 1442 Bahudhanya, Makaraiba . Friday Hasta.

The King bears saluva littles Register a lease of certain temple lands to Tirumala Nayaka, one of the Kannadaiya Nayaka, in Marudarasara Padaividu, by the temple. Treasurer. Isana - siva charya of bhiksha matha of Devakapura of the southern bank of seyyaru which was a village near Rajagambiram malai in Murugamangalap - parru, a sub-division of Melkundra nadu in the district of Palgundra - Kottam in Jayangonda Chola Mandalam.

353 On the same wall. Vijaya Naygar. Krishnadeva maharaya. Saka 1441 Bahudhanya Karkataka, sudi, 13 Tuesday Asvini sidhayoga. Tamil. Registerd the right of cultivation of temple lands (ulavu - kaniyakshi) granted to a certain Sadasiva nayaka of Marudaraisar Padaividu.

354 On the same wall. Vijaya nagar. Saluva Imadirayadeva Maharaya s/o. Narasingarayadeva Maharaya. Saka 1429 Raktakshi (wrong) Mina ba-di., 10 Friday U ttiram. Tamil.

Registers a smilar right granted to a resident of Devakapuram by the temple Trustee, gurukkal Visvesura Sivacharya of Bhiksha - math and others.

355 On the same wall. Saluva. Salva nadirayadeva Maharayas Nara Singarayadeva Maharaya.Sakk, 1422 Raudri, Kas katak su.di 7 Friday Attam. Tamil. Gift of land in the devadana village Sembiyamangalam, a house at Devakkapuram and food in the temple to two persons who had to sing in the temple. The grant was made by Tirumala Nayaka and Iswara Nayaka sons of Ettappa nayaka for the merit of Narasu - Nayaka.

356 On the same wall. Vijaya Nagar. Achudaraya Maharaya S/o Narasa Nayaka Udaiyar. Saka 1455 vikriti (wrong) singa su.di.10 Friday Uttiram.

The King has a long list of biridus Records that Kalattisura, Nayaka son of Tirumalai - Nayaka, of Marudaraisar Padaividu was granted the right of supervision etc., in the temple and the enjoyment of certain lands at Murugamangalam from Isana Sivasharya of Bhiksha matha, the trustees and the Kaikola mudalis of the Tirumalai udaya Nayanar temple Devakapuram. Devakapuram by Haira Nayaka s/o Mallappa Nayaka of the Kannadiya - Nayaka living at Marudarasar Padaividu for the merit of the king and Tirumalai Nayaka.

359 On the same wall. Vijayanagara. Krishnadeva Maharaya. Saka 1418 Dunmati. Gift land at Murugamangalam by Tirumalai nayaka and Isvar Nayaka for providing offerings incense etc., at festivals.

360 Same wall. Vijayanagara. Krishnadeva Maharaya. Subhakrit. Records that a certain Naiyniappa nayaka

provided ghee for the festival of the Tiruvadiri in the same temple in oder to secure merit for Adaippam Mallappa Nayaka.

361 Do. Vijayanagara. Virapratapa Krishnadeva Maharaya. Saka 1443, Vikrama, Kartigai, Ekadasi, Monday. Records that Sadasiva - Nayaka provided ghee for lamps during the festival of Tirukkarthigai in the same temple for the merit of the chief (sivam) Tirumalainayaka.

362 On the north wall of the same prakara. Vijaya Nagara. Krishnadeva Maharaya. Saka 144 vrisha. Gift of ghee for the same festival by the daughter of the Kannadiya chief Devappudaiyan at Marudaraisar - Padaividu.

363 On the same wall. Vijayanagara. Mahamandalesvara Krishnadeva - maharaya. Saka 1447 Sarvajit. Gift of ghee for lamps by Saianga natha the (Maniyakaran) of Idailturai Mallappa-Nayaka of Marudaraisar - Padaividu.

364 On the same wall. Vijayanagara. Virupratapa Krishnadeva Maharaya. Saka 1454. The King bears sauva titles Grant of tax pattadai, nulayam at 1½ Panam per annum each loom, to the temple, for the merit of Krishna Kalatisivara nayaka.

365 On the same wall. Vijayanagara. Virupratapa Krishnadeva Maharaya Saka 1446. Chitrabhamu. Jai, su, si, 10 Uttiram, sat. Gift of land and a house in the devedana village Sorappundi to Vadamalaiyar one of the pandits (Vidvan) of Arruvanpadi, by Visvesvaram Sivacharya of the Bhiksha - Matha at Devakkapuram, the kaikola, - mudalis and other trustees of the temple, The record is stated be have been engraved on the Kumudappadai of the temple.

366 On the same wall. Vijayanagara. Virapratapar krishnadeva Maharaya Saka 1444, Vikrama, Kumbha su, di full moon Friday, Uttiram. Gift of land and two houses to a certain Attavanai Venkappa who secured for the temple the village of Sorappundi as a gift from the king.

367 on the same wall. Vijayanagara. Virupratapa Krishnadeva Maharaya Saka 1452. saivadhari, kartigai. sudi 10 uttiram Saturday. Registers that the trustees of the temple granted to a certain Ambalattadi the right cultivating (ulavu-kani) the devadana village of Kamakshi Ravuttan - tangal and fixed 15 panam and 20 kalams of paddy to be paid to the temple every year.

368 On the same wall. Vijayanagara. Virapratapa Krishnadeva Maharaya Saka 144[4] Vikrama Kumba su, si. 10 Saturday punarpusum. Gift of the village Uvattur with its hamlet Taraipadi to the same temple by a certain Ammaiyappa nayanar as a tirunamakkani on receiving this Isana - Sivacharya of the Bhiksha - matha and ofter trustees of the temple made the same donar the lease of the village and presented a house.

369 On the same wall. Vijayanagara. Vir-pra- Krishnadeva - maharaya saka 1453 Virushi, Chithirai, su di 10 Attam. Registers the permanent lease (Ulavu - Kaniyakshi) of Devaragam - pattadai to a Kamadiya - Nayaka of Gangapuram in Pangala nadu.

370 On the same wall. Vijayanagara Krishnadeva - Maharaya. Saka 1450 Sarvodharai, Ani su-di Uttram, Monday. Gift of ghee for a lamp.

371 On the same wall. Vijayanagara Krishnadeva maharaya. Saka 1443. vikrama. Gift of ghee for a lamp by a lady of Marudaraisar - Padividu.

372 on the same wall. Vijayanagara. Vir-Pra. Krishnadeva - Maharaya. Saka 1431. Sukla, Makara, su, di,10 Sunday,Tiruvonam. Gift of the hamlet Singaya ravuttan - tangal near Kailayam as a Kaniyakshi, to a certain Tiruppani Vasavana - udaiyar, by Tirumalai nayaka s/o Ettapppa Nayaka and others, The donee was evidently an officers in charge of the works connected with the temple.

373 On the south wall of the second prakara of the same temple. Vijayanagara. Achuttayyadeva - Maharaya s/o Virapratrapa, Narasa Nayaka. Saka 1452, Vikriti, Makara, sudi,13 Sunday pusam. Sale, by the trustees of the Devikapuram temple of land of Suvarappundi to a temple of Marudaraisur Padaividu at Vada kaiyilayam which was the tirunamakkani village of Tirumalai - Udaiyar.

374 On the south same wall. Vijayanagara. Achuttayyadeva - Maharaya s/o Virapratrapa, Narasa Nayaka. Saka 1454 vikriti (wrong) panguni sudi 11 Monday. Registers that certain families of shepherds at Serruppattu were dedicated to the temple as tiruvilakkukudi by Kondama - nayaka, after securing their services with the permission of governing the Padaivittu siramai.

375 On the same wall. Vijayanagara. Achuttayya deva - Maharaya s/o Virapratapa, Natesa nayaka. Saka 1452, Vikriti, simha, sudi 14 Sunday Tiravonam. Registers that the trustees of the temple leased out some lands at Piramanampakkam to Viramahesuram mallikayuma - Ayyan - matha at Sembiyamangalam as uluvu kaniyakshi for maintaining the worship of the god Tirumala udaiya Nayanar at Vasantha mandapam.

376 On the same wall. Vijayanagar. Achuttayyadeva - maharya

s/o Virapratapa, Natesa Nayaka. Sarvasi, Masi 14. Records that Mallappa - Nayaka and Sevvappa Nayaka appointed certain shepherds to supply ghee for lamps to the same temple in order to secure merit to King Achyutadeva - Maharaya.

377 On the same wall. Vijayanagar. Virapratapa Achyatayadeva maharaya, Saka 1452 Vikriti (simla) su, di 11 Friday Anusam. Gift of the land by the resident of Mamanambakkam for the maitenance of (worship in) the Vasantha mandapam of god Tirumala Udaiyar for the merit of swami - Tirumalai nayaka, Immadi Tirumalai nayaka and Kalatisuru nayaka.

378 On the same wall. Vijayanagar. Sadasivaraya. Saka 1[4] 71 Saumya. Damaged. Record the supply of ghee for lamps to the same temple.

379 On the same wall. Vijayanager. Achutayyadeva - Maharaya Saka 1457. Gift of ghee by certain shepherds.

380 On the west wall of the same prakara. Vijayanagar. Virappratapa A[chyu]tayyadeva - Maharaya Saka 1455 Hevilambi (wrong) subhakrit. masi 17. Gift of ghee for lamps.

381 On the same wall. Vijayanagara. A.D.M. Gift of ghee for lamps by Nainappa - nayaka, agent of Adaippam Mallappa nayaka, for the merit of his master.

382 On the north wall of the same prakara. Vijayanagar. Vir. pr.Achu. maharaya. Saka 1458 Manmatha, mena, su, di, 10 Friday. Tiruvonam. Damaged and Fragmentry.

383 On the same wall. Vijayanagar. Vir. pr.2Achu. Maharaya. Saka 1464, subhakrit. Damaged. Gift of miney (?) for the

maintaining the festival of Uttirat tirunal in the same temple Nainiyappa - nayaka, agent of Adaippam Mallapa nayaka for the merit of the Sevvappa nayaka.

384 On the Same wall. Vijayanagar. Vir. pra. Ach. Maharaya. Saka 1456 Jayakanni su, di, 10 Monday. Gift of Money for conducting a festival in the temple by certain resident of Sembiyamangalam.

385 On the same wall. Vijayanagar . Ach. Maha.Saka 1454 Virodhi (wrong). Gift of ghee for a lamp.

386 On the same wall. Vijayanagar. Ach, maha Saka 1454. Nan dana of Serruppattu granted land at Kannanur as ulavukkani and arranged to panam to be paid anunally to the temple.

387 On the same wall. Vijayanagar. Sudasiva maharaya. Saka 1470 Sumya [wrong] rishabha su.di. full moon Monday, Tiruvonam. Damaged. Gift of some temple land as kaniyakshi to private individuals.

388 On the same wall. Vijayanagar. Venkata deva - Maharaya s/o Tirumalaideva Maharaya. Saka 155[2] sukala jai 21 day monday pusam. Registers that a certain Naiyaniappa. Nayaka s/o Krishnappa Nayaka, improved a certain land by constructing a bank near it and by digging wells. He made it cultivable and presented the same to the temple.

389 On the east wall of Nataraja shrine in the same temple. Vijayanagar. Krishnadeva Maharaya. Sata 143[6] Srimukha, Karkkataka su, di, 10 Friday Utiram. Gift of the village Sembiya mangalam as a ulavu kaniyakshi to Namasivaya nayaka of Marudaraisar Padaividu. He was to pay 10 panam and 10 kalams of pady in the first year; 50 panam and 150

kalams of pady had to be paid the trustees included Visvesvara sivacharya of Bhiksha - matha.

390 On the same wall. Vijayanagar. Saha 1437 Vibhava [miskate for bhava] Jyeshtha. su,di 12, Saturday visaka. Damaged seems to records a gift to a brahmana by the Vinayagar of the temple (koil-kelvi) Visvesvara Sivacharya and Tirumalai nayaka.

391 On the west wall of the kitchen in the same temple Vijayanagar. Sadasiva - maharaya. Saka 1468, parabhava, vrichika, Friday,Tiruvonam. Gift of ghee of the temple by Surappa Nayaka for the merit of Krishnappa - Nayaka.

392 On the same wall. Vijayanagar. Achyutadeva - Maharaya Saka 145[3] vikriti. Damaged.

393 On the second gopura of the same temple right of entrance. Vijayanagar. Achu - Maharaya. Saka 145 [3] Vikriti Grantha.

One sanskrit verse in praise of Visvesvara charya devotee is he is stated to have been the fore most devotee of Sirigrisvara (in the god on the sacred hill).

394 In the same place. Vijayanagar. Achu - Maharaya. Saka 145[1] virodhi. Tamil. Damaged. seems to reward a gift by Mallappa nayaka, One of the adaippam servents of the king.

395 On the or in the same place saluva. Immadi Narasima - Tammayadeva Maharaya. Saka 1426 Raktashi Kanni ba. di 1 wed. Asvani (= wed., 25, sep. 1504). Gift of land in the village of Sembiyanmangalam together with money and houses to be a private individual who worshiped in the temples of both the god and goddess by Tirumalai nayaga, agent of Narasa Nayaka. Mentiond Ettappa nayaka, the father of the donar.

396 In the same place Saluva. s/o saluva, Narasingaharaya - Maharaya. Saka 1426, Rakstashi, kumbha, ba, di, 14 Sunday Tiruvonam Sivaratiri.

Gift of the village Manalpakkam alias Somasipuram south of Seyyaru in Kachar Nadu a sub-division of Palakunra-kottam in Muruganangala parru, by Samarapungam Dikshita to the temples of the god and goddess. The village was originally granted to him for agnihotra (ie keeping the sacred five) by Tirumalai nayaka.

397 In the same place. Saluva. s/o Saluva - Narasingaharaya - maharaya Kali 4990 saka 1811 virodhi and A.D.1889, Nov. 27.

Abhinavapurnapriya Srinivasa Rao Sabeb Taghirdar of Arni, wisly performed the ashtabandhana kumbabhisheka of Kanakagirisvara, on this day.

398 On the same gopaura, left of entrance. Tanjore, Maratha. Julajaraya saheb [s/o] Maharaja saheb Serofeji. Krishaya phalguna, badi 10 Monday Marathi. Conservation of the image of the goddesses which perhaps had become shaley. On its pedestal.

399 on the same place. Vijayanagara. Sriangadeva - Maharaya [ie Rang -II] salas 14991, Isvara, kumba 28 ba, di, Sunday dwitya, Hasta. Tamil. Damaged. Registers a gift made to the temple for the merit of Agashyappa nayaka of Velur, mentions also Bommu - nayaka of Velur.

400 In the same place. Vijayanagara. Srirangadeva - Maharaya [ie Ranga --] Saka 1499, Isvara, kumba, 28 ba, di Sunday.dwitya, Hasta. Tamil. Grantha. Record that Isanasiva - Yogindra the head of the Golaki - matha.

401 In the same place. Srirangadeva - Maharaya [ie Ranga --] Saka 1401 vilambi, Mithaina. su, di.7, Monday, Uttirattadi. Subhayoga and haraja - karana Tamil. Registers that a number of maid - servants provided for the temples of Tirumalai nayanar and periya - Nachchiyar, by Ettappa - nayaka for the merit of Isvara - nayaka.

402 in the same place. Saluva. Narasmigaraya. Udaiyar Saka 140[1] Vilambi, ruthuma su, di, 7 Monday, Uttirattadi. Subhayoga (Haraja) karana. Tamil. Unfinished.


403 On the first gopura to the same temple. Vijayanagar. Sadasiva maharaya. Saka 1493 Iahaya (wrong) Damaged and unfinished. seems to register a gift for the merit of the Krishnappa Nayar and Era Bomma Nayaka of Velur.


404 On the same Gopura. Vijayanayar. Sadasiva Maharaya. Vijayanagara. Records the levy taxes on looms for the merit of him Gama - Nayaka, culture Ekambara-nayaka [s/o] Ramayappa - Nayaka was governing.


405 on the east wall of the Ganesa temple of the fresh water tank in the same village. Vijayanagar. Sadasiva Maharaya. Vijaya. Records that the temple and the tank were the gift of one of the merchants (nagarattar of the Vasiya vaniyam setti.

406 On the gopura of the Kanakagrisvara temple on the hill in the same village. Vijayanagara. Kali 4990 Saka 1811, Virodhi and A.D. 1889 Nov. 27. Copy no 397 above.


நிழற்படங்கள்













தூண் சிற்பங்கள்





தூண் சிற்பங்கள்





தூண் சிற்பங்கள்









தூண் சிற்பங்கள்





தூண் சிற்பங்கள்





தூண் சிற்பங்கள்





தூண் சிற்பங்கள்







தூண் சிற்பங்கள்










கரண் சிற்பங்கள்





கரண் சிற்பங்கள்

தூண் சிற்பங்கள்





புடைப்புச் சிற்பம்





விஜயநகரர் அரசு சின்னம்

நவகண்ட சிற்பம்



